

க்ரைம் நாவல்
107
நவம்பர் 23 - 2004 விலை ரூ. 5
ராஜேஷ்குமார்
POLICE
நாவல் திருவிழா 4
தொட்டவனை விட்டதில்லை!

# கோயமுத்தூரிலிருந்து

அதிரடி நாவல்கள் தந்த ஆனந்தத்தில் குளித்துக் கொண்டிருக்கும் அன்பு மிக்க வாசக நெஞ்சங்களுக்கு என் நெஞ்சார்ந்த வணக்கமும் நன்றியும். டெலிபோன் மூலமாகவும் கடிதம் மூலமாகவும் பாராட்டுக்களை அள்ளித் தெளித்துக் கொண்டிருக்கும் வாசகர்களுக்கு நடுவில் சில வாசகர்களிடமிருந்து வரும் கடிதங்கள் வருத்தத்தில் மனதைக் கனக்க வைத்து விடுகின்றன. இதோ சாம்பிளுக்கு ஒரு கடிதம்.

அன்புள்ள ராஜேஷ்குமார் அண்ணன் அவர்களுக்கு

## ஃபேக்ஸ்



(தொடர்ச்சி 96 ஆம் பக்கத்தில்)

க்ரைம் நாவல்

நவம்பர் 23 - 2004

107

## எடிட்டர் ஏரியா

வெற்றிகரமான நாலாவது வாரம்... இது...

இந்த நாவலை அண்ணன் 1987 -ல் 'மாலைமதி' இதழில் எழுதினார்.

இதை எழுதியனுப்பிய இரண்டு தினங்களில் குமுதத்தில் இருந்து போன் - உடன் புறப்பட்டு வரும்படி.

அண்ணனுக்கு ஒரே டென்ஷன். 'எதற்கு உடனே வரச் சொல்றாங்க. சரி என்னன்னுதான் போய் பார்த்து வருவோம்' என திடீரென புறப்பட்டு வந்தவர், காலை 'ஹோட்டல் பார்கவி'யில் இருந்து எனக்கு போன் செய்தார்.

'தம்பி... குமுதத்தில் இருந்து போன். பத்து மணிக்கு போகணும். நேரா லாட்ஜுக்கு வந்துடுங்க' என்றார்.



நானும் அண்ணனும் குமுதம் ஆபீஸுக்கு சென்றோம். என்னை உள்ளே அழைத்தார். நான், 'நீங்க மட்டும் போய்ட்டு வாங்க. நான் வரவேற்பு அறையில் இருக்கேன்' என்றேன். அவரும் எடிட்டோரியல் பக்கம் சென்றார்.

நான் அமர்ந்து இருந்த அறைக்கு நேராக பத்திரிகையுலக சூப்பர்மேன் எஸ்.ஏ.பி அவர்கள் [illegible]ந்து சென்று

(2 ஆம் அட்டை தொடர்ச்சி) 

கணபதிபாளையம் நால்ரோட்டிலிருந்து வாசகர் பெ.வேலுசாமி எழுதும் மடல்.

தங்களின் படைப்புக்கள் பலவற்றைப் படித்து வியப்பில் ஆழ்ந்துள்ளேன். உங்களின் கதைக் கருக்கள் உண்மை நிகழ்ச்சிகளை பிரதிபலிப்பதை உணர்ந்து ஆனந்தம் கொள்கிறேன். சமீபத்தில் க்ரைம் நாவல் ஸ்பெஷலில் வெளிவந்த ஒரு நாவல் (வானத்தில் கோலமிட்டு) என் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட நாவல். நான் ஐந்து மாதங்களுக்கு முன்பு எனது திருமணத்துக்காக பெண் பார்க்கச் சென்றிருந்தேன்.

இயற்கையிலேயே நான் ஒல்லியான தேகமும் மாநிறமும் உடையவன். சுமாரான அழகு. ஒல்லியான உடம்பின் காரணமாக தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு டாக்டர்களிடம் வைத்தியம் பார்த்ததும் உண்டு. இருந்தும் பயனில்லை. இந்நிலையில் எனக்கும் மணப் பெண்ணுக்கும் ஒருவரையொருவர் பிடித்துப் போகவே, பெரியவர்கள் முன்னிலையில் சம்மதத்தைத் தெரிவித்துக் கொண்டோம்.

இருந்தும் என் மனதில் நிம்மதியற்ற ஒரு குழப்பம். அந்தப் பெண்ணை சில வாரங்களுக்குப் பிறகு தனியாக சந்தித்து என் உடம்பு ஒல்லியாக இருப்பதைப் பற்றி தாழ்வு மனப்பான்மையோடு எடுத்துச் சொன்னேன். அதற்கு அந்தப் பெண், 'இதெல்லாம் ஒரு பிரச்னையே கிடையாது' என்று சொல்லி மறுபடியும் 'சம்மதம்' என்று சொன்னாள். மனதில் புதிய நம்பிக்கையோடு, பல ஆசைக்கனவுகளோடு திருமண ஏற்பாடுகளைக் கவனித்தேன்.

கல்யாணம் நெருங்கிவரும் வேளையில் திடீரென்று அந்தப் பெண் என்னைச் சந்தித்து 'உன்னை எனக்குப் பிடிக்கவில்லை' என்று முகத்தில் அடித்தாற்போல் சொல்லி விட்டாள். அதோடு நின்றிருந்தால் பரவாயில்லை. என் ஒல்லியான உடம்பைக் காரணம் காட்டி, என்னுடன் பெண் பார்க்க வந்த என் நண்பனைப்

(தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்)

(96 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிடித்து இருப்பதாகக் கூறியபோது என் இதயம் நொறுங்கிப் போய்விட்டது.

எந்தவிதமான கெட்ட பழக்கங்களும் இல்லாத என்னை அந்தப் பெண் நிராகரித்தது என் மனதை ரணமாக்கி விட்டது. இப்படிப்பட்ட பெண்கள் பாடம் கற்றுக் கொள்ளக் கூடிய அளவுக்கு தங்களின் 'வானத்தில் கோலமிட்டு' நாவல் அமைந்து இருந்தது.

என்னை நிராகரித்த அந்தப் பெண் படிக்காதவள். அவளுக்குப் படிக்கத் தெரிந்து இருந்தால் கண்டிப்பாக 'வானத்தில் கோலமிட்டு' நாவலைக் கொடுத்து படிக்கச் சொல்லியிருப்பேன்.

கடிதம் இத்தோடு முடிந்து போயிருந்தது.

வாசகர் பெ.வேலுசாமி அவர்களே! கவலைப்படாதீர்கள்...! உங்களுடைய மனம் அழகான மனம். அந்த மனதுக்கு ஏற்றபடி மணமகள் அமைவாள். எனக்கு திருமண அழைப்பிதழ் அனுப்பி வையுங்கள். உங்களுக்கும் உங்கள் வருங்கால மனைவிக்கும் என் அட்வான்ஸ் வாழ்த்துக்கள்.

இனி அதிரடி நாவல் வரிசையில் 30.11.2004 அன்று வெளிவரப் போகும் நாவல் எது என்று பார்ப்போம்.

## அனு ஓர் ஆச்சர்யம்!

நாவலைப் படித்துவிட்டு உங்களால் நிச்சயம் 'சும்மா' இருக்க முடியாது. 1) எனக்கோ, தம்பி அசோகனுக்கோ கடிதம் எழுதுவீர்கள். அல்லது 2) டெலிபோன் செய்வீர்கள்.

ஏனென்றால் உங்களால் பாராட்டாமல் இருக்கவே முடியாது. மற்றவை அடுத்த ஸ்பெஷலில்.

மீண்டும் என் வணக்கம்.

மிக்க அன்புடன்,
ராஜேஷ்குமார்.




காலை நேரப் பரபரப்பான நிமிஷங்களில் இருந்தாள் சுசித்ரா. நெற்றியில் சின்ன சைஸில் சிங்கார் இட்டுக் கொண்டு, சமையலறைக்கு ஓடினாள். டிபன் பாக்சில்

50 ஆண்டுகளுக்கு முன்னர் உளவுப் பணியில் ஈடுபட்ட ஆண், பெண் வேவுகாரர்களுக்கு தற்போதுள்ள வசதிகள் கிடையாது. விஞ்ஞான சாதனங்களும் இன்றுள்ளதைப் போல அன்று அவ்வளவாகக் கிடையாது. அதனால் வேவுப் பணியில் ஈடுபடும் மனிதர்களின் அறிவாற்றல், துணிவு, சாகசம் ஆகியவற்றையே அந்தக் கால உளவு நிறுவனங்கள் பெரிதும் நம்பியிருந்தன. உளவுப் பணிக்குப்



பெண்களின் அழகும், சாகசமும் பெரிதும் உதவும் என்பதால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பல்நாட்டு அரசுகளும் இப்பணியில் அழகும் அறிவும் கொண்ட பெண்களைப் பயன்படுத்தி வந்திருக்கின்றன. பல பெரிய அரசியல் மாற்றங்கள் பெண்களின் அழகாலும் அவர்களின் சாதுர்யமான செயல்களாலும் நிகழ்த்தப்பட்டவைதான். சிலவற்றை வரலாறு குறித்து வைத்திருக்கிறது. சிலவற்றை வரலாறு ஒளித்து வைத்திருக்கிறது.

1

சாப்பாட்டை அடைத்தாள். கையில் படிந்திருந்த டைம் ஸ்டார் ரிஸ்ட் வாட்சில் முள் இயக்கத்தைப் பார்த்தாள். பெரிய முள் சின்ன முள் கூட்டு முயற்சியில் அப்போதைய நேரம் 6.35 என்றது. வினாடி முள் அதை 6.36 ஆக்க அவசரமாய் நொண்டிக் கொண்டிருந்தது.

இருபத்துநாலு வயது சுசித்ரா பார்க்கிறவர்களின் கண்களில் ஐஸ் கட்டியை வைக்கிற மாதிரி குளிர்ச்சியான தோற்றம் காட்டினாள். அரை டஜன் வருஷங்களாய் சத்யா கிளினிக்கில் நர்ஸ் உத்தியோகம் பார்க்கிறாள். முகத்தில் குடும்பப் பொறுப்பு ஒரு சுமை மாதிரி தெரிந்தது.

மூன்று பெண்களுக்கு மூத்தவளாய் - ஆண் பிள்ளை இல்லாத அந்த வீட்டில் பிறந்து விட்டதில் குடும்ப நிர்வாகம் பெரும் பாரமாய் அவள் தலையில் அழுத்திக் கொண்டிருந்தது.

பக்கத்து அறைக்கு ஓடினாள்.

பீரோவைத் திறந்து, நர்ஸ் யூனிபார்மை ஒயர் பேக்கில் திணித்துக் கொண்ட போது -

அம்மா ஜானகியின் இருமல் சத்தம் காதைத் [illegible]



ஜானகி கணவன் இறந்து போன நாளில் இருமிக் கொண்டே படுக்கையில் படுத்தவள் இன்றைக்கு வரைக்கும் - படுக்கையை விட்டு எழவில்லை. டாக்டர் அவளை ஒவ்வொரு தடவை செக் - அப் செய்கிற போதும் - புதுப்புது வியாதி பெயரைச் சொல்லி, பிரிஸ்கிரிப்ஷன் எழுதிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

இன்னும் தூக்க அத்தியாயத்திலிருந்து கலையாமல் பாயில் உருண்டு கிடக்கிற கடைசித் தங்கைகள் நந்தினி, தேவியைக் கடந்தாள். அலமாரியில் இருந்த ஜானகியின் பிரிஸ்கிரிப்ஷன் தாளை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

சூரியன் கிழக்கு வாசலில் தலையை நீட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தத் தெருவிலிருந்த எல்லா வீட்டு வாசல்களிலும் கோலம் பனிச்சென்று பிறந்து இருந்தது.

மெயின் சாலையைத் தொட்டு ஐந்து நிமிஷங்கள் நடந்தாள்.

இடது பக்கம் சரிந்து போன பை - பாஸ் பாதையில் நுழைந்து அந்தப் பாதையின் மறு ஓரத்திலிருந்த கிளினிக்கைத் தொட்ட போது நேரம் 7.10.

சத்யா நர்சிங்ஹோம் என்ற பித்தளை எழுத்துக்கள் போர்டிகோவின் நெற்றியில் துருத்திக் கொண்டு தெரிந்தது. அடிக்கிற வெய்யிலில் பட்டு மினுமினுத்தது.

பிரவேச கேட்டில் நுழைந்தாள்.

ஸ்டாஃப் ரூமுக்குப் போய் டிரெஸ் மாற்றிக் கொண்டு நுழைந்தபோது, சக நர்ஸ் வசந்தா உள்ளே வந்தாள். வெள்ளை யானைக் குட்டி மாதிரி யூனிஃபார்முக்குள் பிதுங்கினாள்.

''சுசி...''

''என்ன?''

''மொதல்ல... குட்மார்னிங்...''

''குட்மார்னிங்...''

''ரெண்டாவது... இன்னிக்கு நீ லேட்டா?''

''ஆமா. பத்து நிமிஷம் லேட்...''

''மூணாவது... சீஃப் டாக்டர் உன்னைக்

கூப்பிட்டார்.''

திக்கென நிமிர்ந்தாள்,

''வந்துட்டாரா?''

''அப்பவே வந்துட்டார்...''

சுசித்ராவுக்கு உதறலெடுக்க ஆரம்பித்தது.

தாமத வருகை சீஃப் டாக்டர் ரஞ்சனுக்குத் துளிகூடப் பிடிக்காத விஷயம். காலையில் வந்தவுடன் ஒரு காய்ச்சலை வாங்க வேண்டும்.

வசந்தா, சுசித்ரா திட்டு வாங்கப் போகிற சந்தோஷத்தில் சிரித்தாள்.

''போ, போ. அர்ச்சனைதான்...!''

சுசித்ரா ஸ்டாஃப் ரூமை விட்டு வெளியே வந்தாள். நெஞ்சுக்குள் பயக் குருவி கத்த, டாக்டர் ரஞ்சனின் அறையை நோக்கிப் போனாள். அறைக்கதவைத் தொட்டு ப்ளைவுட் பரப்பில் சப்தித்தாள்.

'டொக்... டொக்... டொக்...'

''கமின்,...''

கதவைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே போனாள்.

விசாலமான அறை. ஷெல்ஃபில் மருந்து சங்கதிகள்.

அதே ஷெல்ஃபில் மேல் பிரிவில் புத்தகங்கள். தடிமன் தடிமனான புத்தகங்கள்.

பக்கவாட்டில் மேஜை தெரிந்தது. அதற்குப் பின்னால் இருக்கையில் ரஞ்சன் தெரிந்தார். நாற்பதாவது வயதை போன மாதம் முடித்திருந்தார். நீள்வட்ட முகம். முன் நெற்றியில் பிரகாசமான வழுக்கை. பேப்பர் வெயிட்டை உருட்டிக் கொண்டிருந்தார்.

சுசித்ரா மேஜையருகே வந்து நின்றாள்.

நெஞ்சுக்குள் திக் - திக்கென்று திக்கிக் கொண்டிருந்தது இதயம். உதட்டை ஈரப்படுத்திக் கொண்டு சொன்னாள்.

''குட்மார்னிங் ஸார்...''

''குட்மார்னிங்...''

சொன்ன ரஞ்சன் ஒரு நீள ஃபாரின் சிகரெட்டை உதட்டுக்குக் கொடுத்து லைட்டரின் உதவியால் உயிரூட்டிக் கொண்டு, அதன் நீளத்தைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபட ஆரம்பித்தார். சுசித்ராவுக்கு எதிர் இருக்கையை காட்டினார்.



''உட்காருங்க மிஸ் சுசித்ரா.''

பயந்து கொண்டே வந்த சுசித்ராவுக்கு ஆச்சரியமாயிருந்தது. இருக்கையில் உட்கார்ந்தாள்.

''மிஸ் சுசித்ரா...'' புகை விட்டுக்கொண்டே கூப்பிட்டார்.

''ஸார்?''

''உங்க ஃபேமிலியில் மொத்தம் எத்தனை பேர்?''

புருவத்தைச் சுருக்கினாள்.

''என்னைச் சேர்த்து அஞ்சுபேர் ஸார்...''

''அப்பா?''

''இல்லை...''

''நீங்கதான் மூத்த பெண்ணா?''

''ஆமா ஸார்...''

''ஸோ, நீங்கதான் அந்த ஃபேமிலியை நிர்வகிச்சுட்டு வர்றீங்க?''

அவள் தலையாட்டினாள்.

''உங்களுக்கு இந்தச் சம்பளம் போதாதுன்னு நான் நினைக்கிறேன். நீங்க என்ன நினைக்கிறீங்க?''

குழப்பம் அவளைக் குளிப்பாட்டியது.

''எதற்காக இதையெல்லாம் கேட்கிறார்?''

யோசனையோடு அவரை ஏறிட்டாள். ''கொஞ்சம் பற்றாக்குறைதான் சார்...''

''மிஸ் சுசித்ரா, உங்களுக்கு பேமெண்ட் அதிகமா வேணுமானா நான் சொல்றபடி நடக்க முடியுமா?''

இன்னும் குழப்பம் குறையாமல் அவரைப் பார்த்தாள். ரஞ்சன் தொடர்ந்தார்.

''சண்டிகார்ல இருக்கிற நம்ம கிளினிக்குக்கு ஒரு ஸ்டாஃப் நர்ஸ் வேண்டியிருக்கு. நீங்க எக்ஸ்பீரியன்ஸ்ட் ஹேண்ட். புதுசா கால்ஃபார் பண்ணி இன்டர்வ்யூ வச்சு வேற நர்ஸ் செலக்ட் பண்றதைவிட உங்களை அங்கே அனுப்பினா பெட்டர்னு எம்மனசுக்கு பட்டது. அங்கே போறதுல உங்களுக்கு ஏதாவது பிராப்ளம் இருக்கா..?''

சுசித்ரா சின்ன சந்தோஷ அதிர்வு வாங்கி, யோசிப்போடு அவரைப் பார்த்தாள்.

"என்ன... பிராப்ளமா?"

மனசு பரபரவென்று யோசித்தது.

'ஃபேமிலி... மொத்தமாக அங்கே போய்விடலாம். பிரேமாவுக்குக் காலேஜ் - நந்தினி, தேவி படிப்பு? அதுதான் பிராப்ளம்.

இந்த அகாடமிக் இயர் முடிய இன்னும் ஆறு மாதங்கள் இருக்கிறது. ஆறு மாதம் கழித்து இந்த போஸ்டிங் கிடைத்தால், அது நடக்கிற காரியமல்ல.' யோசித்தாள்.

ரஞ்சன் சிகரெட்டைக் கரைத்துக் கொண்டு அவளின் பதிலுக்காகக் காத்திருந்தார்.

"நோ பிராப்ளம் சார்... நான் சண்டிகார் போறேன்..."

அங்கே அவளுக்காகக் காத்துக் கொண்டிருக்கிற விபரீதம் தெரியாமல் சந்தோஷத்தோடு தலையசைத்து ஒப்புக் கொண்டாள் சுசித்ரா.

ரயில்வே ஸ்டேஷன் அந்த ராத்திரி நேர பத்து மணியில் மிதமான பரபரப்போடு இருந்தது. ஜனங்கள் ஹிக்கின்பாதம்ஸை மொய்த்திருந்தார்கள். சில பேர் லக்கேஜ்களோடு அலைந்து கொண்டிருந்தார்கள்.

இரண்டாவது பிளாட்ஃபாரத்தின் லேடீஸ் வெயிட்டிங் ரூம் அருகே - சுசித்ரா, ஜானகி, பிரேமா, நந்தினி, தேவி அரை வட்டமாய் நின்றிருந்தார்கள்.

ஜானகி அடிக்கடி சேலைத் தலைப்பால் கண்களை ஒற்றிக் கொண்டே இருந்தாள்.

"எனக்கென்னமோ இஷ்டமேயில்லடி... நீ அவ்வளவு தூரம் போறது..."

"சும்மா இப்படிச் சொல்லிட்டிருக்காதே. நான் அமெரிக்காவிலே போய் சம்பாதிச்சாலும் நம்ம குடும்பத்துக்கு பத்தாது. என்ன ஆறு மாசம் கழிச்சு, நீங்க எல்லாருமே அங்கே வந்துடப் போறீங்க..."

"அம்மா கிடக்கறா... நீ தைரியமாப் போயிட்டு வாக்கா."

ஜானகி குறுக்கிட்டாள்.

"டிரெயின் எத்தனை மணிக்கு?"

"பத்து இருபத்தஞ்சுக்கு..."



"எவ்வளவு நேரம் இங்கே நிக்கும்?"

"அஞ்சு நிமிஷம்..."

"சண்டிகார்ல நாகராஜ் ஸாரோட அட்ரஸைக் கண்டுபிடிச்சு போயிடுவியா?"

"அதெல்லாம் போயிடுவேன். நீ கவலைப்படாதே."

அவள் சொன்ன அதே நேரம் -

அந்த அறிவிப்பு ஸ்பீக்கர் வழியே கொட்டியது.

**"பயணிகள் கவனத்துக்கு! ஜம்முதாவி செல்கிற ஹிம்சாகர் எக்ஸ்பிரஸ் இன்னும் சில நிமிஷங்களில் இரண்டாவது பிளாட்ஃபாரத்துக்கு வந்து சேரும்."**

அறிவிப்பு முடிந்திருந்தபோது, தூரத்தில் ஹெட்லைட் வெளிச்சம் தெரிந்தது. ஹெட்லைட் வெளிச்ச அளவு பெரிதாகிக் கொண்டே வந்து தண்டவாளத்தை அரைத்துக் கொண்டு வந்து நின்றது எக்ஸ்பிரஸ்.

சுசித்ரா ரெண்டு சூட்கேஸைக் கையில் அள்ளிக் கொண்டு ஏ கம்பார்ட்மெண்டை மோப்பம் பிடித்து நுழைந்து இருக்கையைத் தேடிப் பிடித்தாள். ஜன்னலோர இருக்கை.

பிரேமாவும், நந்தினியும் பின்னாலேயே மற்ற லக்கேஜ்களை சுமந்து வந்திருந்தார்கள். அவள் இருக்கைக்கடியில் பரப்பி வைத்துவிட்டுக் கீழே இறங்கி பிளாட்ஃபாரத்துக்கு வந்தார்கள்.

ஜானகி ஜன்னல் வழியாகக் கூப்பிட்டாள்: "சுசி..."

"என்னம்மா..?"

"போய்ச் சேர்ந்ததும் பக்கத்து வீட்டுக்கு எஸ்.டி.டி பண்ணு..."

"ம்..."

"நாகராஜ் ஸார் வீட்டுக்குத் தொந்தரவில்லாம இருந்துக்க."

"சரி..."

"உடம்பைப் பார்த்துக்க..."

"ம்..."

அவள் சொல்லச் சொல்ல -

கார்டு விசில் கொடுத்து, எக்ஸ்பிரஸ்ஸை நகர்த்த, பிளாட்ஃபாரத்தில் நின்றிருந்த ஜானகி, பிரேமா, நந்தினி,

தேவி எல்லோருமே சர்ர்ரென்று பின்னால் போனார்கள். டிரெயின் வேகம் பிடித்தது.

சுசித்ரா லக்கேஜ்களை ஒழுங்குபடுத்த ஆரம்பித்தாள்.

இரண்டு சூட்கேஸ்களை சீட்டுக்கடியில் தள்ளிவிட்டு - ஏர்பேக்கை வைக்க முயற்சித்தபோது -

''மே ஐ ஹெல்ப் யூ?'' - குரல் கேட்டு நிமிர்ந்தாள்.

எதிர் இருக்கையிலிருந்த இளைஞன் அகலமாய்ப் புன்னகை காட்டினான். நிழல்கள் ரவியின் உயரத்தையும், நடிகர் மோகனின் சாயலையும் வாங்கியிருந்தான். காலைக் கவ்வியிருந்த ஜீன்ஸ் இஷ்டத்துக்கு வெளுத்துக் கிடந்தது. காட்டன் சர்ட்டை இன் பண்ணியிருந்தான்.

''நோ. தேங்க்ஸ்...''

சொல்லிவிட்டு மறுபடியும் ஏர்பேக்கைத் தள்ளுவதில் மும்முரமானாள் சுசித்ரா. முடியவில்லை.

அவனாகவே இருக்கையிலிருந்தும் எழுந்து வந்தான்.

''உங்களால முடியாது. ஒரு நிமிஷம் விலகிக்கங்க...''

சூட்கேஸைச் சரிவர நகர்த்திக் கொடுத்து ஏர்பேக்கை உள்ளே வைத்துத் தந்தான்.

சுசித்ராவின் 'தாங்க்யூ'வை புன்னகையோடு ஏற்றுக் கொண்டே, பின்னால் நகர்ந்து அவனின் சீட்டில் உட்கார்ந்தான்.

சுசித்ரா கையிலிருந்த ஹேண்ட்பேக்கைப் பிரித்து, உள்ளிருந்த 'குடும்ப நாவ'லை எடுத்துக் கொண்டாள். நான்கு பக்கங்களில் பார்வை ஓட்டியிருப்பாள். அந்த இளைஞன் கூப்பிட்டான்.

''மிஸ்...'' நிமிர்ந்தாள். கண்ணில் கேள்விக் குறி அமர்த்தினாள்.

''வேற புக் ஏதாவது வெச்சிருக்கீங்களா?''

கேட்டவனை எரிச்சலோடு பார்த்தாள். 'பேச வேண்டும் என்பதற்காகக் கேட்கிறானா? படிப்பதில் ஆர்வம் உள்ளவன் புக் வாங்கி வைத்துக் கொள்வதுதானே?'

அவள் பதில் சொல்வதற்குள் இன்னொரு புன்னகை வினியோகித்துவிட்டு, குனிந்து எதையோ பிரித்து ஒரு மாத நாவலை வெளியே எடுத்தான்.



''நான் உலவக்கோடுலர்ந்து வர்றேன்... கோயமுத்தூர் வர்றதுக்குள்ளே இந்த புக்கைப் படிச்சு முடிச்சுட்டேன். நீங்க படிக்கறதுன்னா படிங்க...''

''ஸாரி. வேறே புக் இல்லை!''

''இட்ஸ் ஓகே. இந்தாங்க இதைப் படிங்க.''

உதட்டைச் சுழித்து 'தொந்தரவு பிடித்த ஆளாயிருக்கிறான்!' என்கிற மாதிரி அவனைப் பார்த்தாள். அசிரத்தையாய் அவன் நீட்டிய புத்தகத்தை வாங்கிப் பக்கத்தில் வைத்துக் கொண்டாள்.

''உங்க பேரை நான் தெரிஞ்சுக்கலாமா?'' புருவத்தை நெரித்துக் கொண்டு சுசித்ரா அவனைப் பார்க்க -

அவன் - ''அ'யம் சரவணன்,'' என்றான் வலிய.

''படிக்கச் சொல்லி புக்ஸ் கொடுத்தீங்க. இப்ப நான் படிக்கறதா? இல்லை பேசறதா?''

''பரவாயில்லை. தமாஷா பேசறீங்க!''

எரிச்சலோடு பார்த்தாள். 'நான் சொல்வது இவனுக்கு தமாஷாகப் படுகிறதா?' அவன் விடாமல் கேட்டான்.

''உங்க பேரை நீங்க சொல்லலையே?''

''சுசித்ரா...'' என்றாள்.

''மிஸ் சுசித்ரா...'' என்று நிறுத்தினவன் -

''மிஸ் தானே?'' என்றான் புன்னகையோடு.

தலையசைத்தாள். ''இப்பவே படிக்க ஆரம்பிச்சீங்கன்னா காட்பாடி போறதுக்குள்ளே முடிஞ்சிடும். நீங்க எதுவரைக்கும் பயணம்?''

''அம்பாலா...''

''அம்பாலா சிட்டியா, இல்லே கன்டோன்மெண்ட்டா?''

சளசளவென்று பேசுகிற அவனை எரிச்சலோடு பார்த்தாள்.

''ஸாரி மிஸ்டர். ஐ வான்ட் டு ஸ்லீப்...''

'குடும்ப நாவ'லை பட்டென்று மூடி வைத்துவிட்டு, படுக்கையை விரிக்க ஆரம்பித்தாள். மேல் பர்த்துக்குரிய அந்த பஞ்சாபிப் பெண்ணும் ஆணும் அவர்கள் பாஷையில் என்னவோ சொல்லிக்கொண்டே மேலே தாவினார்கள்.

சரவணனும் படுக்கையை விரித்தான். நேரம் பதினொன்றைத் தாண்டியிருக்க, சுசித்ரா தலைக்குக் கீழே கையைக் கொடுத்துக் கொண்டு கண் அசர ஆரம்பித்தாள்.

நிமிஷங்கள் கரைந்தன. எக்ஸ்பிரஸ் ஸ்டேஷன்களைக் கடந்து கொண்டிருந்தது.

திடீரென்று - ''யூ ராஸ்கல்!'' - என்ற சரவணனின் சத்தலான குரல் கேட்டு விழித்துக் கொண்டாள் சுசித்ரா. தலையைத் திருப்பிப் பார்த்தாள்.

சரவணனின் இடது கை ஒரு ஆசாமியின் சர்ட் காலரை பிடித்திருந்தது. வலது கை ரப்ரப்பென்று மாறி மாறி அந்த ஆசாமியின் கன்னத்தில் அறைகளை விளியோகித்துக் கொண்டிருந்தது.

மாவீரன் லெனினுக்குப் பிறகு சோவியத் பேரரசைக் கட்டியாண்டவன் ஜோசப் ஸ்டாலின். ஸ்டாலினின் ஆட்சிக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களை -சிந்திப்பவர்களை, இனம் கண்டு அடியோடு அழிப்பதற்காக என்.கே.வி.டி. எனும் ரகசியப் போலீஸ் படை அமைக்கப்பட்டிருந்தது. அதன் தலைவனாக ஸ்டாலினின் வலதுகரமான லவ்ரெண்டி பெரியா என்பவன் இருந்தான். ஸ்டாலின் அரசை விமர்சித்தவர்களை சித்ரவதை செய்து பெரியா கொன்று குவித்ததின் கணக்கு பல லட்சங்கள் என்கின்றனர் மேலை நாட்டு வரலாற்று ஆசிரியாகள். பெரியாவின் ரகசிய போலீஸ் தலைமையகத்தில் ஒரு பாதாள அறைதான் சித்ரவதைக் கூடம். அங்கே உலக வரலாற்றில் எத்தனை வகை சித்ரவதைகள் உள்ளனவோ- அனைத்தும் அரங்கேற்றப் படும். பெரியாவின் ரகசிய போலீஸ் படையில் மயக்கும் அழகும் இளமையும் கொண்ட நடாஷா என்கிற பேரழகியும் இருந்தாள். அவள்...(அடுத்த அத்தியாயத்தில் பாருங்கள்)



2

சுசித்ரா குபீரென்று பெர்த்திலிருந்தும் கீழே இறங்கினாள். யாரோ லைட்டைப் போட்டார்கள். கும்பல் கசமுசா குரலில் கத்திக் கொண்டே சேர ஆரம்பித்தது.

சுசித்ராவின் பார்வை -

சரவணனுக்கும் அந்த ஆசாமிக்கும் இடையே - பாய, அவர்களுக்கு நடுவே அவளின் பெரிய அரிஸ்டோகிராட் சூட்கேஸ்.



'அது எப்படி அங்கே போயிற்று?'

''அடுத்த ஸ்டேஷன் எது?'' என்றார் ஒருவர்.

''காட்பாடி...''

''இழுத்துட்டு வாங்க, இவனைப் போலீஸ்ல கொடுக்கணும்...''

அந்த ஆசாமியை அவர்கள் இழுத்துப் போக, சரவணன் கடைசியாய்க் கோபத்தோடு ஒரு பலமான அடியை அவன் கடைவாயோரம் விளியோகித்துத் திரும்பினான். குனிந்து தன் காலடியிலிருந்த சுசித்ராவின் சூட்கேஸைக் கையிலெடுத்துக் கொண்டு அவளருகே வந்தான்.

''இந்தாங்க உங்க சூட்கேஸ்...''

சுசித்ரா தயக்கத்தோடு கேட்டாள்.

''என்னாச்சு?''

''சேலம் தாண்டினதும் ஏறியிருப்பான் போலிருக்கு. எல்லாரும் தூங்கிட்டிருக்கறப்போ உங்க சூட்கேஸ்ல கைவச்சான். நான் பார்த்துட்டேன்.''

''தேங்க்யூ...''

''ட்ரெயின் ஜர்னில கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும். அதிகமா ஜர்னி பண்ண மாட்டீங்க போலிருக்கு?''

''ஆமா...''

''அம்பாலா போறீங்களே... அம்பாலா சிட்டியா... இல்ல கன்டோன்மெண்ட்டா?''

''அம்பாலா கன்டோன்மெண்ட்!''

''அம்பாலாவில் எங்கே இருக்கீங்க?''

''நான் அம்பாலா இல்லை. அங்கிருந்து சண்டிகார் போகணும்.''

''சண்டிகார்?''

''ஆமா...''

''அங்கே எதுக்காகப் போறீங்க?''

''அங்கே போஸ்டிங் கிடைச்சிருக்கு...''

''என்ன பண்ணிட்டிருக்கீங்க?''

சுசித்ரா சொன்னாள்.

''இஸிட்? எந்த கிளினிக்?''

''சத்யா நர்சிங்ஹோம்...''

''குவார்ட்டர்ஸ் குடுத்திருக்காங்களா?''

''இல்லே...''

''அப்புறம் எங்கே தங்குவீங்க?''

''ஃபேமிலி ஃபிரண்டு வீடு இருக்கு...''

''அச்சா! எந்த செக்டார்?''

''ஃபார்ட்டி செவன்...!''

ஆச்சரியப்பட்டான் அவன்.

''டோர் நம்பர்?''

''554 - A.''

திகைப்பு சரவணனைப் பெருவாரியாக அலம்பியது.

''வாட் எ ப்ளெஸன்ட் சர்ப்ரைஸ்! '554 -A எனக்கு எதிர்வீடுதான்!'' என்றான்.

இரண்டு நாள் பயண அலுப்பு இரண்டு பேர் முகத்திலும் அப்பியிருந்தது. நேரம் ராத்திரி 12.30 ஐ தடவிக் கொண்டிருக்க, எக்ஸ்பிரஸ் தடக் தடக் இரைச்சலோடு நடுக்காட்டில் ஓடிக் கொண்டிருந்தது. நியூ டெல்லி இரயில்வே ஸ்டேஷன் தாண்டினதுமே குளிர் ஊசியாய் உடம்பைத் தாக்க ஆரம்பித்திருக்க, இரண்டு பேருமே ஸ்வெட்டர்களுக்குத் தங்களைக் கொடுத்திருந்தார்கள். லக்கேஜ்களையெல்லாம் நகர்த்தி வைத்துக் கொண்டு இறங்குவதற்குத் தயாராகி இருந்தார்கள்.

''அடுத்தது அம்பாலாதானா?'' சரவணனைப் பார்த்து சுசித்ரா கேட்டாள்.

சரவணன் 'இல்லை' என்று தலையசைத்தான்.

''குருக்ஷேத்ரான்னு ஒரு ஸ்டேஷன். பட், இந்த எக்ஸ்பிரஸ் அங்கே நிக்காது.''

''குருக்ஷேத்ராவிலிருந்து எவ்வளவு தூரம்?''

''கால்மணி நேர ஜர்னி...''

அவன் சொல்லச் சொல்ல -

ஃப்ளோரஸன்ட் வெளிச்சத்தைக் கம்பார்ட்



மென்ட்டுக்குள் இறைத்து விட்டது அந்த குருக்ஷேத்ரா ரயில்வே ஸ்டேஷன். எக்ஸ்பிரஸ் சிக்னலுக்காகக் கொஞ்சம் வேகம் தடைபட்டுவிட்டு, தொடர்ந்து பயணமானது.

''மிட் நைட்லதான் போய்ச் சேருமா?''

''நோ... நோ... ஏழரை மணிக்குப் போய்ச் சேர வேண்டிய டிரெய்ன். இன்னிக்கு அஞ்சு மணி நேரம் லேட்.''

''அம்பாலா பெரிய ஊரா?''

''கோயமுத்தூர் அளவுக்கு இருக்கும்.''

சரவணன் சொன்ன மாதிரியே சரியாய் பதினைந்து நிமிஷப் பயணத்தில் அம்பாலா ரெயில்வே ஸ்டேஷன் வந்தது. பெரிய ஸ்டேஷனாய்த் தெரிந்தது. லக்கேஜ்களை எடுத்து வைக்க உதவி பண்ணினான் சரவணன்.

''இங்கே எவ்வளவு நேரம் டிரெய்ன் நிக்கும்?''

''அஞ்சு நிமிஷம்...''

அந்த ராத்திரி நேரத்தில் ஸ்டேஷன் ஜனக் குப்பையில்லாமல் துப்புரவாய் இருந்தது. கொஞ்ச தூரத்தில் கம்பி வலை போட்ட வெயிட்டிங் ஹால் தெரிந்தது. வலது பக்கம் ஒரு தள்ளு வண்டி பூரியையும் டீயையும் வினியோகம் பண்ண ஆளில்லாமல் நின்றிருந்தது.

''மிஸ்டர் சரவணன்...''

''சொல்லுங்க...''

''நீங்க இல்லேன்னா நிச்சயம் கஷ்டம்தான்... இந்த நடுராத்திரி இங்கே வந்து இறங்கி, நான் என்ன பண்ண முடியும்?''

''கொஞ்சம் கஷ்டம்தான்!''

''இங்கிருந்து சண்டிகாருக்கு எப்படிப் போகணும்? பை பஸ்ஸா..?''

''பஸ் ஸ்டாண்ட் ஸ்டேஷனுக்கு எதிர்லதான் இருக்கு. ஒரு நிமிஷம் இருங்க... நான் இப்ப வந்துடறேன்...''

''எங்க போறீங்க..?''

''ஒரு மணிக்கு லோக்கல் டிரெயின் ஒண்ணு வரும். விசாரிச்சுட்டு வர்றேன்...''

அவன் தூரத்திலிருந்த கவுண்ட்டரை நோக்கிட் போனான். சுசித்ராவுக்கு ஸ்வெட்டரைத் தாண்டி குளி ஜில்லிட்டது. புடவையை நன்றாக இழுத்துப் போர்த்தி கொண்டாள். துப்பாக்கி ஏந்தின இரண்டு மிலிடெ சர்தார்ஜிகள் ஹிந்தியில் சம்பாஷித்துக் கொண்டே அவளைக் கடந்து போனார்கள். சுசித்ரா நகம் கடித்தாள் புது இடம், புது பாஷை. வயிற்றுக்குள் பயமாய் இறங்கியது.

மூன்று நிமிஷம். சரவணன் திரும்பி வந்தான்.

''என்னாச்சு..?''

உதட்டைப் பிதுக்கினான் சரவணன்.

''அந்த டிரெயின் த்ரீ ஹவர்ஸ் லேட்டாம் மூணரைக்குத்தான் வருமாம்.''

''இனி எப்படி... பஸ்தானா..?''

''ஆமா...''

லக்கேஜ்களைச் சுமந்தார்கள். படிகளில் ஏறி ஸ்டேஷனின் முன்பக்கம் வந்தார்கள். லக்கேஜ்களைப் பார்த்து நெருங்கி வந்த போர்ட்டர்களை, தேவையில்லை என்று ஒதுக்கினார்கள்.

சொற்ப தொலைவில் பஸ் ஷ்டாண்ட் தெரிந்தது.

இரண்டு மூன்று சீட்களே காலியாகியிருந்த அந்த பஸ்ஸில் ஏறி, இருக்கையில் நிரம்பினார்கள். தலைப்பாகை சுற்றியிருந்த கண்டக்டரிடம் இந்தியில், ''இரண்டு ட்ரிப்யூன்...'' என்றான் சரவணன்.

சுசித்ரா பணத்தை நீட்டுவதற்குள் அவனே பணம் செலுத்தி டிக்கெட்டை வாங்கினான்.

''ட்ரிப்யூனா..?'' சுசித்ரா கேட்டாள்.

''ம்... அதான் சண்டிகார்ல நாம இறங்க வேண்டிய இடம். அங்கிருந்து செக்டார் ஃபார்டி செவனுக்குப் போக ரிக்ஷா ஃபெசிலிடிஸ் இருக்கு...''

பஸ் நகர்ந்தது. இரண்டு பக்கமும் ஏராளமாய் யூகலிப்டஸ் மரங்களை வைத்திருந்த சாலையில் டிராபிக் தடங்கல் இல்லாமல் விர்ர்ரென்று போனது பஸ். நாற்பத்தைந்து நிமிஷப் பயண முடிவில் - ஒரு செக் போஸ்ட்டைக் கடந்து சண்டிகார் சிட்டி லிமிட்டுக்குள்



நுழைந்தது.

இரண்டு திருப்பங்கள் திரும்பியதும் பஸ் நின்றது.

''மிஸ் சுசித்ரா, நாம இறங்க வேண்டிய ஸ்டாப்பிங் வந்தாச்சு.''

இரண்டு பேரும் பஸ்ஸிலிருந்து உதிர்ந்ததும், பஸ் டீஸல் புகையை அடர்த்தியாய் வெளித் தள்ளிவிட்டு, நகர்ந்து போனது.

''இதான் ட்ரிப்யூனா..?''

''ஆமாம். ட்ரிப்யூன்கிறது ஒரு டெய்லி நியூஸ் பேப்பர். அதான் பத்திரிகை ஆபீஸ் கட்டிடம்...''

அவன் காட்டின பக்கம் தலையில் நியான் வெளிச்ச எழுத்துக்கள் TRIBUNE என்று ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டிருக்கிற அந்தப் பெரிய கட்டிடம் தெரிந்தது.

எதிர்ச்சாரியிலிருந்த ஆட்டோ ரிக்ஷா ஸ்டாண்டுக்குப் போனான், தூக்கம் தழுவியிருந்த டிரைவரைத் தட்டி எழுப்பி -

''ஆட்டோ ஆயேகா?'' என்றான்.

டிரைவர் தடபுடலாய் விழித்துக் கொண்டு கண்ணைக் கசக்கினான். ''கிதர் ஜானா ஹை?''

''ஃபைவ் ஃபைவ் ஃபோர் ஏ. செக்டார் ஃபார்டி செவன்...''

''ஹாங் ஜி...''

ஒரு பீடியை அவசரமாகப் பற்றவைத்துக் கொண்டு, கிக்கரை உதைத்து ஸ்டார்ட் செய்தான். ஹெட்லைட், பளீரென்று சாலையில் விழுந்து சிரித்தது.

சாலையின் எதிர்ப் பக்கம் லக்கேஜோடு நின்றிருந்த சுசித்ராவிடம் ஆட்டோவைக் கொண்டு போய் நிறுத்தி லக்கேஜ்களை ஆட்டோவுக்கு மாற்றிக் கொண்டு -

பளிங்குத் தரை மாதிரி இருந்த சுத்தமான நகர வீதியில் குலுங்கலில்லாமல் பயணப்பட்டார்கள்.

ஐந்தே நிமிஷம் -

கட்டி கட்டியாய் இருந்த ஹவுசிங் யூனிட் மாதிரியான கட்டிடங்கள் ஊடே ஊர்ந்து, கதவு ஐந்நூற்றி ஐம்பத்தியது நாலுக்கு முன்னால் இரைச்சலை நிறுத்திக் கொண்டது

ஆட்டோ.

''உங்க வீடு எது மிஸ்டர் சரவணன்?''

''எதிர் வீடுதான். டோர் நம்பர் ஃபைவ் ட்வெண்ட்டி...'' ஆட்டோவை அனுப்பிவிட்டு அவன் கூட வந்தான். அந்த பிளாக்கின் உள்ளே பிரவேசித்து, மேல் ஃப்ளோருக்கான படிகளில் தடதடத்தார்கள்.

''நீங்க வர்றது இவங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது. மூணு நாள் முன்னாடிதான் என்னோட சண்டிகார் விஜயம் முடிவாச்சு. ரெண்டு நாள் ஜர்னி போயிடுச்சி. தெரியப்படுத்த முடியலை...''

''இந்த வீட்ல இருக்கிறவர் பேர் என்னான்னு சொன்னீங்க, நாகராஜா..?''

''எதிர் வீடுன்னு சொல்றீங்க? உங்களுக்குத் தெரியாதா?''

''இங்கே எல்லாருக்கும் அவங்கவங்க பாட்டைக் கவனிக்கவே சரியா இருக்கும். பக்கத்துலயே பத்து வருஷம் இருந்திருப்பாங்க. கேட்டா தெரியாதுன்னு சொல்லிடுவாங்க...''

''ஏன் அப்படி?''

சிரித்தான் சரவணன்.

''அந்த அளவுக்கு ஒரு வீடும் இன்னொரு வீடும் பரஸ்பரம் டச் வச்சுக்கிறதில்லே...''

''எரிச்சலா இல்லை?''

''தமிழ்நாடு மாதிரியே எல்லாப் பக்கமும் எதிர்பார்க்காதீங்க,'' சொன்ன சரவணன் மறுபடியும் சிரித்துக் கொண்டே சொன்னான்.

''என்னை நம்பிட்ட மாதிரி அவ்வளவு சீக்கிரமா யாரையும் நம்பிடாதீங்க,'' படிகள் முடிந்திருந்தது. இரண்டு எதிரெதிர் கதவுகள் தெரிந்தது.

இடது பக்கக் கதவில் - 554-A - என்ற ஸ்டென்சில் பிரிண்டட் எழுத்துக்கள் தெரிந்தது. காலிங்பெல்லைத் தேடினபடியே கதவைப் பார்த்த சுசித்ரா திகைப்பில் விழுந்தாள்.

வீடு பூட்டிக் கிடந்தது.



சித்ரவதைக் கூடத்தில் செத்து மடியும் மனித உயிர்களைப் பார்த்து கண்ணீர் சிந்தினாள் நடாஷா. மாஸ்கோ பல்கலைக் கழக மாணவன் ஒருவன் ஸ்டாலின் ஆட்சியின் கொடுமைகளை எதிர்த்து கையால் எழுதிய துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தமைக்காக பெரியாவால் கொடூரமான முறையில் கொல்லப்பட்டான். அதைப் பார்த்த நடாஷாவின் கண்களில் கண்ணீர் வரவில்லை. மாறாக மனசுக்குள் மிகப் பெரிய சபதம் எழுந்தது. 'என்றாவது ஒரு நாள் இந்தக் கொடுமைகளுக்கு முடிவு கட்டியே தீருவேன்' என்று சூளுரைத்தாள். தன் பருவ எழிலால் யாராவதொரு பெரிய அதிகாரியை மயக்கி, அவர் மூலம் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள நினைத்தாள். ஆனால் நடாஷாவின் அதிர்ஷ்டமோ அல்லது துரதிர்ஷ்டமோ பெரியாவே நடாஷாவின் அடிமையானான். வெறி பிடித்த பெரியாவையே தன் கைக்குள் போட்டுக் கொண்ட நடாஷா தன் எண்ணத்தை நிறைவேற்றத் தொடங்கினாள். ஆனால்... (அடுத்த அத்தியாத்திற்கு வாருங்கள்)



3

சரவணனும் திகைப்போடு அவளைப் பார்த்தான்.

''என்ன... வீடு பூட்டியிருக்கே?''

''எங்கே போனாங்கன்னு தெரியலையே?''

உயர்த்தி வாட்ச்சைப் பார்த்தாள். 1.35. மணிக்கட்டை உயர்த்தி வாட்ச்சைப் பார்த்தாள். 1.35. நடு ராத்திரியில் வந்து மாட்டிக் கொண்டாயிற்று.

''நடு ராத்திரியில் எங்கே போனார்கள்? குடும்பத்தோடு எங்கே போனார்கள்?

அம்மா கொடுத்த அட்ரஸ் சரிதானா? போன மாதம்கூட இவர்களிடமிருந்து வந்த லெட்டரில் இந்த அட்ரஸ்தானே போட்டிருந்தது?''

''நோ பிராப்ளம். நீங்க எங்க வீட்ல தங்கிக்கலாம்! இவங்க வர்றவரை...''

புன்னகையோடு சொன்ன சரவணனைப் பார்த்தாள்.

''உங்க வீட்டிலா?''

''ம்...''

யோசித்தாள். அதைத் தவிர வேறு வழியில்லை. புது ஊர். புது இடம். கொஞ்சமாவது தெரிந்த ஒரே நபர் சரவணன்.

"உங்க வீட்ல மத்தவங்க டிஸ்டர்பன்ஸா நினைச்சுக்கி மாட்டாங்களா?"

"என் வீட்ல என்னைத் தவிர கட்டில், டேபிள், ஷெல்ஃப் அலமாரி இதெல்லாம்தான் இருக்கு. அதெல்லாம் நீங்க வர்றதை டிஸ்டர்பன்ஸா நினைச்சுக்காது..."

"நீங்க பேச்சலரா..?"

"ஆமா..."

சொல்லிவிட்டு அவளின் பதிலை எதிர்பார்க்காமல் சூட்கேஸை அள்ளிக்கொண்டு படிகளில் தடதடத்து இறங்க ஆரம்பித்தான்.

வேறு வழியில்லாமல் சுசித்ரா அவனைப் பின் தொடர்ந்தாள். படிகள் முடிந்து போய்த் தரைக்கு வந்தார்கள். அந்த பிளாக்கின் காம்பௌண்ட் கேட்டைக் கடந்து, பனி ஈரம் படர்ந்த வீதியைக் கிராஸ் செய்து எதிர் பிளாக்கின் காம்பௌண்ட்டுக்குள் பிரவேசித்தார்கள்.

கீழ் ஃப்ளோரிலேயே இருந்த சரவணனின் வீட்டுக் கதவை அடைந்ததும் பாக்கெட்டிலிருந்த சாவியைத் தேடி எடுத்துப் பூட்டுக்கு சுதந்திரம் கொடுத்தான். உள்ளே பிரவேசித்ததும் சுவர்ப்பரப்பில் ஸ்விட்ஸைத் தேடி, தட்டி அறைக்குள் வெளிச்சத்தைக் கொண்டு வந்தான்.

"இதான் என்னோட பேலஸ். உள்ளே வாங்க சுசித்ரா..."

சுசித்ரா தயக்கம் பரவின நடையில் உள்ளே வந்தாள். அறையைப் பார்வைக்கு கொண்டு வந்தாள். இரண்டு ஜன்னல்கள் எதிரெதிராய். ஒரு மேஜை. பீரோ. மேலே டீபாய். ஒல்லியான ஃப்ளவர் வாஸ். ஒரு வார இதழ். ஆஷ்ட்ரே. அறையைச் சுத்தமாய் வைத்திருந்தான்.

"உட்காருங்க... சுசித்ரா..." ஃபோல்டிங் சேரைக் காட்டிவிட்டு, உள் அறைக்குள் அஸ்தமித்தான். பாத்திர சப்தம் கேட்டது.

ஐந்தாறு நிமிஷக் கடப்பில் கையில் டீ கப் களோடு திரும்பி வந்தான்.

"ப்ளீஸ்... ஹேவ் இட்..."

அந்த குளிருக்கு- தூக்கம் இமையை ஏராளமாய்த்



தொந்தரவு படுத்துகிற நேரத்துக்கு டீ தேவையாயிருந்தது.

"தேங்க்ஸ்..."

வாங்கிக் கொண்டாள்.

சரவணன் எதிர் நாற்காலியில் உட்கார்ந்தான்.

இரண்டு பேரும் உதட்டு விளிம்புகளில் டீ கப்பை உரச விட்டார்கள்.

"சரவணன், உங்க அம்மா... அப்பா..?"

"மேலே போய் ரொம்ப வருஷமாச்சு." சிரித்துக் கொண்டே சொன்னான்.

"இந்த ஊருக்கு எப்படி வந்தீங்க?"

"படிச்சு முடிச்சதும் இங்கே வேலை கிடைச்சது. மூணு வருஷம் வேலை பார்த்தேன். ஊர் பிடிச்சது. வேலையை உதறிட்டு பிஸினெஸ் தொடங்கி இங்கேயே செட்டில் ஆகிட்டேன்..."

"அப்படின்னா பிஸினெஸ் விஷயமாத்தான் சௌத் பக்கம் வந்தீங்களா?"

"ஆமா..."

"அடிக்கடி வருவீங்களா?"

"ரெண்டு மாசத்துக்கு ஒரு தடவை வருவேன்..." என்றவன் மெல்லிய குரலில் கேட்டான்:

"வேலைக்காக நம்ம ஊர்ல இவ்வளவு தூரம் தனியா பொண்ணை அனுப்பத் தயங்குவாங்களே... உங்க வீட்ல எப்படி சம்மதிச்சாங்க?"

"என்னோட குடும்ப நிலைமை இவ்வளவு தூரம் என்னை வரவழைச்சிடுச்சு..."

"உங்க ஃபேமிலியைப் பத்தி நான் தெரிஞ்சுக்கலாமா?"

"தாராளமா! நாலு பொண்ணுங்களை வரிசையா குடுத்துட்டு நாற்பது வயசிலேயே போய்ச் சேர்ந்துட்டார் எங்க அப்பா. நான்தான் மூத்தவ. என்னோட படிப்பு முடியற வரை அம்மா கஷ்டப்பட்டாங்க. நான் படிச்சு முடிச்சு வேலையில் சேர்ந்ததும் அம்மாவுக்கு ரிடையர்மென்ட் கொடுத்துட்டு நான் கோதாவில் இறங்கிட்டேன். ஊர்விட்டு ஊர் வர்றதை ஒரு பிரச்னையா நினைச்சா முடியுமா?"

சுசித்ரா டீ கப்பைக் காலியாக்கி கீழே வைத்தாள்.

''ரொம்ப டயர்டா இருக்கீங்கன்னு நினைக்கிறேன் கொஞ்சம் இருங்க... பெட் அரேஞ்ச் பண்ணி தர்றேன்...'' சொல்லிக்கொண்டே உள்ளே போனான்.

மறுபடியும் சுசித்ரா வீட்டைப் பார்வையிட்டாள் இரண்டு ரூம்கள். வராந்தா. கிச்சன். எல்ல அறைகளையுமே அவள் உட்கார்ந்திருந்த அறையிலிருந் பார்க்க முடிந்தது.

நெற்றியில் கலைந்து விழுந்திருந்த தலைமுடியை ஆட்காட்டி விரலால் சுழற்றிவிட்டுக் கொண்டே காத்திருந்தாள். மனசின் ஓர் ஓரத்தில் லேசான பயமுட கனன்று கொண்டிருந்தது.

'அந்நிய வீட்டில் தங்குகிறேன். அதுவும் முன்பின் தெரியாத, இரண்டு நாள் ரயில் பயணத்தில் மட்டுமே பரிச்சயமான ஒரு அந்நிய ஆணை முழுமையாக நம்பி..

எந்த அளவுக்கு சரவணனை நம்பலாம்?'- மனசின் இன்னொரு பக்கம் பச்சைக் கொடி காட்டியது.

'இந்த இரண்டு நாட்களில அவனைப் பார்த்தவரை அவனோடு பழகினதுவரை அவன் மோசமான ஆள் மாதிரி தெரியவில்லை. கண்களில் விஷமம் இருக்கிற மாதிரி தெரியவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக -

இப்போது இதை விட்டால் வேறு பாதுகாப்பான இடமும் இல்லை' என்று தோன்றியது.

அவளின் யோசிப்பைத் தடைபடுத்துகிற மாதிரி -

சரவணன் மீண்டும் அறைக்குள் வந்தான்.

''உங்களுக்குப் படுக்கை, ரெடி. நீங்க அந்த ரூமில் போய்ப் படுத்துக்கலாம்...''

சுசித்ரா எழுந்தாள்.

''போய்ப் பார்த்து சௌகரியமா இருக்கான்னு சொல்லுங்க...''

அவன் காட்டின அந்த அறையை நோக்கி நடந்தாள் சுசித்ரா. சரவணனும் கூடவே வந்தான். அறை எட்டு சதுர அடிகளை அதக்கியிருந்தது. ஃபோல்டிங் வசதியுள்ள கட்டில் விரித்துப் போடப்பட்டு, மேலே கம்பளி பரப்பின படுக்கை விரிக்கப்பட்டு இருந்தது. மெரூன் வர்ண



க்கில்ட் பாதி மடிக்கப்பட்டு மேலே போடப்பட்டிருந்தது.

''உங்களுக்கு சிரமம் தர்றேன்...''

''நோ. நோ. இதிலென்ன சிரமம்? நான் தனியா இருக்கிறதனாலே அடிக்கடி இங்கே கெஸ்ட் யாராவது வந்துட்டே இருப்பாங்க. நோ பிராப்ளம். நீங்க சங்கோஜப்பட வேண்டிய அவசியமில்லை...''

''ரொம்ப தேங்க்ஸ் சரவணன். அளவுக்கு மீறிய வசதி இங்கே இருக்கு...''

''ஓகே... குட்நைட்.''

''குட்நைட்.''

''கதவை உள் பக்கமாகத் தாள் போட்டுக்குங்க சுசித்ரா.'' சொல்லிக்கொண்டே வெளியேறினான்.

சுசித்ரா கதவுத் தாழ்ப்பாளைப் போட்டுவிட்டு லைட் சுவிட்சை ஆஃப் பண்ணிவிட்டு, படுக்கைக்குத் திரும்பினாள். தூக்கம் இமைகளின் மேல் எவரெஸ்ட்டைக் கவிழ்த்திருக்க மெத்தென்று கட்டிலில் வீழ்ந்தாள். க்கில்ட்டை மேலே போர்த்திக்கொண்டு கதகதப்பானாள்.

தூக்கத்துக்குள் போக ஆரம்பித்தாள்.

பாதி நினைப்பும் பாதி தூக்கமுமாய் இரவு போய்க்கொண்டிருக்க, திடீரென்று -

''தட்... தட்... தட்...'' என்ற சப்தம் கேட்டு, தூக்கத்திலிருந்தும் கலைந்து போய் எழுந்து உட்கார்ந்தாள்.

வீட்டின் வெளிக்கதவு தட்டப்பட்டுக் கொண்டிருந்தது. 'தட்... தட்... தட்...' யார் தட்டுகிறார்கள்? சிறிது நேரம் பொறுமை காத்துவிட்டு -

மேலும் கதவு தட்டப்படவே, அறைக் கதவைத் திறந்து கொண்டு அந்த அறையிலிருந்து வராந்தாவுக்கு வந்தாள். சரவணனின் அறையைப் பார்த்தாள். நேராகக் கட்டில் தெரிந்தது. போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு அசாத்தியத் தூக்கத்திலிருந்தான் சரவணன்.

'தட்... தட்... தட்...' கதவு தட்டல் தொடர்ந்து கொண்டிருக்க, 'சரவணனை எழுப்பலாமா?'

முன்புற விளக்கைப் போட்டாள்.

''கோன் ஹை..?'' இரண்டு நாள் பழக்கமான இந்தியில் கேட்டாள்.

''சரவண்ன் இருக்கிறானா?'' என்றது ஓர் இந்தி ஆண் குரல்.''

''ஆப் கோன் ஹை..?'' அவள் திருப்பிக் கேட்டாள்.

''நான் அவனோட ஃப்ரண்டு. நீங்க யார்?''

'சரவணனின் ஃப்ரெண்டு போலிருக்கிறது. சரவணனை எழுப்பலாமா? இல்லை, நாமே கதவைத் திறக்கலாமா?' முதலாக அவளே கதவைத் திறந்தாள்.

திறந்த வினாடி - ஒரு கனமான உருவம் தடாலென உள்ளே புகுந்து அவள் வாயைப் பொத்தியது. சுசித்ரா திமிறத் திமிற -

அவளைச் சுவாசிக்க விடாமல் ஈகுத்தனமாய்த் தன் பெரிய உள்ளங்கையால் முகத்தை ரொப்பியது.

பத்து வினாடிகள். சுசித்ரா சத்தமில்லாமல் அறுந்த பட்டம் மாதிரி தளர்ந்து கீழே சரிந்தாள்.

சுசித்ரா சுய உணர்வுக்கு வந்தபோது - கண்ணைக் கட்டின மாதிரி இருட்டு தெரிந்தது. கண்களில் இன்னமும் ஒருவித மசமசப்பு உட்கார்ந்திருந்தது. தலை வலிப்பதுபோல் உணர்ச்சி.

'எங்கே இருக்கிறேன்?' சுற்றும் முற்றும் பார்த்தாள். சரவணன் வீட்டு வாசல் என்பது புரியச் சில வினாடிகளாயிற்று. 'வந்தவன் யார்? திருடனா?

எதற்காக உள்ளே வந்தான்?' தடுமாற்றமாய் சுசித்ரா எழுந்தாள்.

சாத்தியிருந்த கதவைத் திறந்து கொண்டு உள்ளே போய், சுவர் கடிகாரத்தில் நேரம் பார்த்தாள். 5.35.

'இன்னும் கொஞ்ச நேரத்தில் விடியப் போகிறது.

நடந்த சம்பவத்தைச் சரவணனுக்குச் சொல்ல வேண்டும். அவன் இன்னமும் விவரம் தெரியாமல் தூங்கிக் கொண்டிருக்கிறான் போலிருக்கிறது.'

சரவணனின் அறைக்குள் நுழைந்தாள் சுசித்ரா. அறை இருட்டுக்குள் விழுந்திருக்க ஸ்விட்சைத் தட்டிவிட்டு இருட்டை வெளியே துரத்தினாள். சரவணன் பயண



அலுப்பின் தாக்கத்தில் அபாரமான தூக்கத்தில் இருந்தான்.

கறுப்பு மஞ்சள் பூப்போட்ட போர்வை அவனை முழுமையாக உள்வாங்கியிருக்க அவனை நெருங்கியவள்-

முதுகுத் தண்டை நெருப்பால் சுட்ட மாதிரி சட்டென்று நின்றாள்.

சரவணனின் இருதயப் பகுதி இருந்த போர்வையின் மேல் ஒரு சிவப்பு வட்டம். அதிர்ச்சியோடு அவசரமாய் போர்வையை விலக்கினாள் சுசித்ரா.

பொத்துப் போயிருந்த நெஞ்சு ரத்தம் காட்டிக் கொண்டிருக்க, செத்துக் கிடந்தான் சரவணன்.

பெரியாவுடன் ஏற்பட்ட அறிமுகத்தின் முதலாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதற்குள் நடாஷாவால் காப்பாற்றப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் அதிகமாயிற்று. பெரியாவுக்குச் சந்தேகம் ஏற்படாத வகையில் நாளொன்றுக்கு நான்கைந்து பேரையாவது சாவின் பிடியிலிருந்து மீட்டு வந்தாள் நடாஷா. இந்நிலையில் பெரியாவின் கொடுமைகளுக்கு முடிவுகட்ட சி.ஐ.ஏ. உளவு



நிறுவனமும் முடிவு செய்தது. அதற்காக நடாஷாவின் உதவியை அது நாடி வரும்போதுதான் பெரியா விழித்துக் கொண்டான். தன் கூடவே இருந்து தனக்குக் குழி பறிப்பது தன் காதல் நாயகி நடாஷா தான் என்பதை மிகவும் தாமதமாகப் புரிந்து கொண்ட பெரியா, நடாஷாவின் மரணத்திற்கு நாள் குறித்தான். அதே நாளைத் தான் பெரியாவின் மரணத்திற்காக நடாஷாவும் குறித்திருந்தாள். அந்த நாள்...

4

(அடுத்த அத்தியாயத்தில்)

இன்ஸ்பெக்டர் நரேந்தர்சிங் அட்சரம் பிசகாத பஞ்சாபித்தனத்தைத் தன் 'மேல்' பரவலாய் வாங்கியிருந்தார். இளமையை இழக்காத வயதில் இருந்தார். பராமரிக்கப்பட்ட தாடி, முகத்துக்கு கம்பீரம் கொடுத்திருந்தது.

அந்த வீட்டை நரேந்தர் சிங்கின் தலைமையில் ஒ
போலீஸ் பரிவாரம் முற்றுகை இட்டிருந்தது
ஃபோட்டோ பிடிப்பு, கைரேகை வேட்டை, தடய
தேடல். எல்லா போலீஸ் வேலைகளுமே சுறுசுறுப்பா
நடந்து கொண்டிருந்தது. வீடு முழுக்க
பார்வையிட்டுவிட்டு - சுசித்ராவிடம் வந்தார் அவ
ஆங்கிலத்தில் விசாரணையை ஆரம்பித்தார்.

''உங்க பேரைச் சொல்ல முடியுமா?''

''சுசித்ரா...''

''இறந்தவரோட பேர்?''

''சரவணன்...''

''சரவணன் உங்களுக்கு என்ன ரிலேஷன்?''

''ரயில் சிநேகிதம்,'' என்று சொன்ன சுசித்ரா
கோயம்புத்தூரிலிருந்து புறப்பட்ட நிமிஷம் முதல்
விடிகாலை சம்பவம் வரை சொல்லி முடித்தாள்.

நரேந்தர் சிங் மோவாயை வழுவினார்.

''கதவு தட்டற சத்தம் கேட்டுச் சரவணன்
விழிக்கலையா?''

''விழிக்கலை. அவர் படுக்கப் போற போதே
சொன்னார்; 'நல்ல டயர்ட். அடிச்சுப் போட்ட மாதிரி
தூங்கப் போறே'ன்னு. டிரெயினிலும் அவர் சரியா
தூங்கலை...''

''ஸோ நீங்க்தான் கதவைத் திறந்தீங்க...?''

''ஆமா இன்ஸ்பெக்டர். திறந்ததுதான் தெரியும்.
என்னை வாயைப் பொத்தி எதையோ சுவாசிக்க வெச்சு
மயக்கமாக்கிட்டான். ஆனா வந்தது ஒரு சிங்.''

''அவனை உங்களுக்கு அடையாளம் தெரியுமா?''

''தெரியாது.''

''அவன் குரல்?''

''அதுவும் அவ்வளவு சரியா சொல்ல முடியாது.
ஆனால் அவன் சரவணனுக்குத் தெரிஞ்ச யாராவது
ஒருத்தன்தான்...''

அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே -

ஒரு கான்ஸ்டபிள் முப்பத்தைந்து வயது ஆசாமி
ஒருத்தரைக் கூட்டி வந்தார்.



''ஸார்...''

''எஸ்...''

''இவர்தான் இந்த ஹவுஸ் ஓனர் ஹரிலால்...''

ஹரிலால் பைஜாமாவில் இருந்தார். அத்துமீறலான
தொப்பை அவருடைய உடம்பில் ஒட்ட வைத்த மாதிரி
இருந்தது. முகத்தைப் பனிக்கட்டித் தனமாக்கியிருந்தார்.
நீளமான நாசியில் ஒரு தற்கொலை முனையைப்
பதுக்கி இருந்தார்.

''நீங்கதான் இந்த ஹவுஸ் ஓனரா?''

நரேந்தர்சிங் பஞ்சாபி மொழியில் கேட்டார்.

''ஆமாம் இன்ஸ்பெக்டர்...''

''சரவணன் எவ்வளவு நாளா இந்த வீட்ல
குடியிருக்கார்?''

''மூணு வருஷமா...''

''அவரோட ஃப்ரெண்ட்ஸைப் பத்தி உங்களுக்குத்
தெரியுமா?''

''தெரியாது...''

''அவர் என்ன பிஸினெஸ் பண்றார்?''

''கிளாஸ் சப்ளையார்...''

''நீங்க எங்கே இருக்கீங்க?''

''செக்டார் தர்ட்டி த்ரீ...''

''என்ன பண்ணிட்டிருக்கீங்க?''

''ஹிம்டெக் அண்ட் கம்பெனியில அஸிஸ்டெண்ட்
எஞ்சினியர்.''

அவரின் விசாரணையில் குறுக்கிட்டபடி வந்தார் ஒரு
கான்ஸ்டபிள்.

''ஒரு நிமிஷம் இங்கே வர்றீங்களா ஸார்?''

அந்த கான்ஸ்டபிளின் பின்னால் நடந்தார் நரேந்தர்
சிங். கான்ஸ்டபிள் மேஜைக்குக் கூட்டிப் போனார்.
மேஜையின் கீழறை திறக்கப்பட்டிருந்தது. உள்ளிருந்து
எடுத்த ஒரு மடிக்கப்பட்ட தாளைக் கொடுத்தார்
கான்ஸ்டபிள்.

நரேந்தர் சிங் மடிப்புகளைப் பிரித்தார். முத்துக்
கோத்த மாதிரி குண்டு குண்டு ஹிந்தி எழுத்துக்கள் தாளின்
முழுப் பக்கத்தையும் நிறைத்திருந்தது. பார்வையைப்

பதித்து, படிக்க ஆரம்பித்தார். முழு மனசையும் கொட்
எழுதப்பட்ட காதல் கடிதம். கீழே இருந்
கையெழுத்தைப் பார்த்தார். ஜி. ரெஜிதா.

யார் இந்த ரெஜிதா?

சி.ஐ.ஏ. உளவு நிறுவனம் கல்லூரி மாணவன் ஒருவ
மூலம் கொடுத்தனுப்பிய வெடிகுண்டு பொருத்தப்பட்
மலர்த் தொட்டியை நான்காவது மாடியிலிருந்த பெரியாவின்
அறையில் வைத்தாள் நடாஷா. அப்பொழுது மணி 12
அடுத்த ஆறு மணி நேரத்தில் அந்த அறை சுக்குநூறா
வெடிக்கப் போகிறது. கடிகார முட்கள் நகர்ந்தன. மணி 3
பெரியா வரவில்லை. நான்கு... ஐந்து! அப்பொழுதும் பெரிய
வரவில்லை. ஏதோ ஓர் உணர்வு நடாஷாவின் வயிற்றை
கலக்கியது. சரியாக 5.10க்கு பெரியா வந்தான். வந்தது
வராததுமாக நடாஷாவை அணைத்து முத்தமிட்டு
கொஞ்சினான். கடிகார முட்கள் வேகமாகி 5.50ல் நின்றது
பெரியாவின் ராட்சத அணைப்பிலிருந்து நடாஷாவால் விலக
முடியவில்லை. 5.55 ஆனபோது, 'ஐயோ எனக்குத் தலை
வலிக்கிறது. என்னை விட்டு விடுங்கள்' என்று
கெஞ்சியபடியே அறையிலிருந்து வெளியேற
சென்றவளை நிறுத்தி 'இரு ஒரு ஜோக் சொல்கிறேன்
தலைவலி பறந்து விடும்' என்று ஜோக்கை சொன்னான். மண



5.58. 'சரி டார்லிங், நீ வீட்டுக்குப் போ. சீ யூ
டுமாரோ' என்றபடியே பெரியா அறையை
விட்டு வெளியேறினான். தப்பித்தோம்
பிழைத்தோம் என்று நடாஷா ஓடிவந்து
லிஃப்டை அழுத்தினாள். அப்போதுதான்
இறங்கிப் போன பெரியாவால் லிஃப்ட் மேலே
அனுப்பப்படவில்லை. வெடிகுண்டு
வெடித்தது. ஆயிரம் கோடி அணுக்களாக
சிதறிப் பரவினாள் நடாஷா. தூரத்தில்
சிரித்தபடியே தன் உளவுத் துறையினரோடு
பேசிக் கொண்டிருந்தான் பெரியா.

5

மறுநாள் காலை.

போலீஸ் தங்கள் சடங்குகளை முடித்துக்கொண்
ஸ்தலத்தைக் காலியாக்கியிருந்தபோது, நேரம் ஒன்ப
முப்பது. சரவணன் மார்ச்சுவரி வேனில் ஏறி
போயிருந்தான். வீட்டில் ஹரிலாலும், சுசித்ராவும்தான்
பாக்கியிருந்தார்கள்.



ஹரிலால் அவளை விசாரித்தார். கொச்சையான
ஆங்கிலத்தில் பேசினார்.

"சரவணனுக்கு நீ வெறும் டிரெயின்
பழக்கம்தானா?"

"ஆமா ஸார். நான் வந்து இந்தப் பிரச்சினையில்
மாட்டிக்கிட்டேன்..."

"இனிஷிக் பேர் என்ன சொன்னே?"

"சத்யா நர்சிங்ஹோம்!"

"எதிர் வீட்டுக்குத்தான் வந்தியா?"

"ஆமா ஸார். நாகராஜ்னு ஒரு ஃபேமிலி ஃபிரெண்டு
அட்ரஸ் கொடுத்தார். அவர் வீட்ல தங்கிக்கலாம்னு
வந்தேன். அவங்க வீடு பூட்டியிருந்தது. இவர் இங்கேயே
வந்து தங்கிக்கச் சொன்னார். விடியறதுக்குள்ளே இப்படி
ஆயிடுச்சு..."

"அவங்க எங்கே போயிருக்காங்கன்னு
தெரியலையா?"

"ம்ஹூம்."

"நீ வர்றது அவங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாது..." சொன்ன சுசித்ரா - தயக்கத்தோடு
அவரை ஏறிட்டாள்.

"ஸார்..."

"என்ன?"

"நாகராஜ் ஸார் வர்ற வரைக்கும், நான் இங்கே
தங்கிக்க அனுமதிப்பீங்களா? இது புது ஊர். எனக்கு
யாரையும் தெரியாது. அவங்க வந்த பின்னாடி எனக்குப்
பிரச்சினை இல்லை."

"நீ தாராளமா தங்கிக்கலாம்..."

"தேங்க்யூ ஸார்..."

கிச்சனில் சில நிமிஷங்கள் செலவழித்து,
ஹரிலாலுக்கு டீ கலந்து தந்தாள். இரண்டு பேருக்குமே,
சரவணன் அந்நிய மனிதனாக இருந்ததால் ஒரு துர்மரணம்
நிகழ்ந்த துக்கம் அதிகப்படியாய் இல்லாமல் டீயைக்
குடித்தார்கள்.

மேலும் பத்து நிமிஷங்கள் பேசிக்கொண்டிருந்து
விட்டு ஹரிலால் புறப்பட்டார்.

தனிமை!

சுசித்ராவுக்குச் சரவணன் முகம் நினைவுக்கு வந்தது. 'நேற்று சிரிக்கச் சிரிக்கப் பேசியவன் இன்றைக்( இல்லை! யாரந்த ரெஜிதா? கொலை செய்கிற அளவுக்கு சரவணன் என்ன செய்தார்?'

யோசித்துக் கொண்டே எழுந்தாள்.

ஸ்டவ்வுக்கு நெருப்புக் கிரீடம் ஏற்றி, அதன் மே நீர்ப் பாத்திரம் வைத்தாள். அடுத்த அரைமணி நேரத்தி குளித்து டிரெஸ் பண்ணி வெளியே வந்தாள்.

கதவைத் தாளிட்டுப் பூட்டினாள். பிறகு எதி வீட்டுக்கு வந்து கீழ் போர்ஷனில் கதவைத் தட்டினாள் நிமிஷத் தட்டலுக்குப் பின் கதவு திறக்கப்பட்டது. சல்வா கம்மீஸ் பெண் மதர்த்த மார்புகளோடு பிரசன்னமானாள்

''கோன்?''

''மேல் போர்ஷன்ல இருக்கிற நாகராஜ் எங்கே போயிருக்காங்கன்னு தெரியுமா?'' ஆங்கிலத்தி கேட்டாள்.

''தெரியாதே?'' என்றாள். அவளும் ஆங்கிலத்திற் வந்தாள்.

''எத்தனை நாளா அவங்க வீடு பூட்டியிருக்கு?''

''தெரியாது...''

உதட்டைப் பிதுக்கினாள்.

''சரவணன் சொன்னது சரியாகத்தான் இருக்கிறது நாகராஜ் எங்கே போயிருக்கார் என்று யாரைப் போ விசாரிப்பது?''

அந்த சல்வார் கம்மீஸிடம் தொந்தரவு அளித்தற் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, ஏமாற்றத்தோடு திரும் வந்தாள்.

''சரி. அவர்கள் வருகிறபோது வரட்டும். அதுவ சரவணனின் வீட்டிலேயே தங்கியிருப்போம்.''

முடிவு செய்து கொண்டு அந்த செக்டாரின் ப டெர்மினஸுக்கு வழி கேட்டுக் கொண்டு நடந்தாள்.

பத்து நிமிஷ நடையில் பஸ் டெர்மினஸை தொட்டாள்.

எந்த பஸ் ஏறி, எங்கே இறங்கி, எப்படிப் போவது



என்ற குழப்பத்தில் எதிர்சாரியில் நின்றிருந்த ஆட்டோக்களில் ஒரு ஆட்டோவை அமர்த்திக் கொண்டாள்.

''இதர் ஜானே?''

சத்யா நர்சிங்ஹோமின் அட்ரஸைச் சொன்னாள்.

டிரைவர் ஆட்டோவைக் கிளப்பினார். சாலையில் பீறிட்டுக் கிளம்பிய ஆட்டோ காலை நேர போக்குவரத்துக்கு மத்தியில் திணறி, நெருக்கமான கட்டிடங்களுக்கிடையே போய், சத்யா நர்சிங்ஹோம் முன் நின்றது.

ஆட்டோ சார்ஜைக் கொடுத்துவிட்டு, நர்சிங்ஹோமுக்குள் நுழைந்தாள்.

கிளினிக் கட்டிடம் மார்பிள் ஆடை அணிந்திருந்தது. முன்பக்கம் பச்சை லான். லானைச் சுற்றிலும் நிறையப் பூச்செடிகள். வலது பக்கம் ஒரு கார் நின்றிருந்தது.

சுசித்ரா ரிசப்ஷனுக்குள் நுழைந்து ரிசப்ஷனிஸ்டிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள -

அவள் சீஃப் டாக்டர் காசிஷ்குமார் அறைக்கு வழி சொல்லி அனுப்பி வைத்தாள். சுசித்ரா மொசைக் பரப்பில் நடந்தாள். வராந்தா திருப்பங்களுக்கு ஒத்துப் போனாள்.

Dr.KACHISHKUMAR M.B.B.S., M.S., ஆங்கில எழுத்துக்களில் அவர் பெயரைச் சொன்ன கதவைத் தட்டினாள்.

''கமின்...'' என்றது குரல்.

கதவைத் தள்ளினாள்.

சுசித்ரா எதிர்பார்த்ததைவிட அதிக வயதில் இருந்தார் காசிஷ்குமார். சுத்த வெள்ளைக் கோட்டில் பனீர் என்று புதைந்திருந்தார். கண்களில் தீர்க்கம் காட்டினார்.

சுசித்ரா அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை அவரிடம் நீட்டினாள். அதில் பார்வையைக் கிடத்தின காசிஷ்குமார் நிமிர்ந்தார்.

''பி சிட்டட் மிஸ் சுசித்ரா...''

சுசித்ரா உட்கார்ந்தாள்.

''நேத்துதான் அங்கிருந்து தகவல் வந்தது. நீங்க இன்னிக்கு ஃபார்மாலிடிஸ் எல்லாம் முடிச்சிட்டுப்

போயிடுங்க. நாளையிலிருந்து ட்யூட்டிக்கு வந்துடுங்க..."

"எஸ் டாக்டர்..."

"எங்கே தங்கியிருக்கீங்க?"

"செக்டார் ஃபார்டிசெவன்ல ஒரு தெரிஞ்சவர் வீட்ல..."

"ஹிந்தியும் தெரியுமா உங்களுக்கு?"

"தெரியாது டாக்டர்..."

காசிஷ்குமார் இன்டர்காமில் யாரோடோ பேசினார். சிறிது நேரத்தில் அறைக்குள் அந்த நர்ஸ் பிரவேசித்தாள்.

"நவீனா... இவங்க மிஸ் சுசித்ரா. நியூ அப்பாயின்ட்மென்ட்..." அவள் சுசித்ராவிடம் ஹலோவினாள்.

காசிஷ்குமார் தொடர்ந்தார்.

"இவங்ககிட்டே ஜாயினிங் ரிப்போர்ட் வாங்கிட்டு, மத்த ஃபார்மாலிடிஸை முடிச்சுக்கிட்டு அனுப்பிடுங்க. நாளையிலிருந்து டியூட்டிக்கு வருவாங்க. ஃபர்ஸ்ட் வீக் டே ஷிஃப்ட் அரேஞ்ச் பண்ணிடுங்க. அப்புறமா மாத்திக்கலாம்."

"எஸ் டாக்டர்..."

சுசித்ரா எழுந்து, அந்த நவீனாவை தொடர்ந்தாள். "எனக்கும் கொஞ்சம் தமிழ் தெரியும். உனக்கு எந்த ஊரு..?"

"கோயமுத்தூர்..."

"அச்சா! ஹிந்தி தெரியுமா?"

"தெரியாது..."

நவீனா சுசித்ராவை ஓர் அறைக்குக் கூட்டிப் போனாள். இருக்கை கொடுத்து உட்கார வைத்து, வெள்ளைத் தாளும் பேனாவும் எடுத்துத் தந்தாள்.

"இதுல ஜாய்னிங் ரிப்போர்ட் எழுதிக் குடு..."

"ம்..." பேப்பரையும் பேனாவையும் வாங்கி ஜாயினிங் ரிப்போர்ட் எழுத முயன்ற அதே வினாடி இன்னொரு நர்ஸ் அந்த அறைக்குள் பிரவேசித்தாள்.

"ஹாய் நவீனா!" என்று நவீனாவைப் பார்த்துக் கத்திவிட்டு, நவீனாவிடம் பஞ்சாபியில் என்னவோ கேட்டாள்.



நவீனா பஞ்சாபியில் அவளுக்குப் பதில் சொன்னாள். அந்த உரையாடலில் இரண்டு மூன்று தரம் 'ரெஜிதா, ரெஜிதா' என்ற பெயர் அடிபட்டது.

சைலேந்தர் ரோட்டில் இருந்த அந்த பிரும்மாண்டமான காம்ப்ளக்ஸுக்கு முன்னால் ஜீப்பை நிறுத்தினார் நரேந்தர்சிங்.

ஜீப்புக்குள்ளிருந்து நரேந்தர் சிங்கோடு இறங்கின சப்-இன்ஸ்பெக்டர் பல்பீர், நரேந்தர் சிங்கைவிடச் சுற்றளவில் ஒரு பங்கு அதிகமாக இருந்தார். தாடியில் அடர்த்தியான கருமையைக் காட்டியிருந்தார்.

பஞ்சாபியில் பேசிக் கொண்டார்கள்.

"இதான் அந்த சரவணனோட ஷாப் ஸார்."

"கிளாஸ் ஏஜென்ஸியா?"

"ஆமாம் ஸார்."

"இந்த ஊர்லே அவருக்கு ரிலேடிவ்ஸ் யாருமில்லையா?"

"யாரும் இருக்கிற மாதிரி தெரியலை."

"வந்த ஆசாமி சரவணனைப் பத்தித் தெரிஞ்சு வச்சிருக்கான். லோ, சரவணனுக்குப் பரிச்சயமான ஒரு ஆசாமிதான் அந்த மர்டரைப் பண்ணியிருக்கணும். சரவணனுக்கு ரெஜிதான்னு ஒரு பொண்ணு பழக்கமா இருந்திருக்கா. அந்த ரெஜிதா சைட்ல யாருக்காவது இவரைப் பிடிக்காமல் இப்படி வந்து முடிச்சிருக்கலாம்."

"அந்த ரெஜிதா யாருன்னு தெரியுமா?"

"இந்த ஏஜென்ஸியிலே யாருக்காவது அந்த ரெஜிதாவைத் தெரிஞ்சிருக்கலாம்."

"லெட் அஸ் ட்ரை."

பேசிக் கொண்டே சரவணா ஏஜென்ஸிக்குள் பிரவேசித்தார்கள். பேப்பரும் வைக்கோலும் சுற்றிய பெரிய பெரிய கண்ணாடிகள் சுவரோரத்தில் சாத்தி வைக்கப்பட்டிருக்க, விநாயகர், சரஸ்வதி படங்களுக்கு மாலை போட்டு ஊதுபத்தி கொளுத்தப்பட்டு நேர் கீழே இருந்த ஸ்டூல் மேஜையில் அந்த வழுக்கைத் தலை நபர் தெரிந்தார். நரேந்தர் சிங்கையும் பல்பீரையும் பார்த்ததும்,

''நமஸ்தேஜி!'' என்றார்.

நரேந்திர் சிங் கேட்டார்: ''உங்க பேரு?''

''கேசவ்.''

''எத்தனை வருஷமா இங்கே இருக்கீங்க?''

''மூனு வருஷமா இருக்கேன்.''

''உங்களுக்கு இங்கே என்ன டெஸிக்னேஷன்?''

''அக்கௌண்ட்ஸ் எழுதறதிலிருந்து வெளியே பணம் கலெக்‌ஷன் பண்றது வரை எல்லாமே நான்தான்.''

''சரவணன் அடிக்கடி வெளியூர் போயிடுவாரா?''

''மாசத்துக்கு ஒரு தடவை ரெண்டு தடவை போவார்.''

''அவருக்கு யார் விரோதியாய் இருக்க முடியும்னு நினைக்கிறீங்க?''

''அதான் எனக்குப் புரியலை இன்ஸ்பெக்டர்.''

''நல்லா யோசிச்சுப் பாருங்க, கேசவ். நீங்க அவர் கூடவே அதிகம் இருக்கிறதாலே உங்களுக்கு யார் மேலேயாவது சந்தேகம் வரலாம். பிசினஸ் தகராறு ஏதாவது நடந்திருக்கலாம்...''

''அப்படி எதுவும் நடந்த மாதிரி ஞாபகமில்லை, இன்ஸ்பெக்டர்.''

''உங்களுக்கு பிசினெஸ் காம்படிடர் யாரு?''

''அந்த வகையிலும் பார்க்க வழியில்லை இன்ஸ்பெக்டர். நாங்க மோனாபலி. காம்ப்படீட்டர் யாருமே கிடையாது.''

''பேமெண்ட் ஸ்ல்லாம் எல்லாப் பக்கமிருந்தும் தகராறு இல்லாமல் வந்துடுதா?''

''எல்லாமே த்ரூ பாங்க்தான்.''

'எந்தப் பக்கம் துளைத்தாலும் ஸ்ட்ராங்காக சிமெண்ட் பூசின மாதிரி அடைத்துக் கொண்டிருக்கிறது கேஸ்!'

ஆயாசமாய் கேசவ்வைப் பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

''மிஸ்டர் கேசவ், சரவணனுக்கு லவ் அஃபேர் ஏதும் இருக்கா?''

''எனக்குத் தெரிஞ்சு இல்லை, இன்ஸ்பெக்டர்.''

''ரெஜிதாங்கிற பேர்லே உங்களுக்கு யாரையாவது தெரியுமா?''



''ரெஜிதாவா? ஒரு மாசம் முன்னாடி மத்தியான ...ளையில் ஒரு பொண்ணு இங்கே வந்திருந்தா.''

''இஸிட்?''

''யெஸ். வந்து, அந்தப் பொண்ணு என்னமோ ...ல்லை, கொஞ்ச நேரத்திலே சரவணன் லார் மூட் அவுட் ...ன மாதிரி எந்திரிச்சுப் போயிட்டார்.''

''அந்தப் பொண்ணு பேர் தெரியலையா?''

''ஊஹூம்! ஒருவேளை நீங்க கேக்கிற ரெஜிதா அந்தப் ...ண்ணா இருக்கலாம்.''

''அந்தப் பொண்ணை மறுபடியும் பார்த்தால் ...களாலே அடையாளம் கண்டுக்க முடியுமா?''

''முடியும்.''

''இனி ஒரு தடவை அவளை எங்கேயாவது ...ர்த்தீங்கன்னா உடனே எங்களுக்குத் தகவல் ...டுங்க.''

''யெஸ் இன்ஸ்பெக்டர்.''

இரண்டு பேரும் எழுந்தார்கள்.

கேசவ்விடம் சொல்லிக் கொண்டபின் ஜீப்புக்கு ...ந்தார்கள்.

''ஸார்...''

''என்ன?''

''இந்த கேசவ்வை எந்த அளவுக்கு நாம நம்பலாம்?''

நிமிர்ந்தார் நரேந்தர் சிங்.

''கரெக்ட்! அதை நாம நினைக்கவேயில்லை.''

''எதிர்லே இருக்கிற பர்னிச்சர் ஷாப்லே கேசவ்வைப் ...த்தி விசாரிச்சிடுவோமா?''

''வாங்க, விசாரிப்போம்.''

சரவணா ஏஜென்ஸிக்கு எதிர்ப்பக்கம் இருந்த ...ர்னிச்சர் மார்ட்டில் நுழைந்தார்கள். பால்பாயிண்ட் ...னாவைப் பல்லிடுக்கில் வைத்துக் கொண்டு எதையோ ...பாசிக்கிற தாடி வைத்த இளைஞன் போலீஸ் ...னிஃபார்ம்களைப் பார்த்ததும் புருவங்களுக்குச் ...நுக்குகிற வேலையைக் கொடுத்தான்.

நரேந்தர் சிங் கேட்டார் ''நீங்கதான் கடை ஓனரா?''

''யெஸ் இன்ஸ்பெக்டர்.''

''எதிர்லே இருக்கிற சரவணா ஏஜென்ஸி கேசவ்
தெரியுமா உங்களுக்கு?''

''தெரியும் ஸார்.''

''ரெஜிதா தெரியுமா?''

அவன் குழப்பமாகப் பார்த்தான்.

''ரெஜிதாவா?''

''ரெஜிதாங்கற பொண்ணு...''

''தெரியாது, சார்.''

''சரவணனுக்கும் கேசவ்வுக்கும் இடையில்
எப்படி?''

அவன் தயங்கினான்.

''எதுவா இருந்தாலும் சொல்லுங்க.''

''அவ்வளவு சுமுகமா தெரியலை சார்.''

''எப்படிச் சொல்றீங்க?''

''அடிக்கடி சண்டை போட்டுப்பாங்க.''

''சண்டையா?''

''ஆமாம் ஸார். சரவணன் ஊருக்குப்
அன்னிக்குக்கூட ரெண்டு பேருக்கும் ஒரே சண்டை தா

''எதுக்கு சண்டை போட்டுக்கறாங்க
தெரியுமா?''

''தெரியலை சார்.''

''கேசவ் ஆள் எப்படி?''

''கொஞ்சம் முன்கோபி.''

''பல்பீர்...''

''ஸார்..!''


''கேசவ் மேலே சிவப்புப் புள்ளி வெச்சு அ
மறுபடியும் விசாரிக்கணும்.''

பர்னிச்சர் கடையிலிருந்து வெளியே வந்து எ
இருந்த சரவணா ஏஜன்ஸிக்குப் போக நினைத்துத் த
நிமிர்ந்தவர்களின் முகப் பரப்பில் லேசான திடுக்கி
அரும்பியது.

சரவணா ஏஜென்ஸி ஷட்டர் முழுக
மூடப்பட்டுப் பூட்டிக் கிடந்தது.



வரலாற்றுப் பெருமை மிக்க எகிப்து தேசத்திற்கு
ழியாத கறையை ஏற்படுத்தியவன் மன்னன் பாரூக்.
ன்னனாக இருக்க கொஞ்சம்கூட தகுதியில்லாத பாரூக்,
ரு நாளின் 24 மணி நேரங்களையும் பெண்
கத்திற்காகவும், மது அருந்துவதற்காகவும்,
தாடுவதற்காகவுமே செலவழித்தான். மன்னனின்
துரித்தனத்தால் எகிப்தின் பொருளாதார நிலை அதல
தாளத்திற்குச் சென்று கொண்டிருப்பதை உலக நாடுகள்
கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தன.



ஆனால் எகிப்திய இளைஞர்கள் குமுறி
எழுந்தனர். கல்லூரியில் படித்துக்
கொண்டிருந்த இளைஞர்களும், ராணுவத்தில்
பணியாற்றும் இளம் அதிகாரிகளும் இணைந்து
புரட்சிப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தனர்.
அவர்களுள் ஒருத்தி தான் பதினெட்டு வயது
பருவக்குமரி, ஈரான் தேசத்து பேரழகி பர்வீன்.
எகிப்து நாட்டின் தலையெழுத்தையே
புரட்டிப் போட்டவள் அவள்தான், எப்படி...?

6 (அடுத்த அத்தியாயத்திற்கு வாருங்கள்)

ஜார்னிங் ரிப்போர்ட் எழுதுவதை நிறுத்திவிட்டு
நவீனாவைப் பார்த்தாள் சுசித்ரா.

''மிஸ் நவீனா...''

நவீனா உரையாடலில் இருந்து கலைந்து போய்
த்ராவிடம் திரும்பினாள்.

''என்ன சுசித்ரா?''

''நீங்க இப்ப என்ன பேசினீங்க..?''

அந்த நவீனா குழப்பத்தோடு சுசித்ராவைப்
பார்த்தாள்.

''ஏன்... என்ன விஷயம்..?''

''ரெஜிதான்னு யாரையோ சொன்னீங்களே...?''

நவீனா புன்னகைத்தாள்.

''ஓ! அதுவா... இப்ப நீ வந்திருக்கிற போஸ்ட்ல
ன்னாடி ரெஜிதான்னு ஒரு பொண்ணு இருந்தா...
தைத்தான் இவங்ககிட்டே சொன்னேன்.''

''இப்ப அந்த ரெஜிதா எங்கே..?''

''சூஸைட் பண்ணிக்கிட்டா...''

சுசித்ரா திடுக்கிட்டுப் போய் நவீனாவைப் பார்த்தாள்.

''தற்கொலையா..?''

''ம்...''

''ஏன் பண்ணிகிட்டாங்க?''

''காரணம் தெரியல. அந்த ரெஜிதா மேலே உனக்கு என்ன இவ்வளவு இன்ட்ரெஸ்ட்?''

''பேர் புதுசா இருந்தது. தெரிஞ்சுக்கலாமேன்னுதான்...!''

அத்தோடு பேச்சை முடித்துக்கொண்டு ஜாய்னிங் ரிப்போர்ட்டை எழுதி நவீனாவிடம் கொடுத்துவிட்டு நிமிர்ந்தாள்.

''அவ்வளவுதானே?''

''ம்... நீ போயிட்டு நாளைக்கு வந்தா போதும்.''

''ட்யூட்டி எத்தனை மணிக்கு?''

''மார்னிங் செவன்.''

''நான் வர்றேன்.''

பேக்கைக் கையிலெடுத்துக்கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள் சுசித்ரா. வராந்தா முடிந்ததும் வெளியேறுகிற கேட்டைக் குசலம் விசாரிக்கிற சிமெண்ட் ரோட்டில் நடந்தாள்.

நடக்கிறபோது - யோசித்தாள்.

'இந்த ரெஜிதாவைப் பத்தி இன்ஸ்பெக்டரிடம் சொல்லலாமா?'

'போலீஸ் ஒரு தொந்தரவு பிடித்த விவகாரம். உதவ போனால் கடைசியில் நமக்குத்தான் உபத்திரவம். அவர்கள் எப்படியோ கண்டு பிடித்துக் கொள்ளட்டும். நம் வேலையைப் பார்த்துக் கொண்டு இருந்து கொள்ளலாம்...'

ஒரு மனம் போலீஸுக்குப் பயப்பட, இன்னொரு மனம் சரவணனுக்காகக் கரைந்தது.

'இரண்டு நாள் பழக்கம்தான் என்றாலும் சரவணன் எத்தனை உதவிகள் செய்திருக்கிறார்! அவரைக் கொலை பண்ணின ஒருவனைப் பிடிப்பதற்கு ஒரு க்ளு உபயோகப்படும் என்றால் - அதைப் போலீசில் சொல்வதில் என்ன தவறு?

தீர்மானித்துக் கொண்டாள்.

ரோட்டோரமாயிருந்த அந்தச் செவ்வக ப



ஷெல்டருக்கடியில் தஞ்சமானாள். ஏற்கெனவே அங்கே நின்றிருந்த ஒரு சீக்கியப் பெண்ணிடம் போலீஸ் ஸ்டேஷனுக்கு வழி விசாரித்துக் கொண்டாள். பஸ் நம்பர் கேட்டுக் கொண்டாள்.

பதினைந்தாவது நிமிடம் CHANDIGARH TRANSPORT UNDERTAKING - என்று கொட்டை எழுத்துக்களை உடம்பில் வாங்கியிருந்த அந்த டவுன் பஸ் ஸ்டாப்பிங்கில் வந்து நின்றது.

சுசித்ரா ஏறிக் கொண்டாள். பஸ்ஸின் இருக்கைகள் பெரும்பாலும் காலியாக இருந்தது. போக்குவரத்து இல்லாத ரோடுகளில் ஹவுசிங் பிளாக்குகளுக்கு நடுவே ஓடினது பஸ். கண்டக்டரிடம் கேட்டு இறங்க வேண்டிய ஸ்டாப்பிங் வந்ததும் சுசித்ரா இறங்கிக் கொண்டு - போலீஸ் ஸ்டேஷன் இருந்த பக்கமாய் நடந்தாள்.

இரண்டொரு திருப்பம் திரும்ப - சிவப்பான செங்கல் செங்கலான போலீஸ் ஸ்டேஷன் பார்வைக்குக் கிடைத்தது.

படிகளில் உயர்ந்து. உள்ளே போனாள்.

''க்யா வோணா..?''

குறுக்கிட்டு விசாரித்த கான்ஸ்டபிளிடம் சொன்னாள்.

''இன்ஸ்பெக்டரைப் பார்க்க வேண்டும்.''

சுவரோரமாகப் போட்டிருந்த மர நாற்காலியைக் காட்டிக் கொண்டே சொன்னார்.

''இன்ஸ்பெக்டர் அபி பார்கயா... உதர் பைட்டியே...''

மர நாற்காலியில் உட்கார்ந்து - வெளியே போயிருந்த இன்ஸ்பெக்டருக்காக காத்திருக்க ஆரம்பித்தாள் சுசித்ரா.

எதிரில் இருந்த வால் கிளாக்கில் விநாடி முள் தத்தியது. சுவரில் தொங்குகிற காந்தி, இந்திரா, நேருவின் ஃபோட்டோக்களில் தூசிப் படலம். ஒரு ஷெல்ஃபில் நிறைய ஃபைல்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தன.

சுசித்ரா எதற்காகவோ பார்வையைத் திருப்பியபோது - ஸ்டேஷனுக்குள் முன்புற கான்ஸ்டபிளிடம் என்னவோ சொல்லிவிட்டு - ஓடி வந்தான் ஒரு பொடியன். சுசித்ராவை நெருங்கினான்.

''தீதி...!''

''க்யா..?''

அவன் அவசர அவசரமாய் ஒரு துண்டுப் பேப்பரை கொடுத்தான்.

''ஒரு அங்க்கிள் இதை உங்ககிட்டே கொடுக்க சொன்னார்...''

''யாரு..?''

கேட்டுக் கொண்டே அவள் வாங்கினாள். வாங்கி கொண்டே பிரித்து - பார்வையை அந்தப் பேப்பரி போட்டாள்.

சிவப்பு மை எழுத்துக்களில் - ஆங்கிலத்தில் இரண் வரிகள்.

**'நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நேரம். அநாவசிய விவகாரங்களில் அதிகப்பிரசங்கித்தனமாய்த் தலையிட்டா உனக்குத்தான் ஆபத்து.'**

இன்ஸ்பெக்டர் நரேந்தர் சிங் - சாத்தியிருந் ஷட்டரை - தாடியைத் தடவிக்கொண்டே பார்த்தார்.

''பத்து நிமிஷம் கூட ஆகலை... ஆள் பூட்டிட்டு போயிட்டாள்..?''

குழப்பத்தோடு ஷட்டரின் அருகே போனார்கள் ஷட்டரை ஒட்டிய சுவரில் சின்னசதுரக் கட்டமிட்டு அ எழுத்துக்கள் தெரிந்தன.

**LUNCH HOUR**

**1.00 PM. TO 3.00 PM.**

வாட்சைப் பார்த்தார் நரேந்தர் சிங்.

''இது லஞ்ச் அவர்... அதான் கேசவ் பூட்டிட்டு போயிருக்கார்...''

ஜீப்புக்கு வந்தார்கள்.

போலீஸ் ஸ்டேஷன் இருக்கிற திசையில் ஸ்டியரி வளைந்தது. பத்து நிமிஷங்களை சாப்பிட்டுவிட் ஸ்டேஷன் வாசலைக் காட்டியது ஜீப். உள்ளே பிரவேசித்தார்கள்.

பிரவேசிக்கிற நிமிஷம் -

உள்ளிருந்து அந்த சத்தம் கேட்டது.



''கான்ஸ்டபிள்... அந்தப் பையனைப் பிடிங்க...''

நிமிர்ந்தவர்களின் கண்களில் எதிர்ப்பட்டான் ஒரு பொடியன். நரேந்தர் சிங் குபீரென்று பாய்ந்து அந்தப் பொடியனைத் தன் கையில் வாங்கினார்.

''சாப்... சாப்...'' என்று அலறிய அவனை இழுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார்.

அங்கே சுசித்ராவைப் பார்த்ததும், ''நீங்களா இவனைப் பிடிக்கச் சொல்லிக் கத்தினீங்க?''

''ஆமா இன்ஸ்பெக்டர்.''

''என்ன பண்ணினான் இவன்?''

''இந்தப் பேப்பரைக் கொடுத்துட்டுப் போனான்.''

பல்பீர் அதை வாங்கினார். படித்துப் புருவம் சுருங்கினார். நரேந்தர் சிங்கிடம் நீட்டினார். ''உங்ககிட்டே கொடுத்தானா?''

''உங்களைப் பார்க்கறதுக்காக வந்தேன். நீங்க வெளியே போயிருக்கிறதா சொன்னாங்க. வெயிட் பண்ணிட்டிருந்தேன். அப்போ இந்தப் பையன் வந்து இதைக் கொடுத்தான்.''

நரேந்தர் சிங் அந்தப் பையன் மேல் பார்வையைப் போட்டார். ''உம் பேர் என்ன?''

''அஜீத்.''

''இதை யார் கொடுத்தா?''

''அப்பா கடை முன்னாடி விளையாடிட்டு இருந்தேன். இந்த லெட்டரை ஒரு அங்க்கிள் என்கிட்டே கொடுத்தார். அங்கிருந்தே உள்ளே இருந்த இவங்களைக் காட்டி இவங்ககிட்டே கொடுத்துட்டு வரச்சொன்னார்.''

''உங்க அப்பா கடை எது?''

ஸ்டேஷனுக்குள்ளிருந்தே வாசலைத் தாண்டி எதிர் வரிசையில் தெரிகிற அந்த 'நீஷ்மா ப்ரொவிஷன்ஸ்' ஸைக் காட்டினான் அவன்.

''லெட்டர் கொடுத்தவன் எப்படி இருந்தான்?''

அவன் அடையாளம் சொல்லத் தெரியாமல் விழித்தான்.

''சரி, நீ போ.''

அவனை அனுப்பி விட்டார். அஜீத் ஓடிப் போனதும்,

சுசித்ராவின் பக்கம் திரும்பினார்.

''மிஸ் சுசித்ரா, என்ன விஷயமா என்னைப் பார்க்

வந்தீங்க?''

''ரெஜிதா விஷயமா இன்ஸ்பெக்டர்.''

''ரெஜிதாவா?''

ஆர்வம் பற்றிக்கொள்ள நிமிர்ந்தார்.

''நான் கிளினிக்ல் ஜாயின் பண்ணப் போயிருந்தப்போ

ரெண்டு நர்ஸ் பேசிக்கிட்டாங்க இன்ஸ்பெக்டர்.

அதாவது நான் இப்ப ஜாயின் பண்ணின போஸ்ட்

ஏற்கனவே ரெஜிதாங்கிற பொண்ணு இருந்திருக்கா. அ

சூயிஸைட் பண்ணிக்கிட்டாளாம். ஒருவேளை அ

சரவணனுடைய ரெஜிதாவோன்னு எனக்குத் தோணிச்

அதான் உங்ககிட்டே சொல்ல வந்தேன்.''

''அந்த ரெஜிதா யாரு, எங்கிருக்கான்னு

கேட்டீங்களா?''

''இல்லே இன்ஸ்பெக்டர்.''

''அந்த நர்ஸ் பேரென்ன?''

''நவீனா.''

''வாங்க கிளினிக்குக்குப் போகலாம்.''

கால் லிட்டர் பெட்ரோல் காலியாகியிருந்தபோ

சத்யா நர்ஸிங்ஹோம் போர்டிகோவில் அடங்கியிருந்த

ஜீப்.

மூன்று பேரும் ஜீப்பைப் புறக்கணித்து, கிளினிக்கி

உள்ளே நுழைந்தார்கள். விசிட்டர்ஸ் ஹவர்ஸ் என்பதா

ஜன நடமாட்டம் இருந்தது. அந்தத் திருப்பத்தி

திரும்பினபோது, நவீனா ஒரு இஞ்ஜெக்‌ஷன் டியூ

வெளிச்சத்தில் பார்த்துக் கொண்டே எதிர்பட்டாள்.

நவீனாவை நிறுத்தினாள் சுசித்ரா.

''நவீனா...''

நிமிர்ந்த நவீனா சுசித்ராவையும், கூட யூனிஃபார்மி

நிற்கிற நரேந்தர் சிங், பல்பீரையும் குழப்பத்தோ

பார்த்தாள்.

''என்ன?''

''ரெஜிதாவைப் பத்தி விசாரிக்க வந்திருக்காங்க.''

''ரெஜிதாவைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியணு



இன்ஸ்பெக்டர்?''

''பொதுவா அவங்களைப் பத்தி விசாரிக்கணும்.''

''எதுக்கும் நீங்க சீஃப் டாக்டரை ஒரு வார்த்தை கேட்டுடுங்க இன்ஸ்பெக்டர்.''

''ஓ.கே.''

நான்கு பேருமாக காசிஷ்குமாரின் அறைக்குப் போனார்கள். காசிஷ்குமார் புகைக்க ஆரம்பித்த சிகரெட்டை ஆஷ்ட்ரேக்குக் கொடுத்துவிட்டு நிமிர்ந்தார்.

''ப்ளீஸ் டேக் யுவர் சீட், இன்ஸ்பெக்டர்.''

அவர்கள் உட்கார்ந்தபின் கேட்டார்: ''என்ன விஷயம்?''

''இங்கே ரெஜிதான்னு ஒரு பொண்ணு வேலை பார்த்தாங்களா?''

''ஆமாம்.''

''அவங்களைப் பத்தின விவரங்கள் வேணும்.''

''என்ன விவரங்கள்?''

''அவங்க அட்ரஸ், யாராவது அவங்களை இங்கே பார்க்க வர்றதுண்டா? குறிப்பா ஆண்கள், இந்த மாதிரி இன்ஃபர்மேஷனெல்லாம் வேணும்.''

''எனக்குத் தெரிஞ்ச ரெஜிதா அவ்வளவு சுலபத்தில் யார்கிட்டேயும் பழகிட மாட்டாள். அவளைப் பார்க்க ரெண்டே ஆண்கள்தான் வருவாங்க. ஒருத்தர் அவளோட அண்ணன் ராஜீவ். இன்னொருத்தர்... அவர் பேர்... சரவணன்னு நினைக்கிறேன். அவர் வருவார்.''

நரேந்தர் சிங்கும் பல்பீரும் ஒருவரையொருவர் பிரகாசமாகப் பார்த்துக் கொண்டார்கள்.

அழகான பெண்களிடம் மயங்கிக் கிடக்கும் பாரூக் மன்னனை ஒழித்துக் கட்ட இளம் ராணுவ அதிகாரி அப்துல் நாசர் என்பவரின் தோழியான பர்வீன் புரட்சி இயக்கத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்டாள். பிறப்பிலேயே கோடீஸ்வரியான பேரழகி பர்வீன் எகிப்திய மக்களின் நல்வாழ்விற்காக தன் வாழ்வை சேதப்படுத்திக் கொள்ள துணிந்தாள். திட்டப்படி மான்டி கார்லாவில் பாரூக் சூதாடும் இடத்திற்குச் சென்றாள். வேடிக்கை பார்க்கும் சாக்கில் பாரூக் மன்னனின் கண்ணில் பட்டு தன் அழகால் அவனை வீழ்த்தினாள். பர்வீனின் பேரழகில் பித்துப் பிடித்தவன்



போலான பாருக் தன் மனைவியை விவாகரத்து செய்து விட்டு பர்வீனை திருமணம் செய்து கொள்ளத் துடித்தான்.

இதற்காகவே காத்திருந்த பர்வீன், சில நிபந்தனைகளுடன் எகிப்து நாட்டின் ராணியானாள். அதன் பிறகுதான் பாருக் மன்னன் தன் கனவில்கூட நினைத்துப் பார்க்காத முடிவைத் தேடிக் கொண்டான். அது... (8ம் அத்தியாயத்தில்)

## 7

'ப்ர்ர்ர்ர்ர்...'

காலிங்பெல் சுவிட்சை அழுத்தி வீட்டுக்குள் சப்திக்க வைத்தார்கள்.

நேரத்தின் வாயில் நிமிஷம் ஒன்று விழுங்கப்பட்டபின், கதவு திறக்கப்பட்டது. கதவின் செவ்வகத்தில் அந்த இளைஞன் தெரிந்தான்.

கோடு போட்ட தொளதொள பைஜாமாவுக்குள் தன்னை நுழைத்திருந்தான். முகத்தில் நேர்த்தியான சதுரம் இருந்தது. மீசை 'ப' என்றது. சிலநாள் தாடிப் பயிர் ஒழுங்கோடு வளர்ந்திருந்தது.

''வாங்க இன்ஸ்பெக்டர்,'' என்று வரவேற்றபோது, முன் வரிசைப் பற்களில் கறை தெரிந்தது.

அவர்கள் உள்ளே வந்ததும் கேட்டான்: ''என்ன விஷயம்?''

''நீங்கதான் மிஸ்டர் ராஜீவா?''

''ஆமா.''

''உங்களோட சிஸ்டர்தானே ரெஜிதா?''

''ஆமா.''

''அவங்க சூயிஸைட் பண்ணிக்கிட்டாங்களா?''

''ஆமா. என்ன விவரம் வேணும்?''

''ரெஜிதா எப்ப இறந்தாங்க?''

''ஒரு மாசம் முன்னாடி.''

''எப்படி?''

''ஒரு நாள் நான் வீடு திரும்பினபோது டேபிள் மேலே ஒரு லெட்டர் எனக்கு எழுதி வெச்சிருந்தது. ரெஜிதா



எழுதின லெட்டர்.''

''என்ன எழுதியிருந்தாங்க?''

''யாரோ அவளை ஏமாத்திட்டதாகவும் அதன் காரணமாக தற்கொலை பண்ணிக்கப் போறதாகவும் லெட்டர் எழுதியிருந்தாள்.''

''நீங்க போலீஸ்லே ரிப்போர்ட் பண்ணினீங்களா?''

''உடனடியா பண்ணினேன்.''

''பலன்?''

''ஒரு ரெயில்வே லைன்லே ரெஜிதாவோட டெட்பாடியைக் கண்டு பிடிச்சுக் கொடுத்தாங்க.''

''லெட்டர்லே ரெஜிதா குறிப்பிட்ட அயோக்கியனைப் பத்தி ஏதாவது தெரிஞ்சுதா?''

''தெரியலை.''

நரேந்தர் சிங்கின் மனசுக்குள் யோசிப்புச் சக்கரங்கள் சுழன்றன. ராஜீவையே சில விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்துவிட்டுக் கேட்டார்: ''நீங்க என்ன பண்ணிட்டிருக்கீங்க?''

''டூ வீலர் ஒர்க்ஷாப் வச்சிட்டிருக்கேன்.''

''எங்கே?''

''செக்டார் தர்ட்டி டூவில்.''

''உங்களுக்கு சரவணன்னு யாரையாவது தெரியுமா?''

''சரவணனா?''

''யெஸ்.''

யோசித்தான். ''ஸாரி! தெரியலை.''

''போலீஸ்கிட்டே எதையும் மறைக்காதீங்க, ராஜீவ்!''

''நிஜமாகவே சரவணன்னு யாரையும் எனக்குத் தெரியாது.''

''ரெஜிதாவோட ஃபோட்டோ இருக்கா?''

''இருக்கு.''

''கொடுங்க.''

''ஒரு நிமிஷம் இன்ஸ்பெக்டர்.''

பக்கத்து அறைக்குள் போன சில நிமிடங்களில் கையில் போட்டோவுடன் வந்தான். நரேந்தர் சிங்கிடம் கொடுத்தான்.

வாங்கிப் பார்த்தார் நரேந்தர் சிங்.

பாஸ்போர்ட் சைஸ் போட்டோ. பிளாக் அண்ட் ஒயிட். ரெஜிதா இரட்டைப் பின்னலோடு சின்ன ஆரப் பொட்டு வைத்திருந்தாள். கண்ணாடியில் எதிரொலிக்கிற சூரியக் கதிர் பிரகாசத்தைப் புன்னகையில் வைத்திருந்தாள். கூந்தலில் இருந்த மல்லிகைப்பூவை ஃபோட்டோ கோணத்துக்குக் கொண்டு வந்திருந்தார்கள். ஜிமிக்கிகள் இரண்டு தங்க டாலடிப்போடு ஜொலித்தன.

போட்டோவை பாக்கெட்டுக்குக் கொடுத்தார்.

''நீங்க என்ன கேஸ் விஷயமா என்னோட சிஸ்டரைப் பத்தி விசாரிக்கிறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா, இன்ஸ்பெக்டர்?''

நரேந்தர் சிங் அவனை எறிட்டார்.

'நிஜமாகவே தெரியாமல் தான் கேட்கிறானா?'

''சரவணனை யாரோ கொலை பண்ணியிருக்காங்க.''

''அதுக்கு ரெஜிதாவை எதுக்குத் தேடி வந்தீங்க?''

''உங்க சிஸ்டரும் அந்த சரவணனும் ஒருத்தரை யொருத்தர் விரும்பியிருக்காங்க.''

''இன்ஸ்பெக்டர்... என்ன சொல்றீங்க..?''

அவன் முகத் தசைகள் அதிர்ச்சியில் சுருங்கின.

''யெஸ்! உங்க சிஸ்டர் எழுதினை லவ் லெட்டரை அங்கே பார்த்தோம். ரெஜிதாவோட இந்த ஹேண்ட்ரைட்டிங் இங்கே இருக்கா?''

ராஜீவ் மறுபடியும் அறைக்குள் போனான்.

ஒரு நோட்டுப் புத்தகத்தோடு திரும்பி வந்தான்.

நோட்டுப் புத்தகத்தை வாங்கிப் பிரித்தார் நரேந்தர் சிங். எல்லாப் பக்கங்களிலும் மருந்து சம்பந்தமான குறிப்புக்கள்.

சரவணன் வீட்டில் கிடைத்த ரெஜிதாவின் லெட்டரை மனசுக்குள் கொண்டு வந்தார். அதிலிருந்த குண்டு குண்டான கையெழுத்தையும் இந்தக் கையெழுத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தார். வாய்க்குள் முனகினார்.

''இதே ஹேண்ட்ரைட்டிங்தான்.''

ராஜீவ் ஆச்சரியப்பட்டான்.

''அந்த சரவணன்தான் ரெஜிதா குறிப்பிட்ட அயோக்கியனா இன்ஸ்பெக்டர்?''



''அப்படித்தான் நாங்க நினைக்கிறோம்.''

''சரவணனை யார் கொலை பண்ணியிருப்பாங்க?''

''கண்டு பிடிக்கணும்.''

சொல்லிவிட்டு, ராஜீவின் முக உணர்ச்சியைப் படித்தார் நரேந்தர் சிங்.

ராஜீவ் சலனமில்லாமல் முகத்தை வைத்திருந்தான். பயமோ, பதட்டமோ, வியர்வையோ எதுவுமே முகத்தில் இல்லை.

நரேந்தர் சிங் தலைக்குத் தொப்பியைக் கொடுத்துக் கொண்டே சொன்னார்: ''தேவைப்பட்டால் நாங்க மறுபடியும் வருவோம்.''

''வெல்கம் இன்ஸ்பெக்டர்.''

ராஜீவின் வீட்டிலிருந்து வெளியே வந்தார்கள். ஜீப்புக்குள் நுழைந்தார்கள். ஜீப் நகர்ந்து தெரு முனைக்கு வந்ததும், பல்பீர் சொன்னார்:

''ராஜீவ் கொஞ்சம் உதைக்கறான்.''

''ஆமாம். மோட்டிவ் சரியா ஒத்து வருது.''

''சரவணனோட கொலைக்கு இவன்தான் காரணமாயிருக்க முடியும் ஸார்.''

''கொலை பண்ணினவனோட மூஞ்சியிலே இவ்வளவு அமைதியிருக்காது பல்பீர். நாம கேட்ட எல்லா கேள்விகளுக்கும் பதட்டப்படாமல் - பயப்படாமல் பதில் சொல்றானே?''

''சில பேரோட மூஞ்சிகளைப் படிக்க முடியாது ஸார். மாஸ்க்கர் ஃபேஸ்னு சொல்லுவாங்க.''

''அவன் அந்த மாதிரி ரகத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம்னு சொல்ல வர்றீங்களா, பல்பீர்?''

''ஆமா ஸார்.''

''எனக்கென்னமோ அந்த மாதிரி படலை.''

ஜீப் ஸ்டேஷனைத் தொட்டிருக்க- உள்ளே நுழைந்தார்கள். நுழைய நுழைய மேஜையில் இடம் பிடித்த யானைவர்ண டெலிபோன் அலறலை ஆரம்பிக்க, பல்பீர் ரிஸீவரைக் காதில் வாங்கினார்.

''ஹலோ...''

''ஸார், நான் கான்ஸ்டபிள் பால் பேசறேன்.''

''சொல்லு.''

''அந்தப் பொண்ணு சுசித்ரா வீடு பூட்டியிருக்கு ஸார்.''

''பூட்டியிருக்கா?''

''ஆமா ஸார்.''

வாட்சை உயர்த்திப் பார்த்தார். ஏழு மணி!

''நீ அங்கேயே வெயிட் பண்ணு. சுசித்ரா எங்காவது போயிட்டு வரலாம். ஒரு மணி நேரம் கழிச்சு ஃபோன் பண்ணு.''

''யெஸ் ஸார்!''

பல்பீர் சிங் ரிஸீவரைக் கவிழ்க்க, நரேந்தர் சிங் கேட்டார்: ''ஃபோன்லே யாரு?''

''சுசித்ரா வீட்டுக்கு செக்யூரிட்டி அனுப்பின கான்ஸ்டபிள் பால் ஸார். சுசித்ரா இன்னும் வீடு திரும்பலையாம்.''

''இன்னுமா வீடு திரும்பலை?''

நரேந்தர் சிங் ஆச்சரியப்பட்டுவிட்டு மற்ற கேஸ்களின் ஃபைல்களைப் புரட்ட ஆரம்பித்தார்.

எட்டு மணிக்கு கான்ஸ்டபிள் பால் மறுபடியும் ஃபோன் பண்ணினார்.

''ஸார்... சுசித்ரா இன்னும் வரலை.''

தொடர்ந்து -

ஒன்பது மணி!

''சுசித்ரா இன்னும் வரலை ஸார்.''

பத்து... பதினொன்று... பன்னிரண்டு மணியாகியும் சுசித்ரா வரவேயில்லை!

**கா**லை ஆறு மணி.

ஜன்னல் கர்ட்டனை விலக்கிய சுசித்ராவுக்கு எதிர்வீட்டில் காக்கி யூனிஃபார்ம்கள் தெரிய, கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு பார்த்தாள்.

இரண்டொரு கான்ஸ்டபிள்கள், இன்ஸ்பெக்டர் நரேந்தர்சிங், சப் இன்ஸ்பெக்டர் பல்பீர் ஆகியார் தெரிந்தார்கள். குழப்பமாய் அறையைவிட்டு வெளியே வந்தாள் சுசித்ரா.



மற்ற அறைகளை எட்டிப் பார்த்தாள். எல்லாருமே நல்ல தூக்கத்தில் இருந்தார்கள். முன்னறைக்கு வந்து -

கதவைத் திறந்து கொண்டு, நாற்பத்தைந்து டிகிரிகளில் சரிந்து போகிற படிக்கட்டுகளில் தடதடத்து, கீழே வந்தாள். வெளியே பனி உச்சமாகப் பெய்து கொண்டிருந்தது.

குளிர் ஜில்லிப்பாய் சுசித்ராவின் முகத்தோடு சண்டை போட்டது.

சேலையை இழுத்துப் போர்த்திக் கொண்டு, ரோட்டை கிராஸ் பண்ணி எதிர் பிளாக்கை நோக்கி நடந்தாள். முதுகைக் காட்டிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டரை நெருங்கினாள்.

''குட்மார்னிங் இன்ஸ்பெக்டர்...''

குரல் கேட்டுத் திரும்பின நரேந்தர்சிங், வியப்பையும் சந்தோஷத்தையும் சமமாகக் கலந்து முகத்தில் காட்டினார்.

''மிஸ் சுசித்ரா, உங்களுக்கொண்ணும் ஆபத்தில்லையே?''

''இல்லையே!''

''ராத்திரி பூராவும் எங்கே போனீங்க?''

''ஸாரி இன்ஸ்பெக்டர்... உங்ககிட்டே சொல்லாம போனது தப்புதான்...''

''எங்கே போனீங்க?''

''எதிர் வீட்லதான் இருந்தேன்.'

''எதிர் வீட்டிலா?''

''ஆமா... எங்க ஃபேமிலி ஃப்ரெண்ட் மிஸ்டர் நாகராஜ் ஊரிலிருந்து வந்துட்டார். அதனாலே அங்கேயே தங்கிட்டேன். ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ். உங்களுக்கு அனாவசியமா தொந்தரவு கொடுத்துட்டேன்...''.

நரேந்தர்சிங் சிரித்தார்.

''யூ ஆர் ஸேஃப். அதுபோதும் எங்களுக்கு. நாங்க நிறைய பயந்துட்டோம்...''

''கொலையாளி சிக்கினானா ஸார்?''

''வீ ஆர் ட்ரையிங். இப்போதைக்கு எங்க சந்தேகம் ரெஜிதாவோட அண்ணன்பேரில்தான். இன்னும் அவனை

நிறைய அலசணும்...''

சுசித்ரா நரேந்தர்சிங்கிடம் மறுபடியும் மன்னிப்பு கேட்டு விடை பெற்றுக் கொண்டு -

வீட்டுக்குள் நுழைகிறபோது நாகராஜன் வெளிப்பட்டார். அப்போதுதான் தூக்கம் கலைந்திருந்தார். கண்களில் கண்ணாடியில்லாமல் உடற்கட்டில் தொய்விழுக்காமல் ஐம்பத்தைந்து வயதைத் தொட்டிருந்தார்.

''என்னம்மா... எந்திரிச்சதும் எங்கே போயிட்டு வர்றே?''

''எதிர்வீட்டுக்கு அங்கிள்! நான் அங்கேதானே தங்கியிருந்தேன். எனக்கு ஒரு மிரட்டல் கடிதம் வந்ததால... எனக்கு ஏதாவது ஆபத்தோன்னு ராத்திரியெல்லாம் போலீஸ் தேடியிருக்காங்க...''

''நீ இங்கே தங்கறதை இன்ஃபார்ம் பண்ணியிருக்கணும்மா. எனக்குக் கூட இது தோணவே இல்லையே பார்...''

''இந்த ஊர் போலீஸ்காரங்க ரொம்பவும் இதமா நடந்துக்கறாங்க, அங்க்கிள். குற்றவாளிகளைக்கூடப் பக்குவமா விசாரிக்கறாங்க.''

நாகராஜனின் மனைவி பங்கஜம் சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்துக் குரல் கொடுத்தாள்.

''ஹீட்டர்ல வெந்நீர் கொதிக்குது. போய் குளிச்சட்டு வாம்மா...''

அவள் தலையாட்டிவிட்டுக் குளிக்கக் கிளம்பியபோது -

''குட்மார்னிங்...'' என்ற குரல் பக்கத்து அறைக்குள்ளிருந்து வந்தது. திரும்பிப் பார்த்தாள்.

கட்டிலினின்றும் போர்வையை விலக்கிக் கொண்டு புன்னகையோடு எழுந்தான் பிரகதீஷ்.

நாகராஜனின் மகன்.

காலேஜ் இளைஞனுக்கான தோரணைகள் இன்னும் விலகாமலிருக்க, படிப்பை எப்போதோ முடித்திருந்தான். வேலைக்காக முயற்சித்து தளர்ந்து போய் பாக்கெட்



மணிக்காக அம்மாவிடமும், அப்பாவிடமும் மாற்றி மாற்றிப் பல்லைக் காட்டிக் கொண்டிருந்தான். எதிரே இருக்கும் செக்டார்களில் இருக்கும் சீக்கியப் பெண்களை மானசீகமாகக் காதலித்து, கனவுகளில் டூயட் பாடிக் கொண்டிருந்தான்.

சுசித்ரா புன்னகைத்து, ''குட்மார்னிங்,'' என்றாள்.

''குளிக்க கிளம்பிட்டீங்க போலிருக்கு?''

''ஆமா... ட்யூட்டிக்கு நேரமாச்சு. குளிச்சுட்டு சீக்கிரமா கிளம்பணும்.''

''பைக்ல டிராப் பண்ணட்டுமா?''

''நோ, தேங்க்ஸ்.''

சொல்லிவிட்டு, பாத்ரூமை நோக்கி வேகமாகப் போனாள். பத்து நிமிஷத்தில் குளித்து, பங்கஜம் தட்டில் போட்டு நீட்டிய உப்புமாவைச் சாப்பிட்டு ஹேண்ட் பேக்கோடு வாசலைத் தாண்டும்போது -

''சுசித்ரா...'' நாகராஜனின் குரல். நின்றாள்.

''நடம்மா. நானும் பஸ் ஸ்டாப் வரைக்கும் வர்றேன்...''

''எதுக்கு அங்க்கிள்?''

''உன்கூடக் கொஞ்சம் பேசணும்...''

இரண்டு பேருமாய் நடந்தார்கள். ஒரு நிமிஷ மௌன நடைக்குப் பின் நாகராஜன் அவளை மறுபடியும் கூப்பிட்டார்.

''சுசித்ரா...''

''சொல்லுங்க அங்க்கிள்...''

''எப்படிச் சொல்றதுன்னு கஷ்டமா இருக்கு...''

''எதுவா இருந்தாலும் சொல்லுங்க அங்க்கிள்...''

''பிரகதீஷ் என் மகன்தான். இருந்தாலும் அவனோட போக்கு, குணம் சரியில்லை. எல்லாக் கெட்ட பழக்கமும் அவன்கிட்டே இருக்கு. எவ்வளவோ கண்டிச்சு பார்த்துட்டேன். முடியலை. பங்கஜம் அவன் மேலே ரொம்பவும் பாசமா இருக்கா. இல்லேன்னா என்னிக்கோ அவனை அடிச்சுத் தொரத்தியிருப்பேன். நீ அவனோட விஷயத்துல கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும். அவன்கிட்டே அதிகமா பேச்சு வெச்சுக்காதே,

ஜாக்கிரதை!''

'ஒரே வீட்டுக்குள் எந்த அளவு ஜாக்கிரதையைக் கடைப்பிடிக்க முடியும்?' -சுசித்ராவின் மனசில் ஒரு பயம் எழுந்தது.

எகிப்து தேசத்து ராணி பர்வீன், மன்னன் பாரூக் கொஞ்சமும் சந்தேகப்படாத வகையில் புரட்சிப் படையினருடன் ரகசியமாக ஆலோசனை நடத்திக் கொண்டே தன் அதிகாரத்தையும் பலப்படுத்திக் கொண்டாள். அரண்மனையிலும் ராணுவத்திலும் புரட்சிப் படையினரில் பெரும்பாலானோர் சேர்க்கப்பட்டனர். பழைய வீரர்கள் மாற்றப்பட்டனர். பெரிய பெரிய அதிகாரிகளாலும் அமைச்சர்களாலும் பர்வீனை எதிர்த்து ஒன்றும் செய்ய முடியவில்லை. பாரூக் மன்னனுக்கு மிகவும் விசுவாசமிக்க ராணுவ ஜெனரல் நசீப்பே பர்வீனிடம் புரட்சிப் படைக்கு தலைமை வகிக்க சம்மதித்தது தான் ஆச்சரியம் என்கிறது வரலாறு. பர்வீன் தன் அழகை பரிமாறித் தான் நசீப்பை சம்மதிக்க வைத்தாள் என்கிற சந்தேகம் வரலாற்று மூலையில் இன்னும் பதுங்கி நிற்கிறது. அது உண்மையோ பொய்யோ, பர்வீன் என்ற பேரழகி எகிப்து நாட்டின் தலைவிதியையே மாற்றிய புரட்சிக்கு வித்திட்டாள் என்பது மட்டும் உண்மை. புரட்சி வெடித்தது. மன்னன் பாரூக் பதவி இழந்த நிலையில் பக்கத்து தேசத்துக்கு துரத்தப்பட்டான்.



8

ஜீப் நாற்பதில் போய்க் கொண்டிருந்தது. ஸ்டியரிங் வீல் பல்பீரின் வசம் இருந்தது. அவருக்கு வலது பக்கம் நரேந்தர் சிங் பக்கக் கம்பியைப் பிடித்துக் கொண்டு இலகுவான ஒரு போசில் உட்கார்ந்திருந்தார்.

பத்து நிமிஷங்கள் ஜீப்பின் வேகத்தில் கரைந்து போக, அந்த 'பி' டைப் வீட்டின் முன்னால் வந்து நின்றார்கள்.

உள்ளே நடந்தவர்களுக்கு இரண்டு பக்கமும் வளர்ந்திருந்த கனகாம்பரச் செடிகள் அணிவகுப்பு மரியாதை அளித்தன.

திறந்து வைத்திருந்த ஒரு பக்கக் கதவின் மேல் தட்டினார்கள்.

''டொக்... டொக்... டொக்...''



உள்ளேயிருந்து அந்தப் பெண் பிரசன்னமானாள். ரோஸ் நிற சல்வார் கம்மீஸில் பிதுங்குகிற சதையோடு நிறைந்திருந்தாள். வகிடு நிறைய குங்குமம் இட்டிருந்தாள். காதில் வெள்ளி சமாச்சாரம்.

''கோன் சாஹியே...?'' பார்த்து மிரண்டு கொண்டே கேட்டாள்.

''கேசவ் வீடு இதுதானே?''

நரேந்தர்சிங்கும் இந்திக்குத் தாவினார்.

''ஆமா...''

''அவரைக் கொஞ்சம் கூப்பிடறீங்களா?''

''ஒரு நிமிஷம். உள்ளே வந்து உட்காருங்க...'' சொல்லிவிட்டு பதட்டமாய் உள்ளே ஓடினாள்.

நரேந்தர்சிங்கும், பல்பீரும் பாலிமர் இருக்கைகளில் நிறைந்தார்கள். சுற்றுச்சுவர் பூராவும் சதுர சதுர போஸ்டர்கள். ஸ்டெதாஸ்கோப்போடு குழந்தை - ஒரு சிம்பன்ஸி குரங்கு, பனிவிழும் இமாலய மலைப்பிரதேசம், மிரண்டு நிற்கும் மான்கள் கூட்டம், கையில் குத்துவிளக்கோடு புன்னகைக்கும் மார்வாடிப் பெண்...

''வாங்க இன்ஸ்பெக்டர்...''

வரவேற்றபடியே உள்ளறைக்குள்ளிருந்து வந்தார் கேசவ். எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

''என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்?''

''சைபர்தரா கொஞ்சம் விசாரிக்க வேண்டியிருக்கு...''

''வெல்கம்...''

''உங்களுக்கும், சரவணனுக்கும் இடையில உறவு எப்படி?''

கேசவ்வின் முகத்தில் ரத்தம் தொலைந்தது.

''ஏன் அப்படிக் கேக்கறீங்க?''

''ப்ளீஸ், எங்க கேள்விக்கான பதிலை மட்டும் சொல்லுங்க, போதும்...''

''சுமுகமாத்தான் இருந்தது...''

''அப்படி இருந்ததா தெரியலையே?''

''இன்ஸ்பெக்டர் நீங்க என்ன சொல்றீங்க?''

''நாங்க கேள்விப்பட்டதை சொல்றோம்.''

''என்ன கேள்விப்பட்டீங்க?''

''அவருக்கும் உங்களுக்கும் டெர்ம்ஸ் சரியில்லையாமே? அடிக்கடி வாக்குவாதம் வருமாமே?''

நிமிர்ந்தார் கேசவ். அடிபட்ட பார்வை பார்த்தார்.

''சொல்லுங்க. அவருக்கும் உங்களுக்கும் இடையே வாக்குவாதம் வருமா?''

தயக்கத்தோடு தலையசைத்தார்.

''வரும்.''

''அப்புறம் ஏன் உறவு சுமுகமாத்தான் இருந்ததுன்னு பொய் சொன்னீங்க?''

''நான் பொய் சொல்லலியே?''

''நீங்க சொன்னதுக்கு என்ன அர்த்தம்?''

''இன்ஸ்பெக்டர்! இப்பவும் சொல்றேன். எங் ரெண்டு பேருக்கும் இடையில உறவு சுமுகமாத்தா இருந்தது. ஆனால் நாங்க ரெண்டு பேரும் அடிக்க வாக்குவாதம் பண்ணிக்குவோம்.''

''நீங்க சொல்றது எங்களுக்குப் புரியலை.''

''சரவணன் பிசினெஸ் விஷயமா சில தப் பண்ணுவார். அதை நான் எடுத்துச் சொல்லும்போ அவருக்குக் கோபம் வரும். அப்புறம் நிதான யோசிச்சுப் பார்த்து, நான் சொன்னதுதான் சரின் சமாதானமாயிடுவார். அதைச் சண்டைன்னு சொல் முடியுமா?''

''ஸோ, பிசினெஸ் வாக்குவாதம் தவிர வேறெது உங்களுக்கு இடையில இல்லை?''

''இல்லை...''

நரேந்தர்சிங் பாக்கெட்டினின்றும் ரெஜிதாவி ஃபோட்டோவை எடுத்தார். அவருக்கு முன் நீட்டினார்.

''இந்த ஃபோட்டோவைக் கொஞ்சம் பாருங்க...''

கேசவ் தன் பார்வையை அந்த பாஸ்போர்ட் சை ஃபோட்டோவுக்குக் கொடுத்தார்.

''இந்த ஃபோட்டோவிலிருக்கிற பெண்ணை நீ எங்காவது பார்த்திருக்கீங்களா?''

கேசவ் தன் புருவத்தைச் சுருக்கிக் கொண்டு கனம



யோசித்தார்.

''இந்தப் பொண்ணை...'' மோவாயை ஆள்காட்டி ரலால் தட்டிக் கொண்டே சொன்னார்.

''எங்கேயோ பார்த்த ஞாபகம் இருக்கு.''

''எங்கே பார்த்தீங்க?''

கேசவ் யோசிப்பதற்கு முழுசாய் ஒரு நிமிஷம் டுத்துக் கொண்டு நிமிஷத்தின் முடிவில் கையைச் சொடுக்கினார்.

''சரவணனைப் பார்க்க ஒரு பொண்ணு வந்ததா சான்னேனே... அது இந்தப் பொண்ணுதான் இன்ஸ்பெக்டர்.''

''இந்தப் பொண்ணு உங்க கடைக்கு வந்து எவ்வளவு ாள் இருக்கும்?''

''ஒரு மாசம் இருக்கும்...''

''அந்தப் பொண்ணும் சரவணனும் என்ன பசிக்கிட்டாங்க?''

''நான் கவனிக்கலை.''

''சரவணன் அந்தப் பொண்ணைப் பத்தி உங்ககிட்டே தாவது சொல்லியிருக்காரா?''

''சொன்னதில்லை...''

''நீங்களும் யார்னு கேக்கலையா?''

''கேக்கலை...''

''ஏன்?''

''அவரோட பர்சனல் விஷயங்கள்ல நான் ன்னிக்குமே தலையிடறதில்லை...''

''சரவணனைத் தேடி அந்தப் பெண் மட்டும்தான் ந்தாளா? இல்லை... வேற பெண்களும் அவரைத் தேடி ருவாங்களா?''

''அந்த ஒரு பெண் வந்ததை மட்டும்தான் ார்த்திருக்கேன்.''

கேசவ் ஒரு கல். இவரிடமிருந்து நாரை உரிக்க டியாது என்பதை உணர்ந்து கொண்ட இருவரும் ழுந்தார்கள். விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்து ாசலைத் தாண்டும்போது எதற்கோ திரும்பிய பல்பீரின் ார்வை வீட்டின் பக்கவாட்டில் பிளாஸ்டிக் கயிற்றில்

உலர்ந்து கொண்டிருந்த துணிகளின்மேல் பட்டது.

வரிசையாய் உலர்ந்து கொண்டிருந்த சர்ட்டுகளில் அந்த நாலாவது வெள்ளை சர்ட்டின் முதுகுப் பரப்பில் மண் தீற்றலாய்க் கறை தெரிந்தது.

'ரத்தக்கறையாக இருக்குமோ?' பல்பீர் யோசித்தார்.

கிளினிக் வாசலில் நுழைகிறபோதே யாரோ தன்னைக் கூப்பிட்ட மாதிரி உணர்ந்து திரும்பினாள் சுசித்ரா. பின்னால் புன்னகையோடு வருகிற நவீனா தெரிந்தாள்.

''குட்மார்னிங்...''

''குட்மார்னிங்.'' என்றாள்.

''என்ன சுசித்ரா, இன்னிக்கு ரொம்ப சீக்கிரமாவே வந்தாச்சு?''

சுசித்ரா புன்னகைத்தாள்.

''வேலை சீக்கிரம் முடிஞ்சுது. பஸ்ஸும் நேரத்துக்குக் கிடைச்சது''

''வந்ததுமே மோசமான எக்ஸ்பீரியன்ஸ் நிறையக் கிடைச்சிருக்கு போலிருக்கே?''

''ஆமா! டிரெயின்ல பழகின பாவத்துக்கு இப்ப நான் மாட்டிக்கிட்டேன். போலீஸ் என்கொயரி ஒரு பக்கம்! கொலையாளி மிரட்டல் கடிதம் ஒரு பக்கம்!''

''போலீஸ் சரி பண்ணிடுவாங்க...''

''நானும் அப்படித்தான் நம்பிட்டிருக்கிறேன்...''

சிரிப்போடு சொல்லிக் கொண்டே சுசித்ரா போர்டிகோ படிகளில் ஏறினாள்.

ஸ்டாஃப் ரூமுக்குப் போனதும் நர்ஸ் யூனிஃபார்முக்குள் மாறிக் கொண்டாள்.

நவீனாவிடம் இன்ஸ்ட்ரக்ஷன்களைக் கேட்டுக் கொண்டாள். டாக்டரோடு ரவுண்ட்ஸ் போய்விட்டு, தன் அறைக்குத் திரும்பியபோது-

சுசித்ராவைத் தேடிக்கொண்டு அந்த ஆஸ்பத்திரி சிப்பந்தி வந்தான்.

''ஸிஸ்டர்...''

''என்ன?''



''உங்களுக்கு ஒரு ஃபோன் வந்திருக்கு...''

''எனக்குன்னா சொன்னாங்க?''

''ஆமாம்...''

சுசித்ரா திகைப்பும், குழப்பமுமாய் நடந்தாள்.

'ஃபோன் பண்ணக்கூடிய அளவுக்கு இங்கே எனக்கு யார் இருக்கிறார்கள்? ஏதாவது ராங் காலாக இருக்குமோ? அல்லது...? இன்ஸ்பெக்டர் நரேந்தர்சிங் எதற்காவது ஃபோன் பண்ணியிருக்கிறாரோ என்னவோ?'

வராந்தாவில் நீளமாய் நடந்து திரும்பினாள்.

ரிசப்ஷன் ஹால் விஸ்தாரமாய் விரிந்தது.

முக்கால்வட்ட ரிசப்ஷன் மேஜை மேல் ஒருக்களித்துப் படுத்திருந்த ரிசீவர் தெரிந்தது.

புத்தகம் படித்துக் கொண்டிருந்த அந்த ரிசப்ஷனிஸ்ட் சட்டென தலையைத் தூக்கி, புன்னகையோடு சொன்னாள்.

''உங்களுக்குத்தான் ஃபோன்.''

''தாங்க்யூ...''

ரிஸீவரைக் காதில் பொருத்தினாள்.

''ஹலோ...''

மறுமுனையில் ஓர் ஆண்குரல் கேட்டது.

''சுசித்ராவா?''

''ஆமா. நீங்க யாரு?''

சின்னச் சிரிப்புடன் குரல் சொன்னது.

''நான் பிரகதீஷ்!''

''நீங்களா? என்ன வேணும்?''

மனசுக்குள் நாகராஜனின் எச்சரிக்கை ஓடியது.

''ஒண்ணுமில்லை. என் ஃப்ரெண்ட் வீட்டுக்கு வந்தேன். ஃபோனைப் பார்த்ததும் உங்களுக்கு ஃபோன் பண்ணினா என்னான்னு தோணிச்சு. பண்ணினேன்.''

சுசித்ரா எரிச்சலாய் ரிஸீவரைப் பார்த்தாள்.

''மிஸ்டர் பிரகதீஷ்...''

''மிஸ்டர் தேவையில்லை. பி ஃப்ரெண்ட்லி!''

பிரகதீஷ் சிரித்தான்.

''இது என்னோட ட்யூட்டி டயம். தெரிஞ்சுதா?''

''தெரியுமே... ஸோ வாட்?''

''அனாவசியமா ட்யூட்டி நேரத்தில தொந்தரவு

கொடுக்கிறது எனக்குப் பிடிக்காது. தயவுசெய்து இனிமே இப்படி ஃபோன் பண்ணித் தொந்தரவு குடுக்காதீங்க..."

"அப்ப ட்யூட்டி முடிஞ்சதும் உங்களைச் சந்திக்கலாமா?"

"ரிஸீவரை வெச்சுடுங்க. டாக்டர் வர்றார்."

பொய்யைச் சொல்லிவிட்டு ரிஸீவரைச் சாத்தினாள் சுசித்ரா.



1963 ஆம் ஆண்டின் துவக்கம் அது. நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளைக் கட்டியாண்ட இங்கிலாந்து பேரரசே கதிகலங்கிப் போனது. பிரதமராக இருந்த மாக்மில்லனின் மந்திரிசபை ஆட்டம் கண்டது. ராணுவ அமைச்சர் ஜான் புரொபியூமா தன் பதவியை ராஜினாமா செய்து விட்டு ஓட்டம் பிடித்தார். எலிசபெத் ராணியே சஞ்சலத்தில் மூழ்கினார். இத்தனைக்கும் காரணம் ஆனி கிறிஸ்டின் கீலர் என்ற 21 வயதே ஆன இளம் அழகி தான். யார் அவள்? (10ம் அத்தியாயத்தில் அவள் இருக்கிறாள்)

9

பட்டுப்புடவைக்குள் நுழைந்திருந்த பங்கஜத்தோடு ஷிஃபானிலிருந்த சுசித்ரா நடந்து கொண்டிருந்தாள். அகலமான சாலை இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சாலைக்கு நடுவில் ஆங்கில எழுத்து "Y" மாதிரி ஷேப்பில் இரண்டு பக்கமும் வெளிச்சம் கொடுக்கிற வசதியோடு எலெக்ட்ரிக் போஸ்ட்டர்கள் நெடுக்கத்துக்கு இறக்கை விரித்துக் கொண்டு தெரிந்தது.

"ஆன்ட்டி, நாம இப்போ எங்கே போறோம்? ஏதோ கோவிலுக்குன்னு சொன்னீங்க? என்ன கோவில்?"

"முருகன் கோவிலுக்கு..."

"இங்கேகூட முருகன் கோவில் இருக்கா?"

பங்கஜம் புன்னகைத்தாள்.

"என்ன இப்படிக் கேக்கறே? இந்த ஊர்ல குறைஞ்சது பத்து பர்சன்ட்டாவது நம்ம ஆட்கள் இருப்பாங்க. ஒரு தமிழ்ச் சங்கத்தோட முயற்சிதான் அந்தக் கோவில்..."

மாருதி கார்கள் ஊர்கிற பனிக்கட்டிகளாய் அவர்களைக் கடந்து போயின. சாலையில் ஏராளமாய் டூவீலர்கள் நீந்தின. பிளாட்ஃபாரத்தை ஒட்டிய மரங்களுக்குக் கீழே ஜனங்கள் நடந்து போனார்கள். முன்னூறு மீட்டர்களை நடை விழுங்கியிருந்தபோது, அந்த வலது திருப்பம் வந்திருந்தது.



அந்தத் திருப்பத்தில் பிரவேசித்து ஒரு பத்து நிமிஷங்கள் நடையைத் தொடர்ந்திருப்பார்கள்.

அந்தச் சின்னக் குன்று தெரிந்தது. உச்சியில் சின்ன கோபுரம். மேலே போகக்கூடிய படிக்கட்டுகள் ஒயிட் வாஷ் அணிந்து தெரிந்தன. முன்புறம் சின்ன போர்டு **'அருள்மிகு முருகன் திருக்கோவில்'** என்று தமிழ் பேசியது.

இந்தி பிரதேசத்திலிருந்த அந்த தமிழ்க் கோவில் ஜனத்திரள் ஆரவாரம் எதுவுமில்லாமல் மௌனம் காத்துக் கொண்டிருந்தது. குன்றைச் சுற்றிலும் நிறைய மரங்கள் தெரிந்தன. மரங்களுக்குப் பின்னால் பளீரென்ற நீலவானம்.

"என்ன ஆன்ட்டி... கூட்டத்தைக் காணோம்?"

"ஏதாவது விசேஷம்னா தவிர இங்கே கூட்டம் இருக்காதும்மா..."

படிகளில் உயர ஆரம்பித்தார்கள். சற்று உயரமான படிக்கட்டுகள். ஒவ்வொரு படிக்கட்டிலும் உபயம் செய்தவரின் பெயர் தெரிந்தது.

பத்துப் படிகள் ஏறினபோதே பங்கஜம் மூச்சு வாங்க ஆரம்பித்தாள்.

'உஸ்...' என்ற பெரிய மூச்சோடு காலைப் பிடித்துக் கொண்டு ஒரு நிமிஷம் நின்றாள். திரும்பிப் பார்த்த சுசித்ராவின் உதடுகளில் ஒரு புன்னகை உட்கார்ந்தது.

"என்ன ஆன்ட்டி, பத்தாவது படியிலேயே காலைப் பிடிச்சுட்டு நின்னுட்டீங்க?"

பங்கஜம் சிரித்தாள்.

"இப்பவெல்லாம் முடியறதில்லை. நின்னு நின்னு மெல்லத்தான் மலை ஏற முடியுது. என்ன வயசு பதினாறா? நாப்பதாச்சு, தெரியுமா?"

தொடர்ந்து ஏற ஆரம்பித்தார்கள். இரண்டு தடவை பங்கஜத்துக்காக நின்று நின்று ஏறின சுசித்ரா புது

இடத்தைப் பார்க்கிற ஆர்வத்தில்-

''ஆன்ட்டி, நீங்க நிதானமா ஏறிவாங்க. நான் மேலே போய் நிக்கறேன்.'' என்றாள்.

''சரி, போய் நில்லு.''

சுசித்ரா படிகளில் தடதடக்க ஆரம்பித்தாள். பாதி உயரத்தை எட்டி இருந்தபோது தூரத்து-சண்டிகார் படு ரம்யமாகக் கண்களில் விழுந்தது. வாகனங்களின் கேவல்கள்; பெட்டி பெட்டியான செக்டார்கள்.

மனசுக்குள் ரசித்துக் கொண்டே மளமளவென்று மேலே உயர்ந்தாள். அதே நிமிஷம்-

படிக்கட்டை ஒட்டின அடர் செடிகளில் ஒரு சளசளப்புச் சத்தம் கேட்க, சட்டென்ன விலகி, திரும்பிப் பார்த்தாள்.

தண்டுவடத்தின் உச்சியில் ஒரு பயக்குளிர் தொற்றியது. அந்தச் செடியின் அடர்த்தியிலிருந்து-

ஒரு சர்தார்ஜி இளைஞன் விருட்டென எழுந்தான். உயரம் குறைந்த உடம்பு. பாதி முகத்தை தாடியும், மீசையும் தத்தெடுத்திருக்க, கண்களில் கறுப்புக் கண்ணாடி தொற்றியிருந்தது.

'யார் இவன்?'

'சுசித்ரா யோசிப்பதற்குள்-

தீப்பற்றின மாதிரி அவள் மேல் பாய்ந்தான். வியர்த்து விலகின சுசித்ரா, சத்தமிட வாய் திறக்கும் முன்பாக அவளின் கழுத்துப் பகுதியில் கைகளை இறுக்கமாய்ப் பதித்தான்.

நெறிக்க்க ஆரம்பித்தான்.

அவனுடைய கைகளின் இறுக்கத்தில் மூச்சுத் திணறினாள் சுசித்ரா. நாக்கு வெளித்தள்ள பார்த்தது. கண்களுக்குள் மரணவலி துள்ளியது. கைகளால் அவனுடைய கைகளைப் பற்றி விடுவித்துக் கொள்ள முயன்று தோற்றுக் கொண்டிருந்தாள்.

பிதுங்கின விழிகளோடு பங்கஜம் வருகிறாளா என்று படிக்கட்டின் சரிவைப் பார்த்தாள்.

கண்களில் பங்கஜம் படவில்லை.

சுசித்ராவுக்குப் பார்வை இருட்டிக் கொண்டு வர



ஆரம்பித்தது.

'தீர்ந்தோம்! இந்த முருகன் மலைக்கோவில் படிக்கட்டுகளில் உயிரை விடப் போகிறோம்...'

சுசித்ரா தீர்மானித்த அதே வினாடியில் படிக்கட்டுகளில் யாரோ ஓடிவரும் சத்தம். சுசித்ரா பிரயாசைப்பட்டு கண்களைத் திறந்து பார்த்தாள்.

மூன்று மூன்று படிகளாய்த் தாவிக் கொண்டு வருகிற பிரகதீஷ் தெரிந்தான். ஜெர்க்கின் கோட் சடசடக்க ஏறிவந்த அவனைப் பார்த்ததும் சுசித்ராவை உதறிவிட்டான் சர்தார்ஜி இளைஞன்.

அதே பக்கவாட்டுச் செடிகளுக்குத் தாவப் போன வினாடி-

பிரகதீஷ் அவனின் ஷர்ட் காலரை எட்டிப் பிடித்தான். தடுமாறிப் போய் சுழன்று திரும்பின அந்த சர்தார்ஜி, திரும்பின வேகத்திலேயே பிரகதீஷின் வயிற்றுப் பகுதியில் கையை ஒரு வீசு வீசினான்.

ஒரிஜினல் கராத்தே வெட்டு.

நிலைதடுமாறின பிரகதீஷ் சமாளிப்பதற்குள் இன்னும் இரண்டு மூன்று தற்காப்புத் தாக்குதல்கள். விழுந்த பிரகதீஷ் படிகளில் உருளாமல் இருக்க பிரயத்தனப்பட்டு எழ முயன்ற வினாடிகளின் இடைவெளிகளில்-

அந்த சர்தார்ஜி இளைஞன் செடிகளின் அடர்த்தியில் பாய்ந்து, சலசலப்புச் சத்தங்களோடு ஓடி நிமிஷத்தில் மறைந்து போனான்.

பிரகதீஷ் எழுந்து கோட்டிலிருந்த தூசியைத் தட்டிக் கொண்டிருந்தபோது பங்கஜம் மூச்சு வாங்கலோடு மேலே வந்து சேர்ந்திருந்தாள்.

''என்னடா ஆச்சு?''

பிரகதீஷ், பங்கஜத்துக்குப் பதில் சொல்லாமல் சுசித்ராவைக் கேட்டான்.

''யார் சுசித்ரா அவன்?''

சுசித்ரா கழுத்துப் பாகத்தை தடவிக் கொண்டே சொன்னாள்.

கேட்ட பிரகதீஷ், நிஜமான கோபத்தோடு அவளைத்

திட்டினான்.

''உங்களுக்கு மிரட்டல் கடிதம் அது இதுன்னு வந்துட்டிருக்கிற இந்த சமயத்துல நீங்க இந்த மாதிரி தனியான இடத்துக்கெல்லாம் வரலாமா? வீட்டுக்குப் போயிருந்தேன். நீங்களும் அம்மாவும் கோயிலுக்குப் போயிருக்கிறதா அப்பா சொன்னாங்க. சரின்னு புறப்பட்டு வந்தேன். அவன் கராத்தே தெரிஞ்ச ஆசாமியா இருக்கான். என்னால சமாளிக்க முடியலை.''

நடந்ததை அவர்கள் இரண்டு பேர் மூலமாகக் கேள்விப்பட்ட பங்கஜம் கண்கள் இரண்டையும் அகலமாக விரித்து, பதற்றமானாள்.

அவசர அவசரமாய் மலையேறி, மனசு பதியாமல் முருகனைக் கும்பிட்டார்கள். கும்பிட்டதும் உடனே இறங்க ஆரம்பித்தார்கள்.

இறங்க இறங்க, சுசித்ரா சொன்னாள்.

''இதை உடனடியா போலீஸ்ல இன்ஃபார்ம் பண்ணனும்.''

''ஊர் விட்டு ஊர் வந்து உனக்கேம்மா... இந்தப் பொல்லாப்பெல்லாம்.'' பங்கஜம் சொல்ல, பிரகதீஷ் குறுக்கிட்டான்.

''ஒரு கொலை முயற்சி நடந்திருக்கு. உடனே இதைப் போலீஸ்ல ரிப்போர்ட் பண்ண வேண்டாமா?'' சொல்லிவிட்டு சுசித்ராவின் பக்கம் திரும்பினான்.

''அம்மாவை டவுன் பஸ்ல ஏத்தி விட்டுட்டு, நாம இப்போ போலீஸ் ஸ்டேஷன் போகலாம்.''

**போ**லீஸ் ஸ்டேஷனுக்குள் சுசித்ராவும், பிரகதீஷும் நுழைந்தார்கள்.

நேர் இருக்கையில் நரேந்தர் சிங்கை எதிர்கொண்டார்கள். பக்கத்து அறையிலிருந்து கையில் ஒரு ஃபைலோடு வெளிப்பட்ட பல்பீர், சுசித்ராவைப் பார்த்ததும் தாடிக்குள் புன்னகைத்தார்.

''மிஸ் சுசித்ரா...'' என்றார்.

நரேந்தர்சிங்கும் நிமிர்ந்து பார்த்து புன்னகைத்தார்.

உட்கார அவர் காட்டின நாற்காலியில் சாய்ந்தார்கள்.



கூட இருந்த பிரகதீஷைப் பார்த்து கேட்டார்.

''இவர்...?''

சுசித்ரா அவருக்கு பிரகதீஷை அறிமுகப்படுத்தி வைத்ததும், அவர் கேட்டார்.

''என்ன விஷயம்?''

பிரகதீஷ் குறுக்கிட்டு சொன்னான்.

''இன்ஸ்பெக்டர்! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி மிஸ்.சுசித்ராவைக் கொலை பண்ண முயற்சி நடந்தது...''

''கொலை முயற்சியா? எங்கே, எப்படி?''

''முருகன் கோவிலில் இன்ஸ்பெக்டர். நானும் ஆன்ட்டியும் போயிட்டிருந்தோம்...''

நடந்த விவரங்களைச் சொன்னாள் சுசித்ரா.

''உங்களைத் தாக்க வந்தவனை நீங்க பார்த்தீங்களா?''

''பார்த்தேன் இன்ஸ்பெக்டர்...''

''இன்னொரு தடவை அவனைப் பார்க்க நேரிட்டா அடையாளம் சொல்லிடுவீங்களா?''

''நிச்சயமா சொல்லிடுவேன் இன்ஸ்பெக்டர்.''

''அவன் எப்படி இருந்தான்?''

''சர்தார்ஜி இளைஞன் இன்ஸ்பெக்டர். கூலிங்கிளாஸ் போட்டிருந்தான். ஏறக்குறைய என்னோட உயரம் இருந்தான். கையில் க்ளவுஸ் போட்டிருந்தான்...''

''பிரகதீஷ், நீங்க அவனைப் பார்த்தீங்களா?''

''சரியா பார்க்க முடியலை இன்ஸ்பெக்டர். அவனோட கராத்தே தாக்குதலை என்னால சமாளிக்க முடியலை...''

நரேந்தர்சிங் அடுத்த கேள்விக்காக வாயைத் திறந்தபோது மேஜை மேலிருந்த டெலிபோன் கதறியது.

பல்பீர் ரிஸீவரை எடுத்தார்.

''ஹலோ...''

''......''

''யெஸ்...''

''......''

மறுமுனை விஷயத்தைச் சொல்லச் சொல்ல, படிப்படியாய்-

பல்பீரின் முகம் குழப்பத்திற்குப் போனது.

அவள் ஒரு மாடல் அழகி. லண்டன் மாநகரிலிருந்து 300 மைலுக்கு அப்பாலிருந்த ரேஸ்பார்ரி என்ற கிராமத்தில் வறுமையின் பிடியில் வாழ்ந்து வந்தவள். தாயும் தந்தையும் சிறைக்குச் சென்றுவிட வீட்டிலிருந்த பத்து பவுண்ட் பணத்தை எடுத்துக் கொண்டு லண்டனுக்கு வந்தாள். மிஸ். கீலர் என்று தன்னை கூறிக்கொண்டு ஒரு துணிக் கடையில் வேலை பார்த்தவளுக்கு அடுத்தடுத்து வந்த சிலரின் நட்பால் டாக்டர் வார்டு என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது. அவளின் அழகில் மயங்கிய டாக்டர் வார்டு அவளை தன்னுடனேயே தங்க வைத்துக் கொண்டார். பெரிய பெரிய அதிகாரிகளுக்கெல்லாம் சிகிச்சையளித்து அவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த டாக்டர் வார்டு ஒருமுறை பெரிய அரசு விருந்திற்கு கீலருடன் சென்றார். அங்கு ராணுவ அமைச்சர் புரொபியூமாவும் வந்திருந்ததுதான் இங்கிலாந்து பேரரசுக்கு கெட்ட நேரத்தை துவக்கி வைத்தது. (11ம் அத்தியாயத்திற்கு சீக்கிரம் வாருங்கள்)




பல்பீர் ரிஸீவரைச் சாத்தியதும் நரேந்தர் சிங் கேட்டார்: ''போன் எங்கிருந்து பல்பீர்?''

''கேசவ் கிட்டேயிருந்து.''

''என்ன விஷயம்?''

''யாரோ ஒரு மர்ம ஆசாமி கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அவரோட வீட்டுக்கு வந்தானாம். ஜன்னல் வழியா கத்தியை எறிஞ்சுட்டுப் போனானாம்.''

நரேந்தர் சிங் தொப்பியைத் திருத்திக் கொண்டு எழுந்தார்.

''மிஸ்டர் பிரகதீஷ்! நீங்களும் சுசித்ராவும் ஒரு கம்ப்ளெயிண்ட் எழுதிக் கொடுத்திட்டு வீட்டுக்குப் போங்க. சுசித்ராவுக்கு செக்யூரிட்டி காப்ஸ் போட ஏற்பாடு பண்றேன்.''

''தாங்க்யூ இன்ஸ்பெக்டர்.''

நரேந்தர் சிங்கும், பல்பீரும் ஜீப்பைப் பார்த்து நடந்தார்கள்.

பதினைந்து நிமிட ஜீப் பயணம். வீட்டின் முன்வாசல் நிலையில் நின்றிருந்த கேசவ் வேகவேகமாய் வந்தார்.



''வாங்க இன்ஸ்பெக்டர்.''

''என்ன ஆச்சு?''

உள்ளே நடக்க... நடக்க... அவர் சொன்னார்:

''கதவெல்லாம் சாத்திட்டு வீட்டிலே எல்லோருமே டி.வி. பார்த்துட்டு இருந்தோம். திடீர்னு பக்கத்து ரூம்ல ஏதோ சத்தம் கேட்டது. என்னன்னு பார்க்க நான் போனேன். பக்கவாட்டு ஜன்னல் வழியா எவனோ தெரிஞ்சான். கையை ஜன்னலுக்குள் நுழைச்சு எதையோ வீசிட்டிருந்தான். என்னைப் பார்த்ததும் ஓடிட்டான். லைட் போட்டுப் பார்த்தப்போ ஒரு கத்தியை ஜன்னல் வழியா போட்டுட்டு ஓடியிருக்கிறது தெரிஞ்சது.''

''ஆளைப் பார்த்தீங்களா?''

''இருட்டிலே சரியா பார்க்கலை. ஆனா தலையிலே டர்பன் தெரிஞ்சது.''

''அவன் வந்த ரூம் எது?''

கொஞ்சம் தள்ளி இருந்த அறைக்குள் கூட்டிப்போனார் கேசவ்.

''இந்த ரூம் தான் இன்ஸ்பெக்டர்.''

சின்ன அறை. எழுதப் படிக்க பயன்படும் அறைபோல தெரிந்தது ஒரு டேபிள் சேர், டேபிளின் மேல் லாம்ப், கவிழ்ந்த புத்தகம் கண்ணில் அடித்தது. சுவரில் ஒரு ஷெல்ப். அதில் புத்தகங்களின் அணிவகுப்பு.

''எந்த ஜன்னல் வழியா கத்தியைப் போட்டான்?''

''அதோ அந்த ஜன்னல் தான்.''

ஜன்னலுக்கு வெளியே இருட்டு கொட்டிக் கிடந்தது. ஜன்னலின் ஓரமாய் சுவரை ஒட்டி விழுந்து கிடந்த அந்தக் கத்தி தெரிந்தது. இருபது இருபத்தைந்து செ.மீ. நீளம் இருக்கக் கூடும். அருகே போய்க் குனிந்தார் பல்பீர்.

முழுக் கத்தியிலும் ரத்தம் தோய்ந்து செங்காவி அடித்துக் கிடந்தது. கர்ச்சீப்பால் எடுத்துப் பத்திரப்படுத்தினார்.

''கொலைப் பழியைக் கேசவ் மேல் போடற முயற்சியா இருக்கலாம்.''

''மே பி ஸார்!''

''சரவணனோட உயிரை வாங்கின கத்தியா.

இருக்கலாம்.''

வீட்டினின்றும் வெளியே வந்து வெளிப்பக்கமாக அந்த ஜன்னலோரத்தைத் தொட்டார்கள்.

''கேசவ்! டார்ச்லைட் இருக்குமா?''

''ஒரு நிமிஷம்.''

உள்ளே போய் டார்ச் லைட்டோடு திரும்பிவந்தார் கேசவ். நரேந்தர் சிங்கிடம் நீட்டினார்.

நரேந்தர் சிங் அதை வாங்கி உயிர்ப்பித்தார். வெளிச்சக் கொத்தை ஜன்னலுக்குக் கீழே இறைத்தார். மண் தரை. வரிசையாய் நிறைய காலடிச் சுவடுகள் தெரிந்தன.

''பல்பீர்... நிறைய ஃபுட் பிரிண்ட்ஸை விட்டுட்டுப் போயிருக்கான்.''

''கலெக்ட் பண்ண ஏற்பாடு பண்ணிடறேன், சார்.''

''ஆசாமி எந்தப் பக்கம் ஓடினான், கேசவ்?''

''பின்பக்கம் ஸார்.''

''பின்பக்கம் வீடு இருக்கா?''

''இல்லை. வெறும் கிரவுண்ட்''

பத்து மணியில் கடிகாரம் நொண்டிக் கொண்டிருந்தபோது பல்பீரும், நரேந்தர் சிங்கும் அந்தப் போலீஸ் ஸ்டேஷன் வாசலை மிதித்திருந்தார்கள். உள்ளே பிரவேசித்தபோது அந்த இளம் இன்ஸ்பெக்டர் வரவேற்றார். சர்ட்டில் **ரதீஷ்** என்ற நேம் பாட்ஜ் தெரிந்தது பஞ்சாபியில் ஆச்சரியமாய்க் கேட்டார். ''என்ன இந்தப் பக்கம் திடீர் விஜயம்?''

புன்னகையோடு இருக்கைகளில் நிரம்பினார்கள்.

''ஒரு சூயிஸைட் கேஸ் விஷயமா சில விவரங்கள் வேணும்.''

''எந்தக் கேஸ்?''

''ரெஜிதான்னு ஒரு பொண்ணு ரயில்வே கிராஸிங்லே செத்துப் போனது. ஒரு மாசம் முன்னாடி.''

''ஒரு நிமிஷம்.''

இருக்கையினின்றும் எழுந்துபோய் ஷெல்ஃபைத் தொட்டார். திறப்பைத் தள்ளினார். ஃபைல்கள் நிறம்



நிறமாய் நிரம்பிக் கிடந்தன. விலக்கி விலக்கித் துழாவினார். ஒரு ஃபைலை உருவியெடுத்தார். மீண்டும் இருக்கைக்குத் திரும்பினார்.

''என்ன விவரம் வேணும்?''

''கேஸ் ஹிஸ்டரி கம்ப்ளீட்டா வேணும் ரதீஷ்.''

அந்த ரதீஷ் ஃபைலைப் புரட்டிப் பார்த்துவிட்டுச் சொன்னார்.

''ராஜீவ்னு ஒருத்தர் போன மாசம் சிஸ்டரைக் காணோம்னு ரிப்போர்ட் பண்ணினார். சிஸ்டர் எழுதி வச்சுட்டுப் போன லெட்டர் ஒண்ணைக் காட்டினார். ஸர்ச் பண்ணிட்டிருந்தபோது ஸ்டேஷன் பக்கத்தில் ரயில்வே ட்ராக்கில் அந்தப் பொண்ணோட பாடி கிடைச்சது.''

''எப்படித் தெரிஞ்சது அந்தப் பொண்ணோட பாடிதான்னு?''

''பக்கத்திலே இருந்த சூட்கேஸ் அந்தப் பொண்ணுடையது. கட்டியிருந்த புடவை இதையெல்லாம் வச்சு அது அந்த ராஜீவுடைய சிஸ்டர் தான்னு முடிவு பண்ணி கேஸை க்ளோஸ் பண்ணினோம்.''

கேஸ் ஃபைலை வாங்கிக் கொஞ்ச நேரம் புரட்டிப் பார்த்தார் நரேந்தர் சிங். பல்பீர் சொன்னார்:

''ஸர்! சரவணன் மர்டர் கேஸ்லே ரெண்டு பேரை சஸ்பெக்ட் பண்ணினோம். அதில் கேசவ் விலகிட்டார். சர்ட்டில் இருந்த ரத்தக் கறையும் அனிமல் ப்ளட்தான்னு பாரன்ஸிக் சொல்லுது. மிச்சமிருக்கிறது ராஜீவ்தான். மோடிவ் கூட ரொம்ப பொருந்துது. ரெஜிதாவோட இறப்புக்குக் காரணமான சரவணனைப் பிளான் பண்ணி அவர் தீர்த்திருக்கலாம்.''

''அப்போ அந்த சர்தார்ஜி?''

''அவனோட ஏவல் ஆளா இருக்கலாம் ஸார்.''

''ஏவல் ஆள்னா எனக்கு ஒண்ணு தோணுது.''

''என்ன ஸார்?''

''அந்த ராஜீவ் ஆட்டோமொபைல் ஒர்க்ஷாப் தானே வச்சிருக்கார்?''

''ஆமா ஸார்.''

''அங்கே ஒர்க் பண்ற யாரையாவது பயன்படுத்தியிருக்கலாமோ?''

''மே பி ஸார்.''

''அந்த ஒர்க்ஷாப் அட்ரஸை வாங்கி வெச்சோமே?''

''என்கிட்டே இருக்கு ஸார்.''

''வாங்க, போய்ப் பார்க்கலாம்.''

ரதீஷிடம் விடை பெற்று ராஜீவின் ஒர்க்ஷாப் இருக்கிற முப்பத்திரண்டாவது செக்டாரைப் பார்த்து பைக்கைத் தடதடக்க வைத்தார்கள்.

சாலையோர காட்சிகள் ஜிவ்... ஜிவ்வென்று பின்பக்கம் போக, டிராஃபிக் சிக்னல்கள் அதிர்ஷ்டவசமாய் பச்சைக் கண் காட்டி 'போ போ' என்றது.

நிர்மாண் தியேட்டர் பஸ் ஸ்டாப்பைக் கடந்து காம்ப்ளக்ஸுக்குள் பிரவேசமானார்கள். ரெக்கார்டிங் செண்டருக்கும் ஸ்டேஷனரி மார்ட்டுக்கும் நடுவே அந்த வாகனப் பணிமனை கண்ணிலடித்தது. உடம்பு சரியில்லாத ஸ்கூட்டர்கள், பைக்குகள், மொபட்டுகள் சோகையான முகங்களோடு தெரிந்தன.

நடுவே அந்த வாகனப் பணிமனை.

இரண்டு பொடியன்கள் காக்கி சர்ட்டில் ஆயில் கறையோடு வேலையில் முனைப்பாகக் கிடந்தார்கள். ஷூ சட்திப்பினால் நிமிர்ந்து பார்த்தார்கள். யூனிஃபார்ம்களைப் பார்த்தும் தடால் தடாலென எழுந்தார்கள்.

''தும்ஹாரா சாப் கிதரே?''

நரேந்தர் சிங் கேட்க, உட்புறம் கையைக் காட்டினார்கள்.

ஆயில் வழுக்கி விடாமலிருக்க ஜாக்கிரதையைக் கடைப்பிடித்துக் கொண்டு உள்ளே போனார்கள். அந்த சின்ன தடுப்பு அறை வந்தது. மேஜைக்குப் பின்னே ராஜீவ் தெரிந்தான்.

இரண்டு பேரையும் கண்களில் வாங்கிப் புன்னகைத்து



வரவேற்றான்.

''வாங்க இன்ஸ்பெக்டர். ஃபர்தர் என்கொயரியா?''

''ஆமாம்.''

''என்ன கேக்கணும்?''

''இந்த ஒர்க்ஷாப்லே எத்தனை பேர் வேலை செய்யறாங்க?''

''எதுக்குக் கேட்கறீங்க இன்ஸ்பெக்டர்?''

''எங்களுக்குத் தேவைப்படுது.''

''அஞ்சு பேர்.''

''ரெண்டு சின்னப் பையன்களையும் சேர்த்துத் தானா?''

''யெஸ்!''

''சர்தார்ஜி யாராவது இருக்காங்களா?''

''சர்தார்ஜியா! யாருமில்லையே. ரெண்டு பேர் தமிழ் ஆளுங்க. இன்னொருத்தர் ஆந்திராக்காரர்.''

ராஜீவ் சொன்ன விநாடி, அறைக்குள் ஓர் அரை டிராயர் ஓடி வந்து, ''ஸார்...'' என்றான்.

''என்ன?''

''வெர்னியர் காலிபர் வேணும்.''

''எடுத்துக்கடா.''

ராஜீவ் தலையசைக்க, அவன் பக்கத்திலிருந்த அழுக்கான மரபீரோவைத் திறந்தான்.

எதேச்சையாகத் திரும்பி பீரோவைப் பார்த்த நரேந்தர் சிங்கின் பார்வையில் வியப்புக் குறிகள் ஒட்டியது.

வெர்னியர் காலிஃபரை எடுத்துக் கொண்டு கதவைச் சாத்திவிட்டு ஓடினான் அவன். நரேந்தர் சிங் எழுந்தார்.

''மிஸ்டர் ராஜீவ்! நான் அந்த பீரோவைத் திறந்து பார்க்கலாமா?''

''தாராளமாக.''

நரேந்தர் சிங் பீரோவை நோக்கி வேகமாகப் போய் அதன் கதவைத் திறந்தார்.

உள்ளே சீக்கியர்கள் அணியும் ஒரு டர்பன். கூடவே ஒரு செயற்கைத் தாடி!

அந்த விருந்தில் கீலரைப் பார்த்த ராணுவ அமைச்சர் புரொபியூமா தடுமாறிப் போனார். அப்பொழுதே அங்கேயே கீலரை அணைக்கத் துடித்தார். அன்று (1961 ஜூன் மாதம் 10ஆம் தேதி) கீலருக்கும் மந்திரி புரொபியூமாவிற்கும் ஏற்பட்ட அறிமுகம் நாளுக்கு நாள் வளர்ந்தது. இந்தச் செய்தி லண்டனில் உள்ள சோவியத் தூதரகத்திற்கு ஒற்றர்கள் மூலம் தெரியவந்தது. பிரிட்டிஷ் ராணுவ மந்திரி ஒரு நாலாந்தர வாடகைப் பெண்ணான கிறிஸ்டின் கீலரின் மடியில் மயங்கிக் கிடக்கிறார் என்று தெரிந்ததும் கீலரின் மூலம் புரொபியூமாவின் வாயிலிருந்து பிரிட்டிஷ் ராணுவ ரகசியங்களை கறக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியது சோவியத் உளவு நிறுவனம். டாக்டர் வார்டிற்கு பணத்தை அள்ளி வீசி அவர் மூலம் கீலரிடம் பழகி அவள் மூலம் புரொபியூமாவை நெருங்க ஜவனோவ் என்கிற இளைஞனை ஏற்பாடு செய்தது சோவியத். திட்டமிட்டபடியே எல்லாம் நடந்தது. இப்போது9-ம் அத்தியாய பெட்டிச் செய்தியை மீண்டும் ஒரு முறை படியுங்கள்.



11

சுசித்ரா அலுவலில் முழுமனசும் ஒட்டாமல் இயங்கிக் கொண்டிருந்தாள். நேற்றைய ராத்திரியில் நாகராஜனின் காரமான எச்சரிப்பு அடிக்கடி நிறைந்து நிறைந்து கலைந்து கொண்டு இருந்தது.

'சுசித்ரா.. உன்னோட நல்லதுக்குத்தான் சொல்றேன். நீ என்னோட அட்வைஸை அலட்சியப்படுத்தி பிரகதீஷோட பழகிட்டிருக்கே. அது... அவ்வளவு நல்லதில்லை.'

'பிரகதீஷின் துணையோடு ஸ்டேஷனுக்குப் போய் ரிப்போர்ட் பண்ணிவிட்டு வந்தேன். அதில் என்ன தப்பு இருக்கிறது? பார்க்கப் போனால் நாகராஜன் சொன்ன மாதிரி பிரகதீஷ் இல்லை. நிறைந்த கண்ணியத்துடன் பழகுகிறான்.'

''சுசித்ரா...''

நிமிர்ந்தாள். பஞ்சாபி நர்ஸ் அனிதா தெரிந்தாள்.

''பதினெட்டாம் நம்பர் பேஷண்ட்டுக்கு குளுகோஸ் அனுப்பிட்டியா?''



''உம். அனுப்பிட்டேன். நவீனாவைக் காலையிலிருந்தே பார்க்க முடியவில்லையே?''

''அவள் இன்னிக்கு லீவு. ஆமா, என்னாச்சு உன்னோட விவகாரம்?''

அனிதாவுக்கு மற்றவர் விஷயங்களைத் துருவித் துருவிக் கேட்பதில் இன்ட்ரஸ்ட்.

''என்ன?''

''ஏதோ போலீஸ் கேஸ் அது இதுன்னு...''

''அதுவா! ஒரே நியூசென்ஸ். வெளியே நடக்கவே பயமாயிருக்கு. மர்டரர் என்னையும் குறிபார்த்திட்டிருக்கான்.''

''மை குட்னெஸ்!''

அனிதா ஆச்சரியப்பட்ட நிமிஷம், அந்த நர்ஸ் ஓடிவந்தாள். சுசித்ராவிடம் பார்வையைக் கொடுத்துச் சொன்னாள். ''சுசித்ரா! உனக்கு ஃபோன் வந்திருக்கு.''

''ஃபோன்லே யார்?''

''தெரியலை.''

சுசித்ரா ரிசப்ஷனுக்கு நடந்தாள். ரிசப்ஷனிஸ்ட் எடுத்துத் தந்த ரிஸீவரைப் பெற்றுக் கொண்டு காதில் உரச விட்டாள்.

''ஹலோ!''

''அது மிஸ்.சுசித்ராவா?''

''யெஸ்!''

''நான் பிரகதீஷ். நீ ராக் கார்டனுக்கு உடனே வர முடியுமா?''

''எ... எதுக்கு?''

''விஷயம் ரொம்ப இம்பார்ட்டண்ட். இப்ப நீ ஒரு சிக்கல்ல மாட்டிட்டிருக்கே. அதைப் பத்தித்தான் பேசணும்.''

''ஃபோன்லே சொல்ல முடியாதா?''

''முடியாது. நீ நேரிலே வா.''

அவசரப்படுத்தினான்.

''ராக் கார்டன் வரணுமா?''

''ஆமா. உள்ளே ஆர்டிஃபிஷியல் ஃபால்ஸ் பக்கத்திலே இருக்கேன். உடனே வா.''

ரிஸீவர் மறுமுனையில் சாத்திக் கொண்டது. சுசித்ரா ரிஸீவரை பயத்தோடு பார்த்து அதனிடத்துக்குக் கொடுத்துவிட்டு திரும்பி நடந்தாள்.

காத்திருந்த அனிதாவிடம் விஷயத்தைச் சொன்னாள்.

''நான் இங்கே கவனிச்சுக்கறேன், சுசித்ரா. நீ சீஃப் கிட்டே சொல்லிட்டு புறப்படு.''

''தேங்க்யூ!''

சுசித்ரா, காசிஷ்குமாரின் அறைக்குள் நுழைந்து பர்மிஷன் வாங்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

சாலையில் நீந்துகிற ஆட்டோ ஒன்றிற்குக் கையைக் காட்ட, ஆட்டோ விருட்டென்று திரும்பி, அவளருகே வந்தது. உள்ளே போனாள்.

''ஜி... இதர் ஜானா சாஹியே?''

''ராக் கார்டன்.''

டிரைவர் ஆட்டோவைத் தூரத்தினார். காற்று பெருவாரியாய் சுசித்ராவைத் தழுவியது. மூளைக்குள் யோசிப்புகள் நிலைகொள்ளாமல் அலைந்தது.

'நான் இப்படிப் போவது சரியா? போலீஸில் சொல்லலாமா? வேண்டாம்! என்னோட சிக்கலைத் தீர்க்கப் போவதாக பிரகதீஷ் சொல்லியிருக்கிறான். போய்ப் பார்ப்போம்!'

டிரைவர் குரல் கொடுத்ததும்தான் உணர்வுக்கு வந்து சுற்றுப்புறத்தைப் பார்த்தாள் சுசித்ரா. தள்ளுவண்டிகளில் சமோசா, வேர்க்கடலை வியாபாரம் களைகட்டிக் கொண்டிருந்தது. என்ட்ரன்ஸ் டிக்கெட்டுகள் விற்கப்படுகிற கவுன்ட்டரைத் தொட்டாள்.

அந்த நாள் வேலை நாள் என்பதால் கவுன்ட்டர் வெறிச்சென்று ஜனமிழந்து கிடந்தது. சுசித்ரா கவுன்ட்டருக்குக் குனிந்து ரூபாய்த் தாள் ஒன்றைக் கொடுத்து டிக்கெட்டாக மாற்றினாள். சின்ன வாசலுக்குள் நுழையும் போது அந்த ஊனமுற்ற இளைஞனிடம் டிக்கெட்டை ஒப்படைத்துவிட்டு உள்ளே நடந்தாள்.

இரண்டு பக்கமும் கனமான செயற்கைப் பாறைகள். உபயோகமில்லாத பீங்கான் பொருட்களை கற்கள், சிமெண்ட்டோடு கலந்து நிறைய ஆர்ட்



வேலைப்பாடுகள் செய்திருந்தார்கள். ரொம்ப தூரத்தில் ஒரு ஜீன்ஸ் இளைஞனும், சல்வார் கமீஸ் இளைஞியும் தங்களை மறந்து நடந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களையும் சுசித்ராவையும் தவிர, அந்தப் பகுதியில் யாருமேயில்லை. சுசித்ரா தொடர்ந்து நடந்தாள். சில படிகள் ஏறி இறங்கினபோது 'ஸோ'வென்ற இரைச்சல் காதைத் தொட்டது. எட்டிப் பார்த்தபோது ஓர் அருவி தெரிந்தது.

பிரகதீஷ் இங்கேதானே வரச் சொன்னான்?

சுற்றுமுற்றும் பார்வையைப் பரத்தினாள். தனிமை. அருவியின் 'ஜோ' இரைச்சலைத் தவிர தீவிர நிசப்தம்.

சுசித்ராவுக்கு லேசாய் நடுக்கமெடுத்தது. பயத்தோடு பார்வையைச் சுழலவிட்டாள்.

'திரும்பி விடலாமா?' திரும்பினாள். பார்வையில் அந்த மரம் அடித்தது. அதன் அடித்தண்டுக்கு அப்பால் நீட்டிக் கொண்டிருந்த அந்த இரண்டு கால்கள்.

அதன் நுனிகளில் இருந்த ஷூக்கள். யாரது? வரச்சொன்ன பிரகதீஷ் தூங்கி விட்டானா?

மரத்தைச் சமீபித்துப் பார்த்தபோது அதிர்ச்சி கண் மையங்களில் பாய்ந்தது.

நீளக்கத்தியை வயிற்றில் வாங்கி மல்லாந்து கிடந்தான் பிரகதீஷ்.

டர்பனையும், செயற்கைத் தாடியையும் கையில் எடுத்துக் கொண்டு பீரோவைச் சாத்திவிட்டுத் திரும்பி வந்தார் நரேந்திரன். ராஜீவின் டேபிளில் அவைகளைப் போட்டார்.

ராஜீவ் சலனமேயில்லாமல் உட்கார்ந்திருந்தான்.

''ஒரு சர்தார்ஜிதான் இந்த மர்டரைப் பண்ணியிருக்கணுங்கிற வியூவில் நாங்க யோசிச்சிட்டிருந்தோம். ஆனா, சர்தார்ஜி மாதிரி வேஷம் போட்டுட்டு, கொலை பண்ணியிருக்கலாம்கிற கோணத்தை நாங்க யோசிச்சே பார்க்கலை.''

ராஜீவ் நிமிர்ந்தான்.

''இன்ஸ்பெக்டர், என்ன சொல்றீங்க?''

ரிஸீவர் மறுமுனையில் சாத்திக் கொண்டது. சுசித்ரா ரிஸீவரை பயத்தோடு பார்த்து அதனிடத்துக்குக் கொடுத்துவிட்டு திரும்பி நடந்தாள்.

காத்திருந்த அனிதாவிடம் விஷயத்தைச் சொன்னாள்.

''நான் இங்கே கவனிச்சுக்கறேன், சுசித்ரா. நீ சீஃப் கிட்டே சொல்லிட்டு புறப்படு.''

''தேங்க்யூ!''

சுசித்ரா, காசிஷ்குமாரின் அறைக்குள் நுழைந்து பர்மிஷன் வாங்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

சாலையில் நீந்துகிற ஆட்டோ ஒன்றிற்குக் கையைக் காட்ட, ஆட்டோ விருட்டென்று திரும்பி, அவளருகே வந்தது. உள்ளே போனாள்.

''ஜி... கிதர் ஜானா சாஹியே?''

''ராக் கார்டன்.''

டிரைவர் ஆட்டோவைத் தூத்தினார். காற்று பெருவாரியாய் சுசித்ராவைத் தழுவியது. மூளைக்குள் யோசிப்புகள் நிலைகொள்ளாமல் அலைந்தது.

'நான் இப்படிப் போவது சரியா? போலீஸில் சொல்லலாமா? வேண்டாம்! என்னோட சிக்கலைத் தீர்க்கப் போவதாக பிரகதீஷ் சொல்லியிருக்கிறான். போய்ப் பார்ப்போம்!'

டிரைவர் குரல் கொடுத்ததும்தான் உணர்வுக்கு வந்து சுற்றுப்புறத்தைப் பார்த்தாள் சுசித்ரா. தள்ளுவண்டிகளில் சமோசா, வேர்க்கடலை வியாபாரம் களைகட்டிக் கொண்டிருந்தது. என்ட்ரன்ஸ் டிக்கெட்டுகள் விற்கப்படுகிற கவுன்ட்டரைத் தொட்டாள்.

அந்த நாள் வேலை நாள் என்பதால் கவுன்ட்டர் வெறிச்சென்று ஜனமிழந்து கிடந்தது. ' சுசித்ரா கவுன்ட்டருக்குக் குனிந்து ரூபாய்த் தாள் ஒன்றைக் கொடுத்து டிக்கெட்டாக மாற்றினாள். சின்ன வாசலுக்குள் நுழையும் போது அந்த ஊனமுற்ற இளைஞனிடம் டிக்கெட்டை ஒப்படைத்துவிட்டு உள்ளே நடந்தாள்.

இரண்டு பக்கமும் கனமான செயற்கைப் பாறைகள். உபயோகமில்லாத பீங்கான் பொருட்களை கற்கள், சிமெண்ட்டோடு கலந்து நிறைய ஆர்ட்



வேலைப்பாடுகள் செய்திருந்தார்கள். ரொம்ப தூரத்தில் ஒரு ஜீன்ஸ் இளைஞனும், சல்வார் கமீஸ் இளைஞியும் தங்களை மறந்து நடந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களையும் சுசித்ராவையும் தவிர, அந்தப் பகுதியில் யாருமேயில்லை. சுசித்ரா தொடர்ந்து நடந்தாள். சில படிகள் ஏறி இறங்கினபோது 'ஸோ'வென்ற இரைச்சல் காதைத் தொட்டது. எட்டிப் பார்த்தபோது ஓர் அருவி தெரிந்தது.

பிரகதீஷ் இங்கேதானே வரச் சொன்னான்?

சுற்றுமுற்றும் பார்வையைப் பரத்தினாள். தனிமை. அருவியின் 'ஜோ' இரைச்சலைத் தவிர தீவிர நிசப்தம்.

சுசித்ராவுக்கு லேசாய் நடுக்கமெடுத்தது. பயத்தோடு பார்வையைச் சுழலவிட்டாள்.

'திரும்பி விடலாமா?' திரும்பினாள். பார்வையில் அந்த மரம் அடித்தது. அதன் அடித்தண்டுக்கு அப்பால் நீட்டிக் கொண்டிருந்த அந்த இரண்டு கால்கள்.

அதன் நுனிகளில் இருந்த ஷூக்கள். யாரது? வரச்சொன்ன பிரகதீஷ தூங்கிவிட்டானா?

மரத்தைச் சமீபித்துப் பார்த்தபோது அதிர்ச்சி கண் மையங்களில் பாய்ந்தது.

நீளக்கத்தியை வயிற்றில் வாங்கி மல்லாந்து கிடந்தான் பிரகதீஷ்.

டர்பனையும், செயற்கைத் தாடியையும் கையில் எடுத்துக் கொண்டு பீரோவைச் சாத்திவிட்டுத் திரும்பி வந்தார் நரேந்திரன். ராஜீவின் டேபிளில் அவைகளைப் போட்டார்.

ராஜீவ் சலனமேயில்லாமல் உட்கார்ந்திருந்தான்.

''ஒரு சர்தார்ஜிதான் இந்த மர்டரைப் பண்ணியிருக்கணும்கிற வியூவில் நாங்க யோசிச்சிட்டிருந்தோம். ஆனா, சர்தார்ஜி மாதிரி வேஷம் போட்டுட்டு, கொலை பண்ணியிருக்கலாம்கிற கோணத்தை நாங்க யோசிச்சே பார்க்கலை.''

ராஜீவ் நிமிர்ந்தான்.

''இன்ஸ்பெக்டர், என்ன சொல்றீங்க?''

''சரவணனை மர்டர் பண்ணினது நீங்க தானே? சர்தார்ஜி வேஷத்திலே போய் சுசித்ராவை மிரட்டினது, முருகன் மலையில் பிரகதீஷைத் தாக்கினது, கேசவ் வீட்டிலே ரத்தம் தோய்ந்த கத்தியைப் போட்டுட்டு ஓடினது எல்லாமே நீங்க தானே?''

''இன்ஸ்பெக்டர்! நான் டீஸண்ட்டான ஃபேமிலியிலிருந்து வந்தவன். இந்த மாதிரியான கீழ்த்தரமான காரியங்களுக்கெல்லாம் போக மாட்டேன்.''

''அப்படின்னா இந்த டர்பன், செயற்கைத் தாடி எதுக்காக?''

''ஒரு மாசம் முன்னாடி இங்கே சிட்டி முழுக்க கலவரம் நடந்தது. சீக்கியர் அல்லாதவங்க வெளியே போக பயப்பட்டாங்க. அப்ப வெளியே போகவர வசதியா இருக்கட்டுமேன்னு நான் இந்த டர்பனையும், செயற்கைத் தாடியையும் உபயோகப்படுத்திட்டிருந்தேன்.''

''இப்ப இதை நீங்க உபயோகிக்கிறதில்லை?''

''அதான் நிலைமை சகஜமாயிட்டுதே?''

நரேந்தர் சிங்கும், பல்பீரும் எழுந்தார்கள். பைக்குக்கு வந்தார்கள்.

''பல்பீர்... ராஜீவ் சொன்னது உங்களுக்குச் சரியான சமாதானமா படுதா?''

''படலை ஸார்.'' என்றார் பல்பீர்.

ராக் கார்டனுக்குள் பொதுமக்களின் அனுமதி நிறுத்தப்பட்டிருந்தது. காக்கி யூனிஃபார்ம்கள் குவிந்திருந்தார்கள். இரண்டு போலீஸ் ஜீப், ஒரு மார்ச்சுவரி வேன் நுழைவாயிலை அடைகாத்தது.

போலீஸ் காமெரா சிதைந்து கிடந்த பிரகதீஷைப் பளிச் பளிச்சென்று பார்த்துக் கொண்டிருந்தது. பல்பீர் கீழே கிடைத்த பர்ஸ் ஒன்றை ஆராய்ந்து கொண்டிருந்தார்.

தகவல் கொடுத்து வரவழைக்கப்பட்ட நாகராஜனும், பங்கஜமும் துக்கத்தை ஜீரணிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தார்கள்.

இன்னொரு பக்கம் ஓரமாக சுசித்ராவும், நரேந்தர் சிங்கும் நின்றிருந்தார்கள். நரேந்தர் சிங் சொன்னார்.



''சுசித்ரா... நீங்க பெரிய தப்பு பண்ணிட்டீங்க.''

''இன்ஸ்பெக்டர்!''

''பிரகதீஷ் ஃபோன் பண்ணினதும் உடனே நீங்க எங்களுக்குத் தகவல் கொடுத்திருக்கணும். ஏற்கனவே உங்களைச் சுத்தி ஆபத்து நிறைய இருக்கு. பிரகதீஷ் ஃபோன் பண்ணி வரச் சொன்னதை நம்பி நீங்க தனியா வந்தது சரியில்லை.''

''ஸாரி ஸார்! நான் அதையெல்லாம் யோசிக்கலை. ஃபோன் வந்ததுமே ஒரே பரபரப்பாகிட்டேன். 'நீ ஒரு சிக்கல்லே மாட்டிட்டிருக்கே. அதைப் பத்திதான் பேசணும்'னு சொன்னதும் முதல்லே பிரகதீஷைப் பார்க்கணுங்கிற எண்ணம்தான் எனக்குப் பிரதானமா இருந்தது.''

''மர்டரோட நோக்கம் என்னன்னு தெரியலை. ஃபோன்லே பேசினது பிரகதீஷ் தானே?''

''எனக்கு அப்படித்தான் கேட்டது. எனக்கு இருந்த பதட்டத்திலே குரலை நான் சரியா ரெககனைஸ் பண்ணலை.''

பல்பீர் நரேந்தர் சிங்கை நெருங்கினார். கையிலிருந்த பர்ஸை அவரிடம் நீட்டினார்.

''இது என்ன பர்ஸ்?''

''பாடிக்குக் கொஞ்சம் தள்ளி விழுந்திருந்தது. கார்டனுக்கு வந்த யாராவது தவற விட்டிருக்கலாம்.''

''உள்ளே என்ன இருக்குன்னு பார்த்தீங்களா?''

''ஒரு நூறு ரூபாய் நோட்டு, கொஞ்சம் சில்லறை.''

''ஏதாவது அட்ரஸ்?''

''இல்லை.''

''ஃபோட்டோ?''

''எதுவுமில்லை ஸார்.''

''கொலை செய்ய உபயோகப்பட்ட ஆயுதம் என்ன பல்பீர்?''

''கத்தி!''

''ஏதாவது ஸ்மெல் பண்ணினீங்களா?''

''சரவணனுக்கும், பிரகதீஷுக்கும் ஏதாவது ஒரு வகையில் தொடர்பு இருந்திருக்கலாம். ஸோ, அவ்ங்க ரெண்டு பேரோட பொதுவான எதிரி அடுத்தடுத்து வரிசையா இரண்டு பேரையும் தீர்த்திருக்கலாம்,''

கான்ஸ்டபிள் ஒருவர் குறுக்கிட்டார்.

''ஸாப்...''

நரேந்தர் சிங் திரும்பினார்.

''இஸ் கார்டன் கே வாட்ச்மேன் கோ மைன் லேகர் ஆயா ஹூங்''

கான்ஸ்டபிள் கூட்டி வந்திருந்த வாட்ச்மேனின் மேல் பார்வையைப் படரவிட்டார் நரேந்தர் சிங்.

தையல் பிரிந்திருந்த ஸ்வெட்டர் மாட்டியிருந்தான். தலையில் குல்லாய். மேவாய் பூராவும் முள்முள்ளாய்த் தாடி. கொஞ்சம் குள்ளமாகத் தெரிந்தான். வலது கால் ஊனம்.

நரேந்தர் சிங் இந்தியில் அவனை விசாரிக்க ஆரம்பித்தார்.

''உன் பேர் என்ன?''

''யாதவ்.''

''எத்தனை நாளா இங்கே வேலை பார்க்கிறே?''

''மூணு வருஷமா.''

''உன் வீடு...?''

''கார்டனுக்குள்ளேயே இருக்கு, ஸாப்.''

''நைட் வாட்ச்மேன் தனியா இருக்காங்களா?''

''இருக்காங்க.''

''இங்கே செத்துக் கிடக்கிறவர் உள்ளே வந்ததை நீ கவனிச்சியா?''

''நிறைய பேர் வர்றாங்க, போறாங்க. நான் சரியா கவனிக்கலை ஸாப்.''

'தொடர்ந்து ஒரே மாதிரி இரண்டு கொலைகள். யாரையும் தீர்க்கமாகச் சந்தேகப்படவும் முடியவில்லை. கொலைகளுக்கான மோடிவ்வும் புரியவில்லை. இடையில் சுசித்ரா என்கிற சம்பந்தமில்லாத பெண்.'

குழப்ப வெள்ளத்தில் தத்தளித்தார் நரேந்தர் சிங்.



பத்து நாட்கள் கழித்து - காசிஷ்குமாரின் அறை.

சுசித்ரா, நவீனா, அனிதா மற்றும் சில டாக்டர்கள், நர்ஸ்கள் அங்கே குழுமியிருந்தார்கள். எல்லோருடைய முகங்களிலும் சந்தோஷம் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. காசிஷ்குமார் சொல்லிக் கொண்டிருந்தார்.

''தொழிலதிபர் மங்கள் பாண்டேக்கு ஆபரேஷன் நல்லபடியா முடிஞ்சு அவர் இன்னிக்கு டிஸ்சார்ஜ் ஆகப் போகிறார். அவர் இந்த சந்தோஷத்தைக் கொண்டாடணும்னு விரும்பறார். ஆஸ்பத்திரி ஃஸ்டாப் எல்லோருக்கும் இன்னிக்கு அவர் வீட்டிலே ஒரு டின்னர் ஏற்பாடு செய்திருக்கார். ஸோ... சாயந்தரம் ஏழு மணிக்கு எல்லோரும் அங்கே வந்துடணும்.''

காசிஷ்குமார் சொல்லி முடிக்க, எல்லோரும் கலைந்தார்கள்.

''மங்கள்பாண்டேயின் வீட்லேயே டின்னரா?''

சுசித்ரா கேட்டாள். நவீனா தலையாட்டினாள்.

''ஆமா... தான் பிழைப்போம்கிற நம்பிக்கை அவருக்கு இல்லை. நம்ம டாக்டர் தொட்டதினாலத்தான் பிழைச்சார். உனக்கு அவர் பங்களா தெரியுமா சுசித்ரா?''

''தெரியாது...''

''எப்படி வரப்போறே?''

சுசித்ரா புன்னகைத்தாள். ''நான் வரப் போறதில்லை...''

''ஏன்?''

''இந்த மாதிரி விசேஷங்கள் எதிலும் நான் கலந்துக்க வேண்டாம்னு இன்ஸ்பெக்டர் வார்ன் பண்ணியிருக்கார்.''

''நீ என்ன தனியாவா போறே? நாம எல்லோரும் சேர்ந்துதானே அவர் வீட்டுக்கு போகப் போறோம்? ஒண்ணா போய் ஒண்ணா திரும்பிடப் போறோம். அவ்வளவுதானே?''

''மங்கள்பாண்டே வீடு எங்கேயிருக்கு?''

''இருபத்தஞ்சாவது செக்டார்ல! டோர் நம்பர் 3018.''

''நீ அவர் வீட்டுக்குப் போயிருக்கியா?''

''போனதில்லை. ஆனா தெரியும்...''

''நான் ஒண்ணு பண்ணட்டுமா?''

''என்ன?''

''சாயந்திரம் உன் வீட்டுக்கு வர்றேன். ரெண்டு பேருமா சேர்ந்து பார்ட்டிக்குப் போகலாம்.''

நவீனா தலையசைத்தாள்.

''தட்ஸ் குட். உனக்காக நான் வெயிட் பண்ணிட்டிருக்கேன்...''

அவள் ஜெர்மன் நாட்டின் விலைமாது. பெயர் லில்லி. சிறு வயதில் வறுமையையும், இளம் வயதில் பேரழகையும் கொடுத்திருந்தான் இறைவன். இவள் புத்திசாலித் தனத்தோடு பிள்ளைதைக் கொண்டு முன்னதை போக்கிக் கொண்டிருந்தாள். 1939ம் ஆண்டில் ஓர் இரவு ஹிட்லரின் உளவு நிறுவனமான ஆர்.எஸ்.எச்.ஏ. நிறுவனத்தின் உளவாளி ஒருவன் லில்லியின் வீட்டுக் கதவைத் தட்டினான். கதவைத் திறந்த லில்லியிடம் அவன் கூறிய செய்தி அவளை மகிழ்ச்சியடையச் செய்து உடனே சம்மதிக்கவும் வைத்தது. அவன் கூறிய செய்தி இதுதான்: "உன் அழகைப் பற்றியும் திறமையைப் பற்றியும் எங்கள் உளவுப் பிரிவின் தலைவர் ஹிம்லர் (ஹிட்லர் அல்ல) நன்றாக அறிவார். நம் நாட்டு நலனுக்காக உன்னை உளவாளியாக சேர்த்துக் கொள்ள விரும்புகிறார். உனக்கு சம்மதமா?" அடுத்து வந்த நாட்களில் அவளுக்கு தீவிர பயிற்சி அளிக்கப்பட்டது. இரண்டாம் உலக யுத்தம் மூளத் தொடங்கிய நேரத்தில் ஜெர்மானிய மக்கள் அகதிகளாக அமெரிக்காவிற்குச் சென்றனர். அவர்களுள் ஒருத்தியாக லில்லி அமெரிக்காவிற்கு வேவு பார்க்கச் சென்றாள். அங்கே...(அடுத்த அத்தியாயத்தில்)




மத்தியானம் பன்னிரண்டு மணிக்கே நவீனாவுக்கும், சுசித்ராவுக்கும் ஷிஃப்ட் முடிந்திருந்தது. சுசித்ரா வீட்டுக்கு வந்து பங்கஜத்துக்கு உதவியாக சில வேலைகளை முடித்தபோது நேரம் சாயந்திரத்தைத் தொட்டிருந்தது.

நாகராஜ் வெளியே போயிருக்க, பங்கஜம் மட்டும் வீட்டில் இருந்தாள். பிரகதீஷ் போய்விட்ட துக்கம் இன்னும் வீட்டை விட்டு அகலாமல் இருந்தது. சுசித்ரா, பங்கஜத்திடம் சொல்லிக் கொண்டு, டிரெஸ் மாற்றி புறப்பட்டாள்.



பஸ் ஸ்டாப்பில் மூன்று நிமிஷம் காத்திருந்து, அந்த டவுன் பஸ் வந்ததும் ஏறிக் கொண்டாள். பத்து நிமிஷப் பயணம்.

ஏற்கனவே இரண்டு தடவை நவீனா வீட்டுக்குப் போயிருந்ததால் இறங்க வேண்டிய ஸ்டாப்பிங்கில் இறங்கி, சுலபமாய் அவள் வீட்டுக்கு நடந்தாள்.

பஸ் ஸ்டாப்பிலிருந்து அரை கிலோமீட்டர் நடை.

நவீனாவின் வீடு வந்தது. வாசற்படி ஏறி, காலிங் பெல்லை அழுத்திப் பார்த்து, அது வேலை செய்யாமல் போகவே கதவைத் தட்டினாள்.

''டொக்... டொக்...'' காத்திருந்து, அது திறக்கப்படாமலிருக்க, மறுபடியும் தட்டினாள்.

''டொக்... டொக்...'' இரண்டாவது தடவை தட்டியபோது வீட்டுக்குள் சத்தம் கேட்டது.

தாழ் விலகி, கதவு விரிய -தூக்க முகத்தோடு நவீனா தெரிந்தாள். பீறிட்டு வந்த ஒரு கொட்டாவியை அடக்கிக் கொண்டே, ''வா சுசித்ரா...'' என்றாள்.

''என்ன நவீனா இன்னும் தூங்கிட்டிருக்கே? மணி அஞ்சரைக்கு மேலாச்சு!''

''ஓ! ஸாரி சுசித்ரா! நல்ல தூக்கம். கிளினிக்கிலர்ந்து வந்ததும் சாப்பிட்டு பெட்ல விழுந்தேன். இப்ப நீ கதவைத் தட்டினதும் தான் விழிப்பு வந்தது...''

''டயமாச்சு. சீக்கிரம் கிளம்பு!''

''இதோ... ஒரு சின்ன பாத் எடுத்துட்டு வந்துடறேன்...''

நவீனா டவலை உருவிக்கொண்டு ஒட்டின மாதிரி இருந்த பாத்ரூமை நோக்கி நடந்தாள். சுசித்ரா மேஜைமேல் இருந்த ஆங்கில நாளிதழைக் கையிலெடுத்துக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தாள்.

பேப்பரிலிருந்த செய்திகளைப் படித்து, கொஞ்ச நேரம் நகம் கடித்து, அடுத்ததாய் ஜன்னல் வழியாய் ரோட்டைப் பார்க்க நினைத்தபோது பாத்ரூம் கதவு திறக்கப்பட்டு

நவீனா வெளியே வந்தாள்.

ஈர டவல் உடம்பைச் சுற்றியிருக்க, ஸ்கிரீன் தடுப்புக்குப் பின்னால் போனாள். ஐந்து நிமிஷம் கழித்து வெளிர் பச்சை சல்வார் கம்மீஸில் நுழைந்து வெளியே வந்தாள். சுசித்ரா உட்கார்ந்திருந்த சேருக்குப் பக்கத்திலிருந்த டிரெஸ்ஸிங் டேபிளின் முன்பிருந்த ஸ்டூலில் உட்கார்ந்தாள்.

கண்ணாடி பார்த்துத் தலைமுடியை ஒழுங்கு பண்ணிக் கொண்டே சுசித்ராவிடம் கேட்டாள்.

''சுசித்ரா... நீ சல்வார் கம்மீஸ் போடறதில்லையா? எப்பவும் ஏன் இந்தப் புடவையைக் கட்டிட்டு அழறே?''

''புடவையைத் தவிர வேற எதைக் கட்டியும் எனக்குப் பழக்கமில்லை.''

''இன்னிக்கு பழகிக்கோ! என்னோட சல்வார் கம்மீஸ் எடுத்துத் தர்றேன். போடறியா?''

''அய்யோ! வேண்டாம். நான் எப்பவும் போல புடவையிலே வர்றேன்.''

நவீனா டிரெஸ்ஸிங் டேபிளின் டிராயரை இழுத்து பொட்டு பாட்டிலை எடுத்தாள். சின்னதாய் நெற்றியில் ஒரு சிவப்பு வட்டம்.

டிராயரைச் சாத்தியபோது சுசித்ரா கூப்பிட்டாள்.

''நவீனா...''

''ம்...?''

''நான் உன்னோட வீட்டை முழுசுமா பார்த்ததேயில்லை. ரெண்டு தடவை வந்திருக்கேன். ஆனால் இந்த முன்னாடி ரூமோட போயிட்டேன். உள்ளே எல்லாம் பார்த்ததேயில்லை...''

''பாரு... இந்தச் சின்ன வீட்டை சுத்தி வேற பார்க்கணுமா?''

சுசித்ரா எழுந்தாள். அந்த அறையை ஒட்டின மாதிரி இருந்தது இன்னொரு அறை. அதை ஒட்டின கிச்சன். கிச்சன் கதவைத் திறந்து வெளியே பார்த்தாள். ஓர் அடி இடைவெளியில் காம்பௌண்ட் சுவர் கண்ணில் இடித்தது.

''பின்னாடி இடம் இல்லையா?''



''ம்ஹூம்...''

காதோர முடியை சரிப்படுத்திக் கொண்டே, டிரஸ்ஸிங் மேஜையிலிருந்தே பதில் சொன்னாள் நவீனா.

கிச்சன் கதவைப் பழையபடி தாளிட்டு விட்டு அறைக்கே திரும்ப வந்தாள் சுசித்ரா.

''பரவால்ல. சின்ன வீடா இருந்தாலும் நீட்டா வெச்சிருக்கே!''

''தாங்க்ஸ். போகலாமா?''

கேட்டுக் கொண்டே ஸ்லிப்பரை மாட்டினாள் நவீனா. வீட்டைப் பூட்டி விட்டு இரண்டு பேருமாய் வெளியே வந்தார்கள்.

''எப்படிப் போலாம் சுசித்ரா? பை பஸ் ஆர் ஆட்டோ?''

''பஸ்ஸா? உங்க வீட்லர்ந்து பஸ் ஸ்டாப்புக்கு நடக்கிறதுஅவ்வளவு கஷ்டமானதா தெரியறதில்லை...? அந்த ஆட்டோ ஸ்டாண்ட்ல ஓர் ஆட்டோ பிடிச்சுப் போயிடலாம்.'' சுசித்ரா சொல்ல, ஆட்டோஸ்டாண்டைத் தொட்டு, ''டிரைவர்... பச்சிஸ்வர் செக்டார் தக் ஜானா ஹை...''

''பைட்டியே பெஹன்ஜி.'' ஆட்டோவுக்குள் நுழைந்தார்கள்.

ஆட்டோ கிளம்பி சாலையில் வழுக்கியது. ''டயம் என்ன சுசித்ரா?''

''ஆறு அஞ்சு''

வெளிவானம் இருட்டுடன் நட்பு கொள்கிற முயற்சிகளில் ஈடுபட ஆரம்பித்திருந்தது. ஆட்டோவுக்குள் வந்து நிரம்புகிற காற்றில் குளிரின் சங்கம சதவீதம் அதிகமாக இருந்தது. சுசித்ராவே மறுபடியும் பேசினாள்.

''நவீனா, உங்க வீட்ல நீ தனியாவா இருக்கே?''

''ஆமா. இது மூணாவது தரமா நான் உங்கிட்டே சொல்றது! எனக்கு நினைவு தெரிஞ்ச நாள்லருந்து என் ஞாபகத்துல இருக்கிறது அனாதை இல்லம்தான். அங்கேயே தான் வளர்ந்தது, படிச்சது எல்லாமே! நர்ஸ் டிரெயினிங் எடுத்து முடிச்சு, சம்பாதிக்க ஆரம்பிச்சதும்

அங்கிருந்து விலகி வந்துட்டேன். ரெண்டு வருஷமா அந்த வீட்டில் நான் தனியாய்த் தான் இருக்கேன்.''

''உன்னைத் தேடி யாரும் வரமாட்டாங்களா?''

''என் வீட்டுக்கா?''

''ஆமா!'' கேட்ட சுசித்ராவை ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

''வரமாட்டாங்களே, ஏன்?''

''சும்மா கேட்டேன். தனியா இருக்கிறது ரொம்பக் கஷ்டம். இல்லையா?''

''கஷ்டம்தான்! தனியா இருந்தே பழகிப் போச்சு. நீ கூட ஃபாமிலி-ஃப்ரெண்ட் வீட்டிலே இருந்துக்கிட்டு, அவங்களுக்கு அட்ஜஸ்ட் பண்ணிட்டு இருக்கிறதைவிட, சொல்லிட்டு என் வீட்டுக்கு வந்துடலாமே. பேயிங் கெஸ்ட்டா இருந்துடு...''

சுசித்ரா புன்னகைத்தாள்.

''அப்படியெல்லாம் அவங்க என்னை விட்டுட மாட்டாங்க.''

ஆட்டோ அந்தத் திருப்பத்தில் திரும்பி, கொஞ்சதூரம் நேராக ஓடி, இருபத்தைந்தாவது செக்டாரின் இருதயப் பகுதியிலிருந்த அந்த பங்களா முன்புறமாக நின்றது. முன்பக்க சுவர்ப்பரப்புகளில் பாம்பே மொசைக் போடப்பட்டிருந்தது.

இறங்கி சார்ஜைக் கொடுத்து ஆட்டோவை அனுப்பி விட்டு காம்பௌண்ட் கதவுக்குள் நுழைந்தார்கள்.

''ஹாய் நவீன், சுசித்ரா!'' குரல்.

திரும்பிப் பார்க்க அனிதா தெரிந்தாள்.

''ஏய், அனிதா குண்டு! நீயும் இப்பத்தான் வர்றியா?''

''பத்து நிமிஷம் ஆச்சு! உள்ளே உங்களைக் காணோமேன்னு பார்த்துட்டிருந்தேன்.''

நவீனாவும், அனிதாவும் பஞ்சாபியில் உரையாடிக் கொண்டு போக, சுசித்ரா கோபத்தோடு ஆங்கிலத்தில் வழிமறித்தாள்.

''ரெண்டு பேரும் புஞ்சாபியில் பேசறதை விட்டுட்டு எனக்கும் புரியற மாதிரி இங்கிலீஷ்ல பேசக் கூடாதா?''

''ஸாரி, சுசித்ரா... இனிமே பேசலை...''



உள்ளே கூட்டம் நிறைய இருந்தது. சத்யா கிளினிக் ஸ்டாஃப்களைத் தவிர, மங்கள் பாண்டேயின் மற்ற நண்பர்களும், சர்தார்ஜிகளும் பரவலாகத் தெரிந்தார்கள். சுசித்ராவுக்கு அப்பொழுதுதான் அந்தப் பயம் லேசாகத் துளிர்விட்டது.

'இந்தக் கூட்டத்தில் அந்த சர்தார்ஜியும் இருப்பானோ?'

பார்ட்டி முடிந்தபோது நேரம் ராத்திரி ஒன்பதாகியிருந்தது. ஒவ்வொருத்தராய்க் கிளம்ப ஆரம்பித்தார்கள்.

நவீனா, சுசித்ராவும் மங்கள்பாண்டேயிடம் சொல்லிக் கொண்டு வெளியே வந்தார்கள். இருட்டான வீதியில் நடந்தார்கள்.

நவீனா சொன்னாள். ''பார்ட்டி அற்புதம்.''

சுசித்ரா சுற்றும் முற்றும் பார்த்தாள்.

''என்ன பார்க்கிறே சுசித்ரா?''

''இருட்டுல நடக்கவே பயமாயிருக்கு. ஆட்டோ பிடிச்சுப் போயிடலாமா?''

''ம். அதைத்தான் சொல்ல நினைச்சேன். ஆட்டோவில் நேரா என் வீட்டுக்குப் போவோம். நான் இறங்கிக்கறேன். அதே ஆட்டோல நீ வீட்டுக்குப் போயிடு.''

இருவரும் ஆட்டோ ஸ்டாண்டை நோக்கி நடந்தார்கள்.

''ராத்திரியில தனியா வீட்ல படுத்திருக்க நீ பயப்பட மாட்டியா நவீனா?''

''என்ன பயம்? நான் என்ன குழந்தையா?''

''உங்க ரிலேடிவ் யாரும் இந்தப் பக்கம் கிடையாதா?''

''ஊஹூம்...''

''யாராவது தூரத்துச் சொந்தம்?''

''ஒருத்தருமில்லை. வானத்துலேர்ந்து குதிச்ச மாதிரி நான் ஒரு தனிப் பொண்ணு.''

''ஆச்சரியமாயிருக்கு!''

மெயின் சாலைக்கு வந்து குறுக்கே போன ஆட்டோவைக் கைதட்டி அழைத்து, உள்ளே

நுழைந்தார்கள். ஆட்டோ சில செக்டார்களை விழுங்கியது. நிமிஷங்கள் கழிந்து போயிருக்க, நவீனாவின் வீடு வந்தது.

நவீனா மட்டும் இறங்கினாள்.

''நாளைக்கு ஆஸ்பத்திரியில் பார்ப்போமே, சுசித்ரா... குட்னைட்.''

''குட்நைட்.''

நவீனாவுக்கு கையசைத்து விட்டு ஆட்டோவின் டிரைவரிடம் இந்தியில் 'போகலாம்' என்றாள்.

ஆட்டோ நகர்ந்தது. ஆட்டோ கொஞ்ச தூரம் நகர்ந்ததும் டிரைவர் இந்தியில் கேட்டான். ''நாற்பத்தேழாவது செக்டார் தானே?''

''இல்லை, போலீஸ் ஸ்டேஷனுக்குப் போ'' என்றாள் சுசித்ரா.

அமெரிக்காவின் நியூயார்க் கிழக்குப் பகுதியில் 79ஆவது தெருவில் குடியேறி முதலில் காய்கறிக் கடை வைத்தாள் லில்லி. பின்னர் மாடிசன் அவென்யூவில் நாகரீகமான ஆடைக் கடையைத் திறந்தாள். அதன் மூலம் அமெரிக்க யுத்த இலாகா அலுவலகத்தில் பணிபுரியும் கடை நிலை ஊழியர்களுக்கு கடனுக்கு ஆடை கொடுப்பதாக ஆசை காட்டி சிலபல தகவல்களைச் சேகரித்தாள்.



முக்கியமான ரகசியங்கள் எல்லாம் எப்படி வெளியே போகின்றன என்று அமெரிக்க ராணுவ இலாகா குழம்பித் தவித்தது. 1941ம் ஆண்டு அமெரிக்காவும் யுத்தத்தில் குதித்தது. அதற்குள் அமெரிக்காவின் யுத்த இலாகா ஜெனரல் லில்லியின் படுக்கையறையில் இருந்தார். (லில்லி மிகவும் நம்பிய வில்லியம் கிப்போர்டு என்பவனால் காட்டிக் கொடுக்கப்பட்டு 10 வருடங்கள் சிறையில் இருந்தாள் என்பது வேறு விஷயம்.)

13

போலீஸ் ஸ்டேஷன் வாசலில் வந்து நின்றது ஆட்டோ. சுசித்ரா அவசரமாய் இறங்கி ஆட்டோ சார்ஜைக் கொடுத்துவிட்டு, ஸ்டேஷனுக்குள் நுழைந்தாள். வாசலில் இருந்த கான்ஸ்டபிள் ஏதோ கேட்க, பதிலளித்துவிட்டு உள்ளே போனாள்.



நேர் எதிர் மேஜையை ஒட்டிய இருக்கையில் நரேந்தர் சிங்கும், பல்பீரும் தெரிந்தார்கள். ஏதோ ஃபைல்களைப் புரட்டி குறிப்புகளை எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

உள்ளே வருகிற சுசித்ராவைப் பார்த்ததும் சட்டென புருவம் சுருக்கினார்கள்.

''என்ன விஷயம் சுசித்ரா? இந்த ராத்திரி நேரத்துல இங்கே வந்திருக்கீங்க?''

சுசித்ரா கையிலிருந்த தன் பட்டாம்பூச்சி ஷேப்பில் இருந்த, குரோஷா ஒயரில் பின்னப்பட்ட ஹேண்ட் பேக்கை மேஜை மேல் வைத்தபடியே பேசினாள்.

''இன்ஸ்பெக்டர், எனக்கு ஒரு நபர் மேலே சந்தேகம் வந்திருக்கு.''

நிமிர்ந்தார்கள். ''இஸிட்? யார் அது?''

''நவீனா...''

''நவீனாவா? யாரது?''

''என்கூட வேலை செய்யற நர்ஸ்!''

''அவமேல உங்களுக்குச் சந்தேகம் எப்படி வந்தது?''

''இன்னிக்கு எதேச்சையா நவீனா வீட்டுக்குப் போக நேர்ந்தது இன்ஸ்பெக்டர். அவகூடப் பேசிட்டிருந்தேன். நவீனா டிரெஸ்ஸிங் டேபிள்ல உக்கார்ந்து டிரெஸ் பண்ணிட்டு இருந்தா. பொட்டு எடுக்கறதுக்காக மேஜை டிராயரை இழுத்தா. அப்போ உள்ளே மேக்கப் சாமானுக்கு மத்தியில் வேறு ஒரு பொருளும் இருக்கிறதைப் பார்த்தேன்...''

''என்னது?''

''ஷூ லேஸ் இருந்தது. பொதுவா ஆம்பளைங்க உபயோகப்படுத்தற தடிமனான ஷூ லேஸ் புதுசா வாங்கி வச்சிருந்தது. ஆம்பளைங்களே இல்லாத அந்த வீட்ல அதனோட உபயோகம் என்னன்னு எனக்கு மனசுல நெருடலா இருந்தது. வீட்டைப் பார்க்கறேன்னு அவகிட்டே சொல்லிட்டு, வீடு பூராவும் அலசினேன். உள் அறையில் ஒரு மர பெஞ்சுக்குக் கீழே பழுப்பு நிற லெதர் ஷூ ஒரு ஜோடி. கோயில் மலைல என்னைத் தாக்க வந்தப்போ அந்த சர்தார்ஜி இதே மாதிரி ஷூ தான் போட்டிருந்தான்...''

''அவங்க வீட்ல உள்ள ஆண்கள் யாராவது அதை உபயோகிக்கலாம் இல்லையா?''

''இல்லே சார். அவ தனியாத் தான் இருக்கா. அவளைத் தவிர வீட்டில் வேற ஆம்பளைங்க யாரும் இல்லை. நான் துருவித் துருவி கேட்டுப் பார்த்துட்டேன். வெளியே இருந்து வரக்கூடிய ஆண்களும் யாரும் இல்லை.''

''உங்களுக்கு இந்தச் சந்தேகம் வந்ததை வெளியே காட்டிகிட்டீங்களா?''

''இல்லே சார். நான் எப்பவும் போலவே பேசிட்டிருந்துட்டு நேரா இங்கே வந்துட்டேன்.''

''குட். அந்த நவீனாவை நாங்க அலசிடறோம் சுசித்ரா. நீங்க வீட்டுக்குப் போங்க. ஜீப் வெளியே போயிருக்கு. வந்ததும் நாங்க நவீனாவுடைய வீட்டுக்குப் போய் என்கொயரியை ஆரம்பிச்சுடறோம். நவீனாவோட வீட்டு அட்ரஸைக் குடுங்க.''

சுசித்ரா அட்ரஸை எழுதிக் கொடுத்து விட்டு எழுந்தாள்.

''நான் வர்றேன் இன்ஸ்பெக்டர்.''

போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வெளியே வந்தாள் சுசித்ரா.

ரோட்டைக் கிராஸ் செய்தாள். கெட்டியான பனிப் போர்வைக்கு மத்தியில் நிலா சிரமமாய் வெளிச்சத்தை விநியோகம் பண்ணிக் கொண்டிருந்தது.

எதிர்ப்பக்கமிருந்த சின்ன சந்தில் நுழைந்து நடந்தாள். சந்தைக் கடந்து போனால் 47ஆவது செக்டாருக்குப் புறப்பட்டுப் போகிற பஸ் டெர்மினஸ் வரும்.

சந்தின் முடிவு வரை கொஞ்சம் இருட்டாய்த் தெரிய நடையை எட்டிப் போட்டாள் சுசித்ரா. எழுபது சதவிகித தூரம் கடந்திருந்தபோது சட்டென நின்றாள்.

எதிரே யாரோ மசமசப்பாய்த் தெரிந்தார்கள் வழிமறித்து நின்றிருந்தார்கள்.

உடம்பு பூராவும் குப்பென்று வியர்த்துப் போய் உற்றுப் பார்த்தாள் சுசித்ரா. நெஞ்சத்தின் மையத்தில் ஓர் அதிர்ச்சி அலையடித்தது.



கைகளை மார்புக்குக் குறுக்கே கட்டி, நவீனா நின்றிருந்தாள்.

''ந... நவீனா...?''

''நவீனாதான்! போலீஸ் கிட்டே எல்லாத்தையும் சொல்லிட்டே போலிருக்கே சுசித்ரா?''

சுசித்ரா குழறினாள். ''வ... வந்து... நீ... இங்கே?''

''என்னோட வீட்டுக்கு வந்து, பார்ட்டிக்குப் புறப்பட்ட நிமிஷத்திலேர்ந்து 'உங்க வீட்ல ஆம்பளைங்க யாராவது இருக்காங்களா, இருக்காங்களா'ன்னு என்கிட்டே கேட்டுட்டே இருந்தே. எனக்குச் சந்தேகமாயிடுச்சு. என்மேல சந்தேகப்படற மாதிரி நீ எதையோ என் வீட்டிலே பார்த்துட்டேன்னு தோணிச்சு. ஆட்டோவில் வீட்டுக்குப் புறப்பட்ட உன்னை நான் இன்னொரு ஆட்டோவில் ஃபாலோ பண்ணினேன். என் சந்தேகம் சரியாயிடுச்சு. நீ வீட்டுக்குப் போகாம போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிருக்கே!''

''ந... நவீனா... நீ... நீ... நீ...?''

''நான் எவ்வளவோ ஜாக்கிரதையாய் இருந்தும் நீ என் வீட்ல எதையோ பார்த்து எம்மேலே சந்தேகப்பட்டு போலீஸ்லேயும் சொல்லிட்டே. போலீஸ் இனிமே என்னை விடமாட்டாங்க. துருவிடுவாங்க. நான் போலீஸ் கைக்குக் கிடைக்கறதுக்கு முன்னாடி உன்னோட கணக்கையும் முடிச்சுடலாம்னு பார்க்கறேன்...''

''நவீனா... நான்... நான்...'' என்று ஏதோ சொல்கிற மாதிரி பாவ்லா பண்ணின சுசித்ரா திடீரென திரும்பி சந்தின் ஆரம்பப் பக்கத்தை நோக்கி ஓட ஆரம்பித்தாள். நவீனா அவளைத் துரத்தாமல் புன்னகையோடு பார்த்தாள்.

''சுசித்ரா! நீ என்கிட்டேயிருந்து தப்பிக்க முடியாது...''

மூச்சுவாங்க சந்தின் மறுபக்கம் நோக்கி ஓடின சுசித்ரா கிட்டத்தட்ட சந்தின் அடுத்த பக்கத்தை தொட்டிருந்தபோது -

'தட்' என எதன்மேலோ மோதினாள்.

சுதாரித்து நின்று நிமிர்ந்தவள் மெல்ல பின்வாங்கினாள்.

எதிரே -ராஜீவ்!

வேகவேகமாய் நடந்து வந்த நவீனா, ராஜீவிடம் சொன்னாள்.

''ராஜீவ்! அவளைச் சுருட்டுங்க. ஒர்க்ஷாப்புக்குக் கொண்டு போயிடலாம்.''

ராஜீவ் தயாராக வைத்திருந்த கர்ச்சீப்பினால் சுசித்ராவின் முகத்தைக் கப்பென்று பொத்தினான். சுசித்ரா மூச்சுத் திணறினாள். இரண்டு நிமிஷம். மயக்கமாகி அவன் கைகளில் துவண்டாள்.

சந்தின் முடிவில் நிறுத்தி வைத்திருந்த கார் ஒன்றின் பின்சீட்டில் சுசித்ராவைத் தள்ளிவிட்டு, இரண்டு பேரும் முன் இருக்கைக்கு வந்தார்கள். ராஜீவ் ஸ்டியரிங்கைக் கையாள ஆரம்பித்தான்.

''ஸார், ஜீப் வந்தாச்சு...'' பல்பீர் சொல்ல, நரேந்தர் சிங் பார்த்துக் கொண்டிருந்த ஃபைலை ஓரமாய் ஒதுக்கி வைத்துவிட்டு தொப்பியை எடுத்துத் தலைக்குக் கொடுத்துக் கொண்டே எழுந்தார்.

''பல்பீர்...''

''ஸார்...''

''அந்தப் பொண்ணு நவீனா. ரெஜிதாவுக்கு ரொம்பவும் நெருங்கின சினேகிதம்னு பலர் சொல்லி கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனா, அவ இருக்கிற பக்கம் நம்ம சந்தேகப் பறவை பறக்கவே இல்லை. இப்போ போய் அவளைச் சந்தேகத்தோட அடிப்படையில அரெஸ்ட் பண்ணிகிட்டு வந்துடலாமா?''

''தகுந்த ஆதாரமில்லாம சந்தேகக் கேஸ்ல நாம அரெஸ்ட் பண்ண முடியாதே ஸார்.''

''சரி, பரவாயில்லே. மொதல்ல அவ வீட்டைத் துடைச்சுப் பார்ப்போம். ஏதாவது ஏசகுபிசகா தடயம் மாட்டினா, ஸ்டேஷன் கொண்டாந்துடலாம்.''

ஜீப்புக்கு வந்தார்கள். ஜீப்பில் கால் பாவ முயன்ற வினாடி ஜீப் டிரைவர் குறுக்கிட்டார்.

''சார்...''

''என்ன... மான்சிங்?''



''டயர் ரைட் சைட் வீல் எந்த நிமிஷமும் பொத்துக்கிடும் சார்... ஸ்டெப்னியும் கண்டிஷன்ல இல்லை.''

''சரி, போற வழியில பாத்துக்கிடலாம். ஜீப்பை எடு...''

பல்பீர் குறுக்கிட்டார். ''ஸார்... முப்பத்திரெண்டாவது செக்டார்ல ராஜீவ் ஒர்க்ஷாப் இருக்கு. நாம போற வழிதான். இறங்கி டயரை வல்கனைசிங் பண்ணிட்டுப் போயிடலாம்.''

''தட்ஸ் குட். ஜீப்பை அங்கே ஒரு நிமிஷம் நிறுத்து மான்சிங்...''

''எஸ்... சார்...''

ஜீப்பில் அவர்கள் தாவி ஏறியதும் மான்சிங் இக்னிஷியனை உசுப்பினார்.

ஜீப் நகர்ந்தது.

கார் முப்பபத்திரண்டாவது செக்டாரைத் தொட்டு ராஜீவின் ஆட்டோமொபைல் ஒர்க்ஷாப்புக்குள் நுழைந்தது. ஒரே ஒரு மெக்கானிக் மட்டும் ஸ்கூட்டரின் கீழே உட்கார்ந்து கொண்டு எதையோ தட்டிக் கொண்டிருந்தான்.

ராஜீவ் காரை விட்டு இறங்கி அந்த மெக்கானிக்கைக் கூப்பிட்டான்.

''ஏய், சங்கர்.''

''ஹாங்ஜி...?''

''காம் பந்த்கர் கர் ஜாவோ...''

''டீக்ஹை ஜி.''

அவன் வேலையை நிறுத்திவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டான். ஒர்க்ஷாப்பை விட்டு வெளியேறினதும் ராஜீவ், நவீனாவிடம் திரும்பினான்.

''நவீனா... இவளை முதல்ல ரூமுக்குள் கொண்டு போயிடணும்.''

சுசித்ராவைக் காரினின்றும் இறக்கி ஒர்க்ஷாப்பின் பின்னால் இருந்த மரத்தடுப்புக்கு கொண்டு போனார்கள்.

''நவீனா... நீ இவளை ஃபாலோ பண்ணினது ரொம்ப

உத்தமமான காரியம். எனக்குத் தகவல் தந்தது அதைவிட நல்ல காரியம். இப்ப என்ன செய்யலாம்?''

''முதல்ல இவன் கதையை முடிக்கணும்.''

''அப்புறம்?''

''நாம ரெண்டு பேரும் இந்த சிட்டியை விட்டு வெளியே போய் எங்காவது தலைமறைவாயிடணும்...''

''போலீசை நாம் சமாளிக்க முடியாதா நவீனா?''

''கஷ்டம் ராஜீவ். இந்நேரம் போலீஸ் ஜீப்ல என்னோட வீட்டுக்குப் போயிருப்பாங்க.''

நவீனா சொல்லி முடித்த அதே வினாடி-

ஒர்க்ஷாப்புக்கு வெளியே ஏதோ சத்தம் கேட்டது. இருவரும் புருவங்களை உயர்த்தினார்கள்.

நவீனா ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள்.

நெஞ்சுக்குள் அதிர்ச்சிக் கொத்து செருக, ராஜீவிடம் திரும்பினாள்.

''ராஜீவ், போலீஸ் ஜீப் இங்கே வந்திருக்கு?''

ராஜீவ் திடுக்கிட்டான்.

''நீ சுசித்ராவோட இந்த ரூமுக்குள்ளேயே இரு. நான் அவங்களைப் பேசி அனுப்பிச்சுட்டு வர்றேன்.''

ராஜீவ் அறையை விட்டு வெளியே வந்தான். ஜீப்பினின்றும் இறங்கி அவனை நோக்கி வந்தார்கள் நரேந்தர் சிங்கும், பல்பீரும்.

முகத்தை இயல்பாக்கிக் கொண்டு கேட்டான் ராஜீவ்.

''என்ன சார்... இந்த நேரத்தில இந்தப் பக்கம் வந்திருக்கீங்க?''

நரேந்தர் சிங் புன்னகைத்தார். ''கேஸ் விஷயமா ஒரு துப்பு கிடைச்சது. கிளம்பினோம். டயர் ரைட் சைட் வீல் ரொம்ப வீக்கா தெரிஞ்சது. ஸ்டெப்னியும் கண்டிஷன்ல இல்லை. ஸ்டெப்னியை வல்கனைஸ் பண்ணி வைக்க முடியுமா?''

ராஜீவுக்குள் நிம்மதி பரவியது.

''ஸாரி இன்ஸ்பெக்டர். இப்ப இங்கே ஆட்கள் யாரும் இல்லையே? நாளைக்குக் காலைல தான் முடியும்.



வேணுமானா டயரைக் குடுத்துட்டுப் போங்க. நான் வல்கனைஸ் பண்ணி ஸ்டேஷனுக்குக் குடுத்து அனுப்பிச்சுடறேன்.''

''வேண்டாம்... வேற ஒர்க்ஷாப்ல சரி பண்ணிக்கறோம்...'' நின்றிருந்த காரைக் கடந்து ஜீப்புக்குப் போனார்கள்.

ஜீப் புகையை வெளியேற்றிக் கொண்டு நகர்ந்து போனதும், ராஜீவ் நிம்மதிப் பெருமூச்சு ஒன்றை விட்டுவிட்டு அறைக்குத் திரும்பி வந்தான்.

நவீனா கேட்டாள்: ''அவங்க போயிட்டாங்களா?''

''ம். டயர் வல்கனைஸ் பண்றதுக்காக வந்திருக்காங்க. மெக்கானிக் யாருமில்லைன்னு சொல்லித் திருப்பி அனுப்பிட்டேன்.''

''நான் பயந்துட்டேன்!''

''அவங்க அவ்வளவு சீக்கிரமா நம்மை நெருங்க முடியாது...''

''சரி, இவனோட சாவுக்கு எப்படி பாஸ்போர்ட் தரலாம்? கத்திக் குத்தா... நைலான் கயிறா?''

''கத்தி வேண்டாம். ரத்தத்தை சுத்தப்படுத்த வேண்டியிருக்கும். அந்த ரப்பர் டியூப் போதும். கழுத்துல மாலையா போட்டு நீ ஒரு முனையைப் பிடிக்க, நான் ஒரு முனையைப் பிடிச்சு இழுக்க, சுசித்ரா சுத்தமாயிடுவா...''

ராஜீவ் ஒர்க்ஷாப்பின் ஒதுக்குப்புறமாய் போய் நீளமான ஒரு ரப்பர் டியூபைக் கொண்டு வந்தான்.

அரை மயக்கமாய்க் கிடந்த சுசித்ராவின் கழுத்தில் அதை எட்டு மாதிரி போட்டான்.

''நவீனா... இந்தா... முனையைப் பிடி...'' அவள் பிடித்தாள்.

ராஜீவும் ஒரு முனையைப் பற்றிக் கொண்டான். உள்ளங்கையில் ரப்பர் குழாயின் மீதியை இறுக்கமாய்ச் சுற்றிக் கொண்டு, ''ம்... இழு... நவீனா...''

நவீனா இழுத்தாள்.

அவள் இழுத்துக் கொண்டிருக்கும் போதே 'த்தட்'டென்று ஒரு சத்தம். ராஜீவ் எகிறிப் போய்

சுவரோரமாய் விழ, நவீனா திரும்பிப் பார்த்தாள்.

அறை வாசலில்-

இன்ஸ்பெக்டர் நரேந்தர் சிங்கும், பல்பீர் சிங்கும் நின்றிருந்தார்கள்.

''ராஜீவ்! ஜீப் டயரை நிஜமாகவே வல்கனைஸ் பண்ணத்தான் உன்னோட ஒர்க்ஷாப்புக்கு வந்தோம். ஆனா உன்னோட துரதிர்ஷ்டம் எங்க பார்வை வெளியே நிறுத்தியிருந்த காருக்குள்ளே -பின்சீட்ல இருந்த சுசித்ராவோட பட்டாம்பூச்சி கைப்பை மேல் பட்டது. எங்களுக்கு ஆச்சரியம்.

அரைமணி நேரத்துக்கு முன்னாடிதான் சுசித்ரா நவீனாவைப் பத்தி சொல்றதுக்காக ஸ்டேஷன் வந்தாங்க. அந்தப் பையை உங்க கார்ல பார்த்ததும் எங்களுக்குச் சந்தேகம் அதிகமாயிடுச்சு. இருந்தாலும் உங்களை விட்டுப் பிடிக்கத் தான் எதையுமே கண்டுகொள்ளாத மாதிரி ஜீப்பை எடுத்துட்டுப் போனோம். ஜீப்பைத் தெருமுனையில் நிறுத்திவிட்டு, பூட்ஸைக் கழற்றி வெச்சுட்டு பின்பக்கமா வந்தோம்...''

ராஜீவ் வியர்த்துப் போய் சுற்றுமுற்றும் பார்த்தான். பல்பீர் சிரித்தார்.

''தப்பிக்கிற முயற்சியைக் கைவிட்டுட்டு எதுக்காக இந்தக் கொலைகள்னு சொன்னா எங்களுக்கு உபயோகமா இருக்கும். சொல்றியா?''

ராஜீவ் மௌனிக்க-

பல்பீர் வேகமாய்ப் போய் அவன் ஷர்ட் காலரைப் பற்றி கசக்கி, முகத்தில் அடிப்பதற்காகக் கையை உயர்த்தினார். பின்பக்கம் நவீனாவின் குரல் கேட்டது.

''ஸார்... அவரை அடிக்காதீங்க. அந்தக் கொலைகளைப் பண்ணினது அவரில்லை. நான்தான். அவர் என்னோட காதலர். அவ்வளவு தான்...''

பல்பீர் திரும்பினார். நவீனா தொடர்ந்தாள்.

''சரவணனையும் பிரகதீஷையும் கொலை செஞ்சது நான்தான் சார். அந்த ரெண்டு மிருகங்களும் ஜோடியாத் தான் பெண்களை வேட்டையாடுவாங்க. எங்க ஹாஸ்பிடல்ல ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி வேலை



பார்த்துட்டிருந்த 'சரயு'ங்கிற நர்ஸைப் பாழ்பண்ணி அவளோட வாழ்க்கையை நாசமாக்கினாங்க...

அவ ஊரைவிட்டே போனதும் என்னோட நெருங்கின தோழி ரெஜிதாவை வட்டம் போட்டாங்க. சரவணன் அவளைக் காதலிக்கிற மாதிரி நடிச்சான். நான் எவ்வளவோ வார்ன் பண்ணியும் ரெஜிதாவும் கேட்கலை. பிறகு ஒரு நாள் அந்த ரெண்டு மிருகங்களும் தன்னை ஓரிடத்துக்கு கூட்டிட்டுப் போய் பாழ் பண்ணினதை என்கிட்டே சொன்னாள். அதற்கடுத்த நாள் தற்கொலையும் பண்ணிக்கிட்டா. அவ மரணத்தினாலே எனக்குத் துக்கம் வரலை இன்ஸ்பெக்டர். ஆத்திரம் தான் வந்தது.

சரவணனையும், பிரகதீஷையும் தீர்த்துக்கட்ட நினைச்சு சர்தார்ஜியா மாறினேன். ராஜீவுக்கும் இந்தக் கொலைகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. பிரகதீஷைப் பழிவாங்கினதும், நானாகவே போய் அவரிடம் இந்தக் கொலைகளைப் பத்திச் சொன்னேன். போலீஸ் இந்தக் கொலைகளில் விசாரணை நடத்தி ஓய்ந்து போனதும் ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்க இருந்தோம். ஆனா, சுசித்ரா நடுவில வந்து மூக்கை நீட்டிட்டா... பின்னாடி இவளால சிக்கல் வரும்னு யோசிச்சுதான் மலைக்கோயில்ல இவளைத் தீர்த்துக் கட்ட முயற்சி பண்ணினேன். ஆனா தப்பிச்சுட்டா...''

''தமிழ்நாட்டுப் பெண்களுக்கு புத்திசாலித்தனம் அதிகம்னு சும்மாவா சொன்னாங்க...?''

சொல்லிவிட்டுச் சிரித்தார் பல்பீர்.

அந்த சிரிப்புச் சத்தத்தில் சுசித்ராவின் மயக்கம் கலைந்து கொண்டிருந்தது.

*(முற்றும்)*

ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷனில்
அச்சிட்டு (பிரஸ்) வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர்
ஜி. அசோகன். முகவரி: 352, திருவல்லிக்கேணி
நெடுஞ்சாலை, சென்னை - 5.
ஆசிரியர்: ஜி.அசோகன். தொலைபேசி: 28544294